வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972

(2002ம் ஆண்டு வரை திருத்தியபடி)

தமிழாக்கம்
கே.பி.எம்.பெருமாள், இ.வ.ப.,
மற்றும்
ஜி.சந்திரசேகரன், B.Sc.,







TNFA - CBE
Centenary Library
10415
Ref.

தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகம்
(Tamil Nadu Forest Academy)
கோயம்புத்தூர் - 2.

2006

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972

(2002ம ஆண்டு வரை திருத்தியபடி)

தமிழாக்கம் செய்தோர்

கே.பி.எம்.பெருமாள், இ.வ.ப.,

மற்றும்

ஜி.சந்திரசேகரன், B.Sc.,
வனச்சரகர் மற்றும் உதவி பயிற்றுநர்

தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகம்
(Tamil Nadu Forest Academy)
கோயம்புத்தூர் - 2.

2006

தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகத்தில் பயிற்சி
பெறுவோருக்காக தமிழாக்கம் செய்யப்பட்டது.

முதல் பதிப்பு - மார்ச் 2005

TNFA - CBE
Centenary Library
10415
Ref.

அணிந்துரை

முனைவர். சுக்தேவ், இ.வ.ப.,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,
மற்றும் தலைமை வன உயிரினக்
காப்பாளர்.

1, ஜுனிஸ் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை – 600 015.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலையினை அடைய தமிழக அரசு பெரும் முயற்சிகள் எடுத்து வருகிறது. அரசு அலுவலகங்கள், கீழமை நீதிமன்றங்கள் என எங்கும் தமிழையே முதன்மையாகக் கையாள வேண்டிய இந்நிலையில் அரசின் விதிமுறைகள் சட்டங்கள் போன்றவை இன்றளவும் ஆங்கிலத்திலேயே இருந்து வருவதால் தமிழையே பெரும் பாலும் கையாளும் பணியாளர்களால் ஆங்கிலத்தில் உள்ள விதிமுறைகளையும் சட்டங்களையும் சரிவர படித்துணர முடியாத நிலையே இன்றளவும் உள்ளது. குறிப்பாக வனத்துறையில் தமிழ்நாடு வனச்சட்டம் - 1882 மற்றும் வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் - 1972 ஆகியவை இரு முக்கியமான சட்டங்களாக உள்ளன. தமிழ்நாடு வனச்சட்டத்தின் தமிழ் வடிவம் பல ஆண்டுகளுக்கு முன் அரசால் வெளியிடப்பட்டு, தற்சமயம் அதன் பிரதிகள் கிடைக்கப் பெறாத நிலை உள்ளது. தமிழ்நாடு வனச் சட்டத்தின் தமிழ் வடிவம் வெளியிடப்பட்ட பின்பு பல முக்கியமான திருத்தங்கள் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இந்தத் திருத்தங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு வனச்சட்டத்தின் தமிழ் வடிவம் கொண்டு வரப்படாத நிலை உள்ளது. வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் - 1972 அமலுக்கு வந்து இதுநாள்வரை ஐந்து முறை திருத்தங்கள் செய்யப்பட்டு விட்டது. இதனுடைய தமிழ் வடிவமும் இதுவரை வெளிவரவில்லை. இந்நிலையில் தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகத்தின் தலைவர் திரு.கே.பி.எம்.பெருமாள், இ.வ.ப., வும் அப்பயிற்சி கழகத்தில் உதவி பயிற்றுநராக பணியாற்றி வரும் திரு. ஜி. சந்திரசேகரன், வனச்சரகரும் சேர்ந்து வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் - 1972-ஐ தமிழில் மொழி பெயர்த்து தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகத்தில் பயிற்சி பெற வரும் களப் பணியாளர்கள் பயன்பாட்டிற்காகப் புத்தக வடிவில் வெளிக் கொணர்ந்துள்ளனர்.

திரு. கே.பி.எம். பெருமாள், இ.வ.ப., சட்டக் கல்வி பயின்று பட்டம் பெற்றுள்ளவர். தனது 27 வருட கால வனத்துறை பணியில் வனத்துறை சட்டங்கள், விதிமுறைகள் ஆகியவற்றை ஆழ்ந்து படித்துணர்ந்தவர். திரு. ஜி. சந்திரசேகரன், வனச்சரகர் வனத்துறை வழக்குகளை குறிப்பாக சந்தன மரக் கடத்தல் வழக்குகளை நீதிமன்றங்களில் சிறப்பாக நடத்தி வெற்றி பெற்றவர். மற்றும் இவர் ஏழு ஆண்டு காலமாக தென்னக வனச்சரகர்கள் கல்லூரியில் (தற்போது தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகமாச பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது) வனச்சட்டங்களைப் பற்றிப் பாடம் நடத்தி வருபவர். இத்தகைய தகுதியும் அனுபவமும் வாய்ந்த இரு அலுவலர்கள் வன உயிரின (பாதுகாப்பு) சட்டத்தைக் கல்லூரியில் பயிற்சி பெற வருபவர்களுக்காகத் தமிழில் மொழி பெயர்த்துள்ளது மிகவும் பாராட்டுதற்குரியது. சட்டத்தின் இந்த தமிழ் வடிவம் பயிற்சியாளர்களுக்காகக் கொண்டு வரப்பட்டது எனக் கூறப்பட்டாலும் இது வனத்துறையில் பணிபுரியும் அனைத்து நிலை பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இது போன்று வனச்சட்டங்கள் அனைத்தும் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டால் அனைவருக்கும் பெரும் பயனுள்ளதாக அமையும். இத்தகைய முயற்சிகள் தொடர எனது வாழ்த்துக்கள்.

சுக்தேவ்

25.03.2005

முனைவர். சுக்தேவ், இ.வ.ப.,

முன்னுரை

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 தமிழ்நாட்டில் 1975 முதல் செயல்முறைக்கு கொண்டு வரப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவு பெற உள்ளது. இந்த 30 ஆண்டுகளில் ஐந்து முறை இந்தச் சட்டம் மத்திய அரசால் திருத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் வகை முறைகளை அமுல் படுத்த வேண்டிய வனத்துறையைச் சேர்ந்த களப் பணியாளர்கள் இது போன்ற குறுகிய கால இடைவெளிகளில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களினால் இந்தச் சட்டத்தின் வகை முறைகளை சரியாகப் புரிந்துணர்ந்து கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். மேலும் சட்டம் ஆங்கில மொழியில் இருப்பதால் களப்பணியாளர்களுக்கு இந்தச் சட்டத்தைப் படித்துச் சரியாக புரிந்து கொள்வது சிரமமாக உள்ளது. குறிப்பாக 2002-ம் வருடத்திய திருத்திய சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள அத்தியாயம் VI-A ன் வகை முறைகள் வரையப்பட்டுள்ள விதம் களப்பணியாளர்களால் எளிதாகப் புரிந்து கொள்ள முடியாத அளவிற்குக் கடினமான ஆங்கிலச் சட்டச் சொற்களைக் கொண்டுள்ளது. இதைப்பற்றித் தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகம் நடத்தும் பல்வேறு பயிற்சிகளில் கலந்து கொள்ள வரும் பணியாளர்களும், அலுவலர்களும் இந்தச் சட்டத்தைத் தமிழில் மொழி பெயர்த்து கொடுத்தால் அதைப் படித்துப் புரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளதை கருத்தில் கொண்டு இந்தச் சட்டத்தைத் தமிழில் மொழி பெயர்த்து கொடுக்கும் ஒரு பணியினை நானும் என்னுடன் தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகத்தில் உதவி ப்யிற்றுநராக (Assistant Lecturer) பணியாற்றி வரும் திரு.ஜி.சந்திரசேகரன், வனச்சரகரும் மேற்கொண்டதன் விளைவே இந்த தமிழ் வடிவம்.

பெரும்பாலான ஆங்கிலச் சட்டச் சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள "சட்டத் தமிழ் அகராதி" மற்றும் திரு. வீ. சந்திரன், M.A., M.L. எழுதி ராஜகுமாரி பப்ளிகேஷன், சென்னை-58 வெளியிட்டுள்ள "சட்ட நிருவாக அருஞ்சொல் திரட்டு" என்ற நூல் மற்றும் பேராசிரியர் ஆ. சந்திரசேகரன், M.A., எழுதி சி. சீதாராமன் அண்டு கோ பி. லிட், சென்னை வெளியிட்டுள்ள "சட்ட சொற் களஞ்சியம்" ஆகிய நூல்களிலிருந்து எடுத்துக் கையாளப்பட்டுள்ளது.

வன உயிரின (பாதுகாப்பு) சட்டத்தின் இந்த தமிழ் வடிவம் தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகத்தில் பயிற்சி பெற வரும் களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்கென உருவாக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இது வனத்துறையின் அனைத்து நிலை களப்பணியாளர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் பயனளிப்பதாக அமையும் என நம்புகிறேன். வனம் மற்றும் வன உயிரினங்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களைத் தமிழ் வடிவில் கொண்டு வரும் எங்களது இந்த முதல் முயற்சியில் குறைகள் இருப்பின் அவற்றை சுட்டிக் காட்டி இதை மேலும் செம்மைப்படுத்த ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

கோயம்புத்தூர் — இவண்

22.03.2005

கே.பி.எம். பெருமாள், இ.வ.ப.,
வனப்பாதுகாவலர் (பயிற்சி) மற்றும் தலைவர்,
தமிழ்நாடு வனவியல் பயிற்சி கழகம்

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம்.1972. (2002 வரை திருத்தியபடி)

பொருளடக்கம்

அத்தியாயம் I

பிரிவு　　　　பக்கம்

1. குறுந்தலைப்பு பரப்பு மற்றும் தொடக்கம் 1
2. வரைவுரைகள். 1

அத்தியாயம் II

இந்தச் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட வேண்டிய அல்லது அமைக்கப்பட வேண்டிய அதிகாரிகள், அதிகாரக் குழுக்கள்.

3. இயக்குனர் மற்றும் இதர அலுவலர் நியமனம். 8
4. தலைமை வன உயிரினக் காப்பாளர் மற்றும் இதர அலுவலர்களின் நியமனம். 8
5. ஒப்படைப்பு செய்யும் அதிகாரம் 9

5-A. வன உயிரினத்திற்கான தேசிய வாரியத்தின் அமைப்பு 9

5-B. தேசிய வாரியத்தின் நிலைக்குழு 11

5-C. தேசிய வாரியத்தின் செயல்பாடுகள் 12

6. வன உயிரினத்திற்கான மாநில வாரியம் 12
7. வாரியம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் 14
8. மாநில வன உயிரின வாரியத்தின் கடமைகள் 14

அத்தியாயம் III

வன உயிரினங்களை வேட்டையாடுதல்

9. வேட்டையாடுவதற்குத் தடை 15
10. விலக்கப்பட்டு விட்டது.
11. சில நிகழ்வுகளில் வன விலங்குகளை வேட்டையாட அனுமதி 15
12. சிறப்பு நோக்கங்களுக்கு அனுமதி வழங்குதல் 16

13 - 17 விலக்கப்பட்டு விட்டது.

அத்தியாயம் III – A

குறிப்பிடப்பட்ட தாவரங்களின் பாதுகாப்பு

17-A. குறிப்பிட்ட தாவரத்தை கிள்ளி எடுத்தல், வேருடன் பிடுங்கல் போன்றவற்றிற்குத் தடை 18

17-B. சிறப்பு தேவைகளுக்காக உரிமம் வழங்குதல். 18

17-C. உரிமம் பெறாமல் குறிப்பிடப்பட்ட தாவரங்களை பயிர் செய்யத் தடை 19

17-D. உரிமம் இல்லாமல் குறிப்பிடப்பட்ட தாவரங்கள் சம்பந்தமான வியாபாரம் செய்யத் தடை 19

17-E. இருப்புக் கணக்கு அறிவிக்கை செய்தல் 20

17-F. உரிமம் பெற்றவர் குறிப்பிடப்பட்ட தாவரங்களை வைத்திருத்தல் போன்றவை. 20

17-G. குறிப்பிடப்பட்ட தாவரங்களை வாங்குதல் (purchase) போன்றவை. 21

17-H. தாவரங்கள் அரசு சொத்து. 21

அத்தியாயம் IV
பாதுகாக்கப்பட்ட பகுதிகள் (Protected Area)
வன உயிரின உய்விடங்கள்

18. வன உயிரின உய்விடத்தைச் சாற்றல் செய்தல் 22
18-A. வன உயிரின உய்விடங்களுக்குப் பாதுகாப்பு 22
18-B. மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம். 23
19. மாவட்ட ஆட்சித் தலைவர் உரிமைகளைத் தீர்மானம் செய்ய வேண்டும். 23
20. உரிமைகள் கோரத் தடை 23
21. மாவட்ட ஆட்சித் தலைவர் பொது அறிவிப்பு 23
22. மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை 24
23. மாவட்ட ஆட்சித் தலைவரின் அதிகாரங்கள் 24
24. உரிமைகளைக் கொண்டடைதல் 24
25. நில எடுப்பு நடவடிக்கைகள் 25
25-A. கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கான காலக்கெடு 26
26. மாவட்ட ஆட்சியரின் அதிகாரங்களை மற்றவருக்கு ஒப்படைத்தல் 26
26-A. ஒரு பகுதியை வன உயிரினஉய்விடமாக சாற்றல் செய்தல் 26
27. வன உயிரின உய்விடத்திற்குள் நுழைவதற்கு கட்டுப்பாடுகள். 27
28. அனுமதிச் சீட்டு வழங்குதல் 29
29. வன உயிரின உய்விடத்தில் அனுமதிச் சீட்டின்றி அழித்தல் முதலானவை தடை செய்யப்படுகிறது. 29
30. தீ ஏற்படுத்துவது தடை செய்யப்படுகிறது. 30
31. வன உயிரின உய்விடத்திற்குள் ஆயுதத்துடன் நுழைவது தடை செய்யப்படுகிறது. 30
32. ஊறு விளைவிக்கும் பொருட்களைப் பயன்படுத்தத் தடை 30
33. வன உயிரின உய்விடங்களின் கட்டுப்பாடு 30
33-A. கால்நடைகளுக்கான நோய் தடுப்பு நடவடிக்கைகள் 31
33-B ஆலோசனைக் குழு 31
34. ஆயுதம் வைத்திருப்போர் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டியது. 32
34-A. நிலஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான அதிகாரம் 32
35. தேசியப் பூங்காக்களைச் சாற்றல் செய்தல் 33
36. விலக்கப்பட்டுவிட்டது.
36-A.பாதுகாப்பு ஒதுக்கு பகுதிகள் அறிவிக்கை மற்றும் மேலாண்மை 35
36-B. பாதுகாப்பு ஒதுக்குப் பகுதி மேலாண்மை குழு 36
36-C. சமுதாய ஒதுக்குப் பகுதிகள் அறிவிக்கை மற்றும் மேலாண்மை 36
36-D சமுதாய ஒதுக்குப் பகுதி மேலாண்மைக் குழு 37
37. விலக்கப்பட்டுவிட்டது.

வன உயிரின உய்விடங்கள் அல்லது தேசியப் பூங்காக்கள் மத்திய அரசால் சாற்றல் செய்தல்

38. வன உயிரின உய்விடங்களையும், தேசியப் பூங்காக்களையும் சாற்றல் செய்வதற்கான மத்திய அரசின் அதிகாரம். 37

அத்தியாயம் IV A

மத்திய மிருகக் காட்சி சாலைகளின் ஆணையம் மற்றும் மிருகக் காட்சி சாலைகள் அங்கீகாரம்

38-A மத்திய மிருகக் காட்சி சாலைகளின் ஆணையத்தின் அமைப்பு 39

38-B. தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவிக் காலம் மற்றும் பணி நிபந்தனைகள் 39

38-C. ஆணையத்தின் பணிகள் 40

38-D. நடைமுறைகளை ஆணையமே ஒழுங்குமுறைப்படுத்துதல் 41

38-E. ஆணையத்திற்கு மானியம் மற்றும் கடன் வழங்குதல் மற்றும் நிதியம் ஏற்படுத்துதல். 42

38-F. ஆண்டு அறிக்கை 43

38-G. ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் நாடாளுமன்றத்தின் முன்பு வைக்கப்பட வேண்டும். 43

38-H. மிருகக் காட்சி சாலைகளின் அங்கீகாரம். 43

38-I.. மிருகக் காட்சி சாலை விலங்குகளைப் பெற்றடைதல் 45

38-J. மிருகக் காட்சி சாலையில் விலங்குகளைச் சீண்டுதல் போன்றவற்றை செய்வதற்குத் தடை. 45

அத்தியாயம் V

வனவிலங்குகள், விலங்குப் பொருட்கள் அல்லது ட்ரோஃபிகளின் வணிகம் அல்லது வர்த்தகம்

39. விலங்குகள் மற்றும் இன்ன பிற அரசின் சொத்தாகும். 46

40. சாற்றல்கள் 47

40-A. சில இனங்களில் சட்ட விலக்களிப்பு 49

41. விசாரணை செய்தல் மற்றும் விவரப் பட்டியல் தயாரித்தல் 49

42. உரிமைச் சான்று 50

43. விலங்குகளின் உரிமை மாற்றம் போன்றவற்றை ஒழுங்குமுறைப் படுத்துதல் 50

44. ட்ரோஃபி மற்றும் விலங்குப் பொருட்கள் சம்பந்தப்பட்ட உரிமம் இல்லாத வணிகத் தொடர்புகள் தடை செய்யப்படுகிறது. 51

45. உரிமங்களை இடை நிறுத்தம் செய்தல் அல்லது ரத்து செய்தல். 53

46. மேல் முறையீடு 54

47. பதிவுருகள் பராமரிப்பு 54

48. உரிமைதாரர்கள் விலங்குகளை வாங்குதல் போன்றவை 55

48-A. வன உயிரினங்களை ஒரு இடம் விட்டு ஒரு இடம் கொண்டு செல்ல கட்டுப்பாடுகள். 56

49. உரிமம் பெற்றவர் தவிர்த்து மற்றவர்கள் பிடியிலிருக்கும் விலங்குகள் போன்றவற்றை வாங்குதல். 56

அத்தியாயம் V - A

வனவிலங்குகள், விலங்குப் பொருட்கள் அல்லது ட்ரோஃபிகளின் வர்த்தகம் அல்லது வணிகம் தடை செய்தல்

49-A. வரைவுரைகள் 57

49-B. பட்டியல் விலங்குகளிலிருந்து பெறப்பட்ட ட்ரோஃபிகள் விலங்குப் பொருட்கள போன்றவற்றின் வணிகத் தொடர்புகள் தடை செய்யப்படுதல் 58

49-C. வணிகர்களின் சாற்றல். 59

அத்தியாயம் VI

குற்றங்களைத் தடுத்தலும் கண்டு பிடித்தலும்

50. பிரவேசித்தல், தேடுதல், கைது செய்தல் மற்றும் காவலில் வைப்பதற்கான அதிகாரம். 62

51. தண்டனைகள் 65

51-A. பிணையத்தில் விடுதலை செய்யும் பொழுது பின்பற்றப்படவேண்டிய நிபந்தனைகள். 67

52. குற்ற முயற்சிகளும் குற்ற உடந்தையும். 67

53. முறையிலா கைப்பற்றுதலுக்குத் தண்டனை 68

54. குற்றங்களைச் சமரசமாக தீர்த்துக் கொள்ளும் அதிகாரம். 68

55. குற்றங்களைப் புலன் கொள்ளல் 69

56. மற்ற சட்டங்களின் செல்லாற்றத்திற்கு தடையில்லை. 69

57. சில வழங்குகளில் துணிபு கொள்ளுதல் 70

58. நிறுவனங்கள் செய்யும் குற்றங்கள். 70

அத்தியாயம் VI – A

சட்ட முரணான வேட்டையாடுதல் மற்றும் வணிகம் மூலம் பெற்ற சொத்துக்களை தண்ட இழப்பாக பறிமுதல் செய்தல்.

58-A. பொருந்துகை 72

58-B. வரைவுரைகள் 72

58-C. சட்டத்திற்கு முரணாகப் பெற்றடைந்த சொத்துக்களை வைத்திருத்தலை தடை செய்தல் 76

58-D. தக்க அதிகாரி 76

58-E. சட்டத்திற்கு முரணாகப் பெற்றடைந்த சொத்துக்களை அடையாளம் காணல் 76

58-F. சட்டத்திற்கு முரணாகப் பெற்றடைந்த சொத்துக்களை கைப்பற்றுதல் அல்லது முடக்கி வைத்தல். 77

58-G. இந்த அத்தியாயத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் மேலாண்மை. 78

58-H. சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கான அறிவிப்பு 79

58-I. சில இனங்களில் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் 79

58-J. மெய்ப்பிக்கும் பாடு 80

58-K. பறிமுதலுக்கு பதிலாக அபராதம் 81

58-L. சில பொறுப்புரிமை அமைப்புச் சொத்துக்கள் சம்பந்தமான நெறிமுறைகள் 81

58-M. சில சொத்து மாற்றங்கள் முற்றிலும் செல்லாததாகும். 82

58-N. மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் 83

58-O. மேல் முறையீடுகள் 83

58-P. விவரணத்தில் உள்ள பிழைக்காக அறிவிப்பு அல்லது ,ஆணை செல்லாததாகாது. 83

58-Q. ஆள்வரைத் தடை அல்லது அதிகார வரம்புத் தடை 84

58-R. தக்க அதிகாரிக்கும் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கும் உள்ள உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள். 84

58-S. தக்க அதிகாரிக்குத் தகவல் அளித்தல் 85

58-T. குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் ஆட்சியாளருக்கும் தக்க அதிகரிக்கும் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கும் உதவ வேண்டும். 85

58-U. உடமையை எடுத்துக் கொள்ளும் அதிகாரம் 85

58-V. பிழைகளைச் சரிசெய்தல் 86

58-W. மற்றச் சட்டங்களின் கீழ் எடுக்கப்படும் முடிவுகள் இந்த அத்தியாயத்தின் கீழான நடவடிக்கைகளின் இறுதியான முடிவாகாது. 86

58-X. அறிவிப்புகளையும் ஆணைகளையும் சார்பு செய்தல். 87

58-Y. இந்த அத்தியாயத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட சொத்தினைப் பெற்றடைந்தால் தண்டனை. 87

அத்தியாயம் VII

பல்பொருள்

59. அலுவலர்கள் பொது ஊழியர்கள் 88

60. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு 88

60-A. வெகுமதி 88

60-B. மாநில அரசினால் வெகுமதி வழங்கப்படல் 89

61. பட்டியலில் உள்ள பதிவுகளை மாற்றும் அதிகாரம் 89

62. சில விலங்குகள் தீங்கிழைப்பவை எனச் சாற்றுதல். 89

63. மத்திய அரசின் விதிகள் இயற்றும் அதிகாரம். 90

64. மாநில அரசின் விதிகள் இயற்றும் அதிகாரம். 91

65. பழங்குடி மக்களின் உரிமைப் பாதுகாப்பு 93

66. சட்ட நீக்கமும் விலக்கலும். 93

பட்டியல் I 96

பட்டியல் II 108

பட்டியல் III 117

பட்டியல் IV 118

பட்டியல் V 124

பட்டியல் VI 124

இணைப்பு

அரசு அறிவிக்கை

49-B. [illegible]

[illegible]

58-M. [illegible]

58-N. [illegible] 43

58-O. [illegible] 45

அத்தியாயம் - 1

முதனிலை (Preliminary)

1. குறுந்தலைப்ப, பரப்பு மற்றும் தொடக்கம் (short title / extent and commencement).

1. இந்தச் சட்டம் வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 என்றழைக்கப்படும்.
2. இந்தச் சட்டம் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர மொத்த இந்தியாவிற்கும் பொருந்தும்.
3. இந்தச் சட்டம் பொருந்துகிற ஒரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில், மத்திய அரசு அறிவிக்கையின் மூலம் நிர்ணயிக்கப்படும் தேதியிலிருந்து இந்தச் சட்டம் அமலுக்கு வரும். இந்தச் சட்டத்தின் வெவ்வேறு ஷரத்துகளுக்கு வெவ்வேறு தேதிகளையோ அல்லது வெவ்வேறு மாநிலங்களுக்கு அல்லது யூனியன் பிரதேசங்களுக்கு வெவ்வேறு தேதிகளையோ நிர்ணயம் செய்யலாம்.

2. வரைவுரைகள் (Definitions)

இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி (unless the context otherwise require).

1. **விலங்கு (animal)** என்பது பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன, நீர்நில வாழ்வன, மீன்கள், மற்ற முதுகு நாணுள்ளவை மற்றும் முதுகு நாணற்றவைகளையும் அவைகளின் இளசுகள் மற்றும் முட்டைகளையும் உள்ளடக்கியதாகும்.
2. **"விலங்குப் பொருட்கள்" (animal article)** : என்பது வெர்மின் அல்லாத பிடியிலிருக்கும் விலங்குகள் (captive animals) அல்லது வனவிலங்குகளி (Wild animals) லிருந்து செய்யப்பட்ட பொருட்களாகும். இது அத்தகைய விலங்கினை முழுமையாகவோ அல்லது விலங்கின் பகுதியினையோ கொண்டு செய்யப்பட்ட ஒரு பொருள் மற்றும் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட யானைத் தந்தம் மற்றும் அதிலிருந்து செய்யப்பட்ட ஒரு பொருளையும் உள்ளடக்கியதாகும்.
3. நீக்கப்பட்டது (omitted).
4. **"வாரியம்" (Board):** என்பது பிரிவு 6ன் உட்பிரிவு 1ன் கீழ் அமைக்கப்பட்ட வன உயிரினத்திற்கான மாநில அரசின் வாரியமாகும். (State Board for Wildlife).

5. **"பிடியிலிருக்கும் விலங்கு" (captive animal):** என்பது பிடிபட்ட, பிடியில் வைக்கப்பட்டிருக்கின்ற அல்லது பிடியில் இனப்பெருக்கம் செய்து வளர்க்கப்பட்டதும் பட்டியல் I, பட்டியல் II, பட்டியல் III அல்லது பட்டியல் IV ல் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு விலங்குமாகும்.

6. நீக்கப்பட்டது. (omitted).

7. **"தலைமை வன உயிரினக் காப்பாளர்" (Chief Wildlife Warden):** என்பவர் பிரிவு **4**ன் உட்பிரிவு **1**ன் சட்டக் கூறு (a) ன் கீழ் நியமனம் செய்யப்படுகிற நபராவார்.

7A. **சர்க்கஸ்** என்பது முழுவதுமாகவோ அல்லது முதன்மையானதாகவோ ஜாலவித்தை அல்லது திறம்பட சேஷ்டைகளை செய்து காட்டும் குறிநோக்கத்திற்காக விலங்குகளை வைத்திருக்கும் நிலையாக ஒரு இடத்திலிருக்கும் அல்லது இடம் விட்டு இடம் மாறிச் செல்லும் ஒரு நிறுவனமாகும்.

8. நீக்கப்பட்டது (omitted).

9. **"மாவட்ட ஆட்சித்தலைவர்" (Collector):** என்பவர் ஒரு மாவட்டத்தின் வருவாய் நிர்வாகத்தின் தலைமை அலுவலர் அல்லது பிரிவு **18**-Bன் கீழ் மாநில அரசால் நியமனம் செய்யப்படுகிற துணை ஆட்சியர் தகுதி நிலைக்கு கீழில்லாத வேறு எந்த ஒரு அலுவலருமாவார்.

10. **"இந்தச் சட்டத்தின் தொடக்கம் " (Commencement of this Act)** என்பது

a) ஒரு மாநிலம் சம்பந்தமாக வரும்பொழுது அந்த மாநிலத்தில் இந்தச் சட்டம் தொடக்கத்திற்கு வருவதையும்

b)இந்தச் சட்டத்தின் எந்த ஷரத்துப் பற்றியாவது சம்பந்தப்படும் பொழுது சம்பந்தப்பட்ட மாநிலத்தில் அந்த ஷரத்து தொடக்கத்திற்கு வருவதையும் பொருளுணர்த்தும்.

11. **"வணிகர்" (dealer)** என்பது பிடியிலிருக்கும் விலங்கு, விலங்குப் பொருட்கள், ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி, இறைச்சி அல்லது குறிப்பிடப்பட்ட தாவரம் (specified plant) ஆகியவற்றைப் பொறுத்தவரை, அத்தகைய விலங்கு அல்லது விலங்குப் பொருட்களை வாங்குதல் அல்லது விற்பனை செய்யும் வியாபாரத்தைச் செய்யும் ஒரு நபரையும் ஒரே ஒரு நடவடிக்கையில் வியாபாரத்தை மேற்கொள்ளும் நபரையும் உள்ளடக்கியதாக பொருள்படும்.

12. **"இயக்குநர்" (Director)** என்பது பிரிவு 3ன் உட்பிரிவு 1ன் சட்டக்கூறு (a)ன் கீழ் வன உயிரினப் பாதுகாப்பு இயக்குநராக (Director of Wildlife Preservation) பணி நியமனம் செய்யப்படுபவரை பொருளுணர்த்தும்.

12A. **"வன அலுவலர்" (Forest Officer)** என்பது 1927ம் வருடத்திய இந்திய வனச்சட்டத்தின் (16 of 1927) பிரிவு 2ன் சட்டக்கூறு 2ன் கீழோ அல்லது ஒரு மாநிலத்தில் அப்போதைக்கு அமலில் இருக்கின்ற எந்த ஒரு சட்டத்தின் கீழோ வன அலுவலராகப் பணி நியமனம் செய்யப்படுபவர் என பொருள்படும்.

12B. **"வனவிளைப் பொருள்" (Forest produce)** என்பது 1927 ஆம் வருடத்திய இந்திய வனச்சட்டத்தின் (16 of 1927) பிரிவு 2ன் சட்டக் கூறு (4)ன் சட்ட உட்கூறு (b)ன் கீழ் இதற்கு என்ன பொருள்படுமோ அது போலவே இங்கும் பொருள்படும்.

13. நீக்கப்பட்டது (omitted).

14. **"அரசு சொத்து" (Government property)** என்பது பிரிவு 39 அல்லது பிரிவு 17-Hன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து எனப் பொருள்படும்.

15. **"வாழிடம்" (habitat)** என்பது வன விலங்குகளின் இயற்கை வசிப்பிடமான (natural home) நிலம், நீர் அல்லது தாவரங்களையும் உள்ளடக்கியதாகும்.

16. **"வேட்டையாடுதல்" (hunting)** என்ற பதம் அதனுடைய இலக்கண வேறுபாடுகள் மற்றும் சார்ந்து வரும் பதங்களுடன் கீழ்கண்டவற்றையும் உள்ளடக்கியதாகும்.

a) எந்த வன விலங்கையாவது அல்லது பிடியிலிருக்கும் விலங்கையாவது கொல்லுதல் அல்லது அதற்கு விஷமிடுதல் மற்றும் அத்தகைய செயல்களுக்கான ஒவ்வொரு முயற்சியும்;

b) வனவிலங்கையோ, பிடியிலிருக்கும் விலங்கையோ பிடித்தல், வேட்டை நாய்களை வைத்து துரத்துதல் (coursing) பொறிவைத்து சிக்க வைத்தல் (snaring), வலையில் சிக்கவைத்தல் (trapping), விரட்டுதல் (driving) அல்லது பிடிப்பதற்காக உணவுப் பொருள் வைத்தல் (baiting) மற்றும் அத்தகைய செயல்களை செய்வதற்கான ஒவ்வொரு முயற்சியும்;

c) அத்தகைய விலங்கினுடைய உடலின் எந்த பாகத்தையாவது காயமுறச் செய்தல் அல்லது அழித்தல் அல்லது இயற்கையில் வாழும் பறவைகள் மற்றும் ஊர்வனவற்றின் விஷயத்தில் அத்தகைய பறவை அல்லது ஊர்வனவற்றின் முட்டைகளை அழித்தல் அல்லது அத்தகைய பறவை

அல்லது ஊர்வனவற்றின் முட்டைகளையும், கூடுகளையும் தொந்திரவு செய்தல் ;

17. **"நிலம்" (land)** என்பது செயற்கை கால்வாய்கள் (canal), கடற்கழிகள் (creak) மற்றும் மற்ற செயற்கையான அல்லது இயற்கையான நீர் கால்வாய்கள் (water channels), நீர்தேக்கங்கள் (reservoirs), ஆறுகள், ஓடைகள், ஏரிகள், சதுப்புகள் (marshes) ஈரமான நிலங்கள் (wetlands) மற்றும் பெரும் பாறாங்கற்கள் (boulders), கற்பாறைகள் (rocks) ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

18. **"உரிமம்" (licence)** என்பது இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் எனப் பொருள்படும்.

18-A.**"கால்நடை" (livestock)** என்பது பண்ணை விலங்குகள் எனப் பொருள் படுவதோடு, எருமைகள், எருதுகள் (bulls), ஆண்மை நீக்கப்பட்ட எருதுகள் (bullock), ஒட்டகங்கள், பசுமாடுகள், கழுதைகள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், குதிரைகள், கோவேறு கழுதைகள், யாக் எருமைகள், பன்றிகள், வாத்துகள் (ducks), தாராக்கள் (geese), உணவிற்காக வளர்க்கப்படும் கோழிகள், வாத்துகள் (poultry) மற்றும் அதன் குஞ்சுகளையும் உள்ளடக்கியதாகும். ஆனால் I முதல் IV வரை உள்ள பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ள எந்த விலங்கும் இதில் சேராது.

19. **உற்பத்தியாளர் (manufacturer)** என்பவர் பட்டியல் I முதல் V வரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விலங்குகள் மற்றும் பட்டியல் VI ல் குறிப்பிடப்பட்டிருக்கும் தாவரங்கள் ஆகியவைகளிலிருந்து பொருட்களை தயார் செய்பவர் எனப் பொருள்படும்.

20. **"இறைச்சி"** என்பது வெர்மின் அல்லாத மற்ற எந்த ஒரு வனவிலங்கு அல்லது பிடியிலிருக்கும் விலங்கினுடைய பச்சையான அல்லது சமைக்கப்பட்ட இரத்தம், எலும்பு, தசைநார் (Sinew), முட்டை, ஓடு, ஆமை ஓடு (carapace), கொழுப்புத் தோலுடன் கூடிய அல்லது தோல் நீக்கிய தசை ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

20A.**"தேசிய வாரியம்" (National Board)** என்பது பிரிவு 5-Aன் கீழ் வன உயிரின பாதுகாப்பிற்காக நிறுவப்பட்ட தேசிய வாரியம் எனப் பொருள்படும்.

21. **"தேசியப் பூங்கா" (National Park)** என்பது தேசியப் பூங்காவாக சாற்றல் செய்யப்பட்ட ஒரு பகுதி எனப் பொருள் கொள்ளப்படும். அது பிரிவு 35ன்

கீழோ அல்லது பிரிவு 38ன் கீழோ அல்லது பிரிவு 66ன் உட்பிரிவு 3ன் கீழ் சாற்றல் செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்டதாகவோ இருக்கலாம்.

22. **"அறிவிக்கை" (Notification):** என்பது அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட அறிவிக்கை என பொருள்படும்.

23. **"அனுமதிச் சீட்டு" (Permit)** என்பது இந்தச் சட்டத்தின் கீழோ அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகள் கீழோ வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டாகும்.

24. **"நபர்" (person)** என்பது ஒரு நிறுவனத்தையும் (firm) உள்ளடக்கும்.

24-A.**"பாதுகாக்கப்பட்ட பகுதி" (Protected area)** என்பது இந்தச் சட்டத்தின் பிரிவுகள் 18, 35, 36-A மற்றும் 36-C யின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட தேசியப் பூங்கா, வன உயிரின உய்விடம், பாதுகாப்பு ஒதுக்குப்பகுதி (Conservation reserve) அல்லது சமுதாய ஒதுக்குப்பகுதி (Community reserve) என பொருள் கொள்ளப்படும்.

25. **வகுத்தமைக்கப்பட்டது (prescribed)** என்பது இந்தச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளால் வகுத்தமைக்கப்பட்டவை என பொருள்படும்.

25A.**"அங்கீகரிக்கப்பட்ட மிருகக்காட்சிசாலை" (recognized zoo)** என்பது பிரிவு 38-Hன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மிருகக்காட்சி சாலை என பொருள்படும்.

25B.**"ஒதுக்கு காடுகள்" (reserve forests)** என்பது 1927 ம் வருடத்திய இந்திய வனச்சட்டத்தின் (16 of 1927) பிரிவு 20 அல்லது மாநிலத்தின் வேறு எந்த சட்டத்தின் கீழோ மாநில அரசால் ஒதுக்குக் காடுகள் என சாற்றல் செய்யப்பட்ட காடுகள் என பொருள்படும்.

26. **"வன உயிரின உய்விடம்" (sanctuary)** என்பது இந்தச் சட்டத்தின் அத்தியாயம் IVல் கண்ட ஷரத்துக்களின் கீழ் வன உயிரின உய்விடம் என அறிவிக்கையின் மூலம் சாற்றல் செய்யப்பட்ட பகுதி என பொருள் கொள்ளப்படுவதோடு பிரிவு 66ன் உட்பிரிவு 4ன் கீழ் வன உயிரின உய்விடமாகக் கொள்ளப்பட்ட வன உயிரின உய்விடத்தையும் உள்ளடக்கியதாகும்.

27. **"குறிப்பிடப்பட்ட தாவரம்" (specified plant)** என்பது பட்டியல் VIல் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தாவரமும் என பொருள்படும்.

28. நீக்கப்பட்டது (omitted).

29. "மாநில அரசு" (State Government) என்பது யூனியன் பிரதேசத்தை பொறுத்தவரை அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 239ன் கீழ் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட்ட "யூனியன் பிரதேச ஆட்சியாளர்" (Administrator of that Union territory) என பொருள்படும்.

30. "டாக்ஸிடெர்மி" (taxidermy) என்ற பதம் என்பது அதனுடைய இலக்கண வேறுபாடுகள் மற்றும் அதைச் சார்ந்து வரும் பதங்களுடன் ட்ரோபிகளை பதப்படுத்துதல், தயாரித்தல் அல்லது பாதுகாத்தல் அல்லது உருவப்படுத்துதல் (mounting) என பொருள்படும்.

30A. "கரையாட்சிக் கடல்" (territorial waters) என்பது 1976ம் வருடத்திய (80 of 1976) கண்டத்திட்டு (continental shelf), தனித்த பொருளாதார மண்டலம் (Exclusive Economic Zone), மற்றும் பிற கடலாண்மை மண்டலங்கள் (maritime zones) சட்டத்தின் பிரிவு 3ன் கீழ் உள்ள அர்த்தத்தையே இங்கும் கொண்டதாகும்.

31. "ட்ரோஃபி" (trophy) என்பது செயற்கை அல்லது இயற்கை முறைகளினால் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள, வெர்மினைத் தவிர மற்ற வேறு எந்த வனவிலங்கு அல்லது பிடியிலிருக்கும் விலங்கின் (captive animal) முழு உடல் அல்லது ஏதாவது ஒரு பாகம் என பொருள்படுவதோடு கீழ்கண்டவற்றையும் உள்ளடக்கியதாகும்.

a. கம்பளி (rug), தோல் மற்றும் டாக்சிடெர்மி என்ற செய்கை மூலம் பதப்படுத்தப்பட்ட விலங்குடலின் முழுமையான அல்லது ஒரு பகுதி

b. மான்கொம்பு (antlers), எலும்பு, ஆமையோடு (carapace), ஓடு (shell), கொம்பு (horn), மயிர், இறகு, நகம், பல், தந்தம், முட்டைகள், கூடுகள் மற்றும் தேன்கூடு;

32. "பதப்படுத்தப்படாத ட்ரோஃபி" (uncured trophy) என்பது டாக்சிடெர்மி என்ற செயல்முறைக்குட்படுத்தப்படாத, வெர்மினைத் தவிர, இதர பிற பிடியிலிருக்கும் விலங்குகள் மற்றும் வன விலங்குகளின் முழுமையான உடல் அல்லது ஒரு பகுதி என பொருள்படுவதோடு புதியதாக கொல்லப்பட்ட எந்த ஒரு வனவிலங்கு, திமிங்கலத்தின் குடல் (ambergris), கஸ்தூரி (musk) மற்றும் இதர விலங்குப் பொருட்களையும் உள்ளடக்கியதாகும்.

33. "வாகனம்" (vehicle) என்பது நிலம், நீர் மற்றும் ஆகாயம் வழியாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு செல்ல பயன்படும் எந்த ஒரு போக்குவரத்து சாதனமும் (வண்டி) என பொருள்படுவதோடு, எருமை,

எருது; ஆண்மை நீக்கப்பட்ட எருது, ஒட்டகம், கழுதை, யானை, குதிரை மற்றும் கோவேறு கழுதையையும் உள்ளடக்கியதாகும்.

34. **"வெர்மின்" (vermin)** என்பது பட்டியல் Vல் குறிப்படப்பட்டுள்ள எந்த ஒரு வனவிலங்கும் என பொருள்படும்.

35. **"ஆயுதம்" (weapon)** என்பது ஒரு விலங்கினை மயக்கம் உறச்செய்யும், வசப்படுத்தும் (decoy), அழிக்கும், காயப்படுத்தும் அல்லது கொல்லும் திறன் கொண்ட வெடிக் கருவியங்கள் (ammunitions), வில், அம்புகள், வெடிமருந்து, துப்பாக்கி முதலிய வெடிக்கும் போர்க் கருவிக்ள் (fire arms), கொக்கிகள் (hooks), கத்திகள் (knives), வலைகள், விஷம், கண்ணிகள் (snares) மற்றும் பொறிகள் (traps) மற்றும் அத்தகைய எந்த ஒரு கருவியையும் அல்லது உபகரணங்களையும் உள்ளடக்கியதாகும்.

36. **"வனவிலங்கு" (wild animal)** என்பது பட்டியல்கள் I முதல் IVல் குறிப்பிடப்பட்டுள்ளவையும் இயற்கையில் காணப்படுவதுமாகிய விலங்குகள் என பொருள்படும்.

37. **"வன உயிரினம்" (wildlife)** என்பது வாழ்விடத்தின் ஒரு பகுதியாக அமையும் எந்த ஒரு விலங்கு மற்றும் நீர், நிலத் தாவரங்கள் என பொருள்படும்.

38. **"வன உயிரினக் காப்பாளர்" (wildlife warden)** என்பது பிரிவு 4ன் உட்பிரிவு 1ன் சட்டக் கூறு (b)ன் கீழ் அத்தகையவராக நியமிக்கபடுபவர் என பொருள்படும்.

39. **"மிருகக்காட்சிசாலை" (zoo)** என்பது பொதுமக்களின் காட்சிக்கு, பிடியிலிருக்கும் விலங்குகளை வைத்திருக்கும், இடம் பெயராத அல்லது நடமாடும் ஒரு நிறுவனம் என பொருள்படுவதோடு சர்க்கஸ் மற்றும் மீட்பு நிலையங்களையும் (rescue centres) உள்ளடக்கி-யதாகும். ஆனால் பிடியிலிருக்கம் விலங்குகளின் வணிக உரிமம் பெற்ற ஒருவரின் நிறுவனம் இதில் அடங்காது.

அத்தியாயம் II

இந்தச் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்படவேண்டிய அல்லது அமைக்கப்பட வேண்டிய அதிகாரிகள்,அதிகார குழுக்கள்

(Authorities to be appointed or constituted under the Act)

3. இயக்குநர் மற்றும் இதர அலுவலர்களின் நியமனம் (Appointment of Director and other officers)

(1) இந்தச் சட்டத்தின் குறி நோக்கங்களுக்காக மைய அரசு கீழ்க்கண்ட அலுவலர்களை நியமனம் செய்யலாம்.

(a) வன உயிரினப் பாதுகாப்பு இயக்குநர் ஒருவர்;

(b) நீக்கப்பட்டது (omitted);

(c) தேவைக்கேற்றவாறு அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்.

(2) இந்தச் சட்டத்தின் வழியாகவோ அல்லது அதன் கீழோ இயக்குநர் தனது கடமைகளையாற்றுவதும், அதிகாரங்களைச் செலுத்துவதும், மைய அரசு அப்போதைக்கப்போது வழங்கும் பொது அல்லது சிறப்பு ஏவுரைகளுக்கு (directions) உட்பட்டிருக்க வேண்டும்.

(3) இந்தப் பிரிவின் கீழ் நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் இயக்குநருக்கு உதவவேண்டியவர்களாவார்கள்.

4 - தலைமை வன உயிரினக் காப்பாளர் மற்றும் இதர அலுவலர்களின் நியமனங்கள் (Appointment of Chief Wildlife Warden and other officers)

(1) இந்தச் சட்டத்தின் குறி நோக்கங்களுக்காக மாநில அரசு கீழ்க்கண்ட அலுவலர்களை நியமனம் செய்யலாம்.

(a)தலைமை வன உயிரினக் காப்பாளர்;

(b)வன உயிரினக் காப்பாளாகள்;

(b) (b) கௌரவ வன உயிரினக் காப்பாளர்கள்;

(c)தேவைக்கேற்றவாறு மற்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்.

(2) இந்தச் சட்டத்தின் வழியாகவோ அல்லது அதன் கீழோ தலைமை வன உயிரினக் காப்பாளர் தனது கடமைகளையாற்றுவதும், அதிகாரங்களை செலுத்துவதும், மாநில அரசு அப்போதைக்கப்போது வழங்கும் பொது அல்லது சிறப்பு ஏவுரைகளுக்கு (directions) உட்பட்டிருக்க வேண்டும்.

இந்தப் பிரிவின் கீழ் நியமனம் செய்யப்படும் வன உயிரினக் காப்பாளர்கள், கௌரவ வன உயிரினக் காப்பாளர்கள் மற்றும் இதர அலுவலர்களும்.

பணியாளர்களும் தலைமை வன உயிரினக் காப்பாளரின் சார்நிலை அலுவலராவார்கள்.

5. ஒப்படைப்பு செய்யும் அதிகாரம் (power to delegate)

(1) மைய அரசின் முன் ஒப்புதலோடு, எழுத்து வடிவிலான ஆணையின் மூலம், அந்த ஆணையில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் ஏதாகிலும் இருப்பின், அவற்றுக்குட்பட்டும், இயக்குநர் தன்னுடைய எல்லா அதிகாரங்களையுமோ அல்லது ஒரு பகுதியினையோ தன்னுடைய எந்த ஒரு சார்நிலை அலுவலருக்கும் ஒப்படைவு செய்யலாம்.

(2) மாநில அரசின் முன் ஒப்புதலோடு, எழுத்து வடிவிலான ஆணையின் மூலம், அந்த ஆணையில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் ஏதாகிலும் இருப்பின், அவற்றுக்குட்பட்டும், பிரிவு 11 ன் உட்பிரிவு 1ன் சட்டக் கூறு (a) ன் கீழ் உள்ளவைகளைத் தவிர, தனது மற்ற எல்லா அதிகாரங்களையோ, கடமைகளையோ அல்லது அவற்றின் ஒரு பகுதியினையோ தலைமை வன உயிரினக் காப்பாளர் தனது எந்த ஒரு சார்நிலை அலுவலருக்கும் ஒப்படைவு செய்யலாம்.

(3) இயக்குநர் அல்லது தலைமை வன உயிரின்க காப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்த ஒரு நபரும், இயக்குநர் அல்லது தலைமை வன உயிரினக் காப்பாளரால் வழங்கப்படும் எந்த ஒரு பொதுவான அல்லது சிறப்பு ஏவுரைகள் (directions) அல்லது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒப்படைவு (delegation) மூலமாக அல்லாது இந்தச் சட்டமே நேரடியாக தனக்கு அத்தகைய அதிகாரங்களை வழங்கியிருந்தால் எந்த முறையில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் அதிகாரத்தை செலுத்தியிருக்க முடியுமோ அதே வகையில் செலுத்தலாம்.

5-A . வன உயிரினத்திற்கான தேசிய வாரியத்தின் அமைப்பு (Constitution of the Naional Board for Wildlife)

(1) 2002 ஆம் வருடத்திய வன உயிரின (பாதுகாப்பு) திருத்தச் சட்டம் அமலுக்கு வந்த மூன்று மாதத்திற்குள் கீழ்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட வன உயிரினத்திற்கான தேசிய வாரியத்தை மைய அரசு அமைக்க வேண்டும்

(a) தலைவராக பிரதம அமைச்சசர்;

(b) துணைத் தலைவராக வனம் மற்றும் வன உயிரின துறையின் பொறுப்பு வகிக்கும் மைய அரசு அமைச்சர்;

(c) நாடாளுமன்றத்தின் மூன்று உறுப்பினர்கள் - இவர்களில் இருவர் மக்களவையின் உறுப்பினர்கள்; ஒருவர் மாநிலங்களவையின் உறுப்பினர்;

(d) வனம் மற்றும் வன உயிரினங்கள் சம்பந்தமாகப் பொறுப்பிலிருக்கும் திட்டக் கமிஷன் உறுப்பினர்;

(e) அரசு சாரா நிறுவனங்களின் (NGO) பிரதிநிதிகளாக மைய அரசு நியமிக்கும் ஐந்து நபர்கள்;

(f) மையஅரசினால் நியமிக்கப்படும் பத்து பிரசித்திப் பெற்ற வனம் மற்றும் வன உயிரினங்கள் பாதுகாப்பு கொள்கைப் பற்றாளர்கள் (Conservationists), உயிர்ச் சுற்றுச்சூழலியல் வல்லுநர்கள் (ecologists) மற்றும் சுற்றுச் சூழல் வல்லுநர்கள் (environmentalists);

(g) மைய அரசின் வனம் மற்றும் வன உயிரின அமைச்சகம் அல்லது துறையின் பொறுப்பிலிருக்கும் மைய அரசின் செயலர்;

(h) இந்திய இராணுவப் படைத் தளபதி (the Chief of the Army Staff);

(i) பாதுகாப்பு அமைச்சகத்தின் பொறுப்பிலிருக்கும் இந்திய அரசின் செயலர்;

(j) தகவல் மற்றும் ஒலி பரப்பு அமைச்சகத்தின் பொறுப்பிலிருக்கும் இந்திய அரசின் செயலர்;

(k) நிதி அமைச்சகத்தின் செலவுத் துறையின் (Department of expenditure) பொறுப்பிலிருக்கும் இந்திய அரசின் செயலர்;

(l) பழங்குடியினரின் அமைச்சகத்தின் பொறுப்பிலிருக்கும் இந்திய அரசின் செயலர்;

(m) மைய அரசின் வனம் மற்றும் வன உயிரினங்கள் அமைச்சகத்தில், வனம் மற்றும் வன உயிரினங்கள் விவகாரங்களை கையாளும் டைரக்டர் ஜெனரல் ஆஃப் பாரஸ்ட்ஸ்;

(n) இந்திய அரசின் டைரக்டர் ஜெனரல் ஆஃப் டூரிஸம்;

(o) டேராடூனில் உள்ள இந்திய வன ஆராய்ச்சி மற்றும் வனக்கல்வி கழகத்தின் (ICFRE) டைரக்டர் ஜெனரல்;

(p) டேராடூனில் உள்ள இந்திய வன உயிரினக் கல்வி நிலையத்தின் (Wildlife Institute of India) இயக்குநர்;

(q) இந்திய விலங்கியல் சர்வேயின் இயக்குநர் (Director, Zoological Survey of India);

(r) இந்திய தாவரவியல் சர்வேயின் இயக்குநர் (Director, Botanical Survey of India);

(s) இந்திய கால்நடை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் (Director, Indian Veterinary Research Institute);

(t) இயக்குநர், மத்திய மிருகக்காட்சி சாலைகளின் ஆணையம்;

(u) இயக்குநர், தேசிய கடலாராய்ச்சி நிலையம் (National Institute of Oceanography);

(v) ஒரு பிரதிநிதி என்ற வீதத்தில் பத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து சுழற்சி முறையில் மைய அரசினால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள்;

(w) தேசிய வாரியத்தின் உறுப்பினர் செயலாளரான வன உயிரின பாதுகாப்பு இயக்குநர்.

(2) பதவி வழி உறுப்பினர்களைத் தவிர மற்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் மற்றும் நிபந்தனைகள், உட்பிரிவு 1 ன் சட்டக் கூறுகள் (e), (f) மற்றும் (v) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காலியிடங்களை நிரப்பும் வழிமுறைகள் மற்றும் தேசிய வாரியத்தின் உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் செய்யும் பொழுது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகியவை, இதற்கென வகுத்தமைக்கப்படும் வழிமுறைகள் படியாக இருக்க வேண்டும்.

(3) உறுப்பினர்கள் (பதவி வழி உறுப்பினர்களைத் தவிர) தங்கள் கடமைகளையாற்றுவதில் ஏற்படுகின்ற செலவுகள் சம்பந்தமாக, வகுத்தமைக்கப்படும் (prescribed) படிகளை (allowances) பெறுவதற்கு உரிமையுடையவர்களாவார்கள்.

(4) அப்போதைக்குச் செல்லாற்றத்திலுள்ள வேறு எந்தச் சட்டத்திலும் எது எவ்வாறு இருப்பினும், தேசிய வாரியத்தின் உறுப்பினர் பதவியை ஒரு ஊதியம் நல்கும் பதவியாக (office of profit) கொள்ளல் கூடாது.

5 - B தேசிய வாரியத்தின் நிலைக்குழு (Standing committee of the National Board)

1. தேசிய வாரியத்தால் ஒப்படைவு செய்யப்படுகின்ற (delegated) அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டும் தேசிய வாரியம் தன் விருப்ப முடிவுப்படி (discretion) ஒரு நிலைக் குழுவினை (a standing committee) அமைக்கலாம்.

2. இந்த நிலைக் குழுவானது துணைத் தலைவர், உறுப்பினர் - செயலர் மற்றும் துணைத் தலைவரால் நியமிக்கப்படும் பத்திற்கு மேற்படாத தேசிய வாரியத்தின் உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டதாக இருக்கும்.

3. தேசிய வாரியம் தனக்கு ஒதுக்கப்பட்ட (assigned) பணிகளை சரியான முறையில் நிறைவேற்றும் பொருட்டு அவ்வப்போது தேவைக்கேற்றவாறு குழுக்களையும், உதவிக் குழுக்களையும் ஆய்வுக் குழுக்களையும் (Study Groups) அமைத்துக் கொள்ளலாம்.

5.C. தேசிய வாரியத்தின் பணிகள் (Function of the National Board)

1. அழிவின்றி பாதுகாத்தலை (conservation) உக்குவித்து ஆதரித்தலும், உகந்தது எனக் கருதும் செயலேற்பாடுகள் (measures) மூலம் வன உயிரினம் மற்றும் வனங்களை மேம்பாடடையச் செய்வதும் தேசிய வாரியத்தின் கடமையாகும்.
2. முன்கண்ட வகை முறையின் பொதுவியலுக்கும் (generraltiy) அதில் குறிப்பிட்டுள்ள செயலேற்பாடுகளுக்கும் குந்தகம் இல்லாமல் கீழ்கண்டவைகளுக்கு வகை செய்யலாம் -
   a. வன உயிரினங்கள் அழிவின்றி பாதுகாக்கப்படுவதை (Conservation) ஊக்குவித்து ஆதரிப்பதற்கான வழிவகைகளையும், வன உயிரினங்கள் வேட்டையாடப்படுவதையும், வன உயிரினங்கள் மற்றும் அதனின்றும் உருவாக்கின பொருட்களின் சட்ட முரணான வணிகத்தையும் திறம்படக் கட்டுப்படுத்துவற்குரிய கொள்கைகளையும் வகுத்து மத்திய மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கல்;
   b. தேசியப் பூங்காக்கள், வன உயிரின உய்விடங்கள் மற்றும் பிற பாதுகாக்கப்பட்டப் பகுதிகளை அமைப்பது மற்றும் அவற்றை மேலாண்மை செய்வது மற்றும் அப்பகுதிகளில் கட்டுப்படுத்தப்பட வேண்டிய செயல்கள் குறித்து பரிந்துரைகள் செய்தல்;
   c. வன உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் மீது பல்வேறுபட்ட திட்டங்கள் மற்றும் செயல்கள் உண்டாக்கும் தாக்கத்தை மதிப்பீடு செய்தல் (Impact assessment) அல்லது அத்தகைய மதிப்பீட்டை செய்ய வைத்தல்;
   d. நாட்டில் வன உயிரினங்கள் பாதுகாக்கப்படுவதின் முன்னேற்றத்தை அவ்வப்போது ஆய்வு செய்வதும் (Review) அதை மேம்படுத்து-வதற்குரிய ஆலோசனைகளை வழங்குதலும் ; மற்றும்
   e. நாட்டில் வன உயிரினங்கள் பற்றிய தகுநிலை அறிக்கையினை (status report) குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது தயாரித்து வெளியிடுதல்;

6. வன உயிரினத்திற்கான மாநில வாரியம் (Constitution of State Board for Wildlife)

(1) 2002 ம் வருடத்திய வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் அமலுக்கு வந்த ஆறு மாதத்திற்குள் கீழ்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட வன உயிரினத்திற்கான மாநில வாரியத்தை மாநில அரசு அமைக்க வேண்டும்.

a) மாநிலத்தின் முதலமைச்சர் மற்றும் யூனியன் பிரதேசத்தை பொறுத்தவரை நேர்வுக்கேற்றவாறு முதலமைச்சர் அல்லது ஆட்சியாளர் (administrator)- தலைவர்.

b) வனம் மற்றும் வன உயிரினத் துறையின் பொறுப்பு அமைச்சர் - துணைத் தலைவர் ;

c) மாநில சட்ட மன்றத்தின் மூன்று உறுப்பினர்கள் அல்லது சட்ட மன்றம் உள்ள யூனியன் பிரதேசமாக இருந்தால் அத்தகைய யூனியன் பிரதேச சட்ட மன்றத்தின் இரு உறுப்பினர்கள் ;

d) வன உயிரின விஷயங்களில் ஈடுபாடு கொண்டுள்ள அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகளாக மாநில அரசு நியமிக்கும் மூன்று நபர்கள்;

e) மாநில அரசால் நியமிக்கப்படும் பத்து பிரசித்திப் பெற்ற வனம் மற்றும் வன உயிரினங்கள் பாதுகாப்பு கொள்கைப் பற்றாளர்கள் (Conservationists), உயிர்ச் சுற்றுச்சூழலியல் வல்லுநர்கள் (ecologists) மற்றும் சுற்றுச் சூழல் வல்லுநர்கள் (environmentalists), இவர்களில் குறைந்தது இரண்டு நபர்களாவது பழங்குடியினரின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் ;

f) மாநில அரசின் வனம் மற்றும் வன உயிரினத் துறையின் செயலாளர் அல்லது நேர்வுக்கேற்றவாறு யூனியன் பிரதேச செயலாளர் ;

g) மாநில அரசின் வனத்துறையின் பொறுப்பு அலுவலர்;

h) மாநில அரசின் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர் ;

i) நிர்வாக இயக்குநர், மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம். ;

j) காவல்துறைத் தலைவர் (Inspector General) தர நிலைக்கு குறையாத, மாநில காவல்துறையின் அலுவலர் ஒருவர் ;

k) பிரிகேடியர் (Brigadier) தர நிலைக்கு குறையாத, மத்திய அரசினால் நியமிக்கப்படும் ஆயுதப் படைகளின் (Armed Forces) பிரதிநிதி ஒருவர் ;

l) இயக்குநர், மாநில கால்நடை பராமரிப்புத் துறை. ;

m) இயக்குநர், மாநில மீன்வளத்துறை. ;

n) வன உயிரினப் பாதுகாப்பு இயக்குநரால் நியமிக்கப்படும் ஒரு அலுவலர் ;

o) டேராடூனில் உள்ள இந்திய வன உயிரின பயிற்சி நிலையத்தின் பிரதிநிதி ஒருவர்;

p) இந்திய தாவரவியல் சர்வேயின் பிரதிநிதி ஒருவர் ;

q) இந்திய விலங்கியல் சர்வேயின் பிரதிநிதி ஒருவர் ;

r) தலைமை வன உயிரினக் காப்பாளர் - உறுப்பினர் - செயலாளராக இருப்பார்.

(2) பதவி வழி உறுப்பினர்களைத் தவிர மற்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் மற்றும் நிபந்தனைகள், உட்பிரிவு 1 ன் சட்டக் கூறுகள் (d), மற்றும் (e) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காலியிடங்களை நிரப்பும் வழிமுறைகள் மற்றும் பின்பற்றப் பட வேண்டிய நடைமுறைகள் ஆகியவை, இதற்கென வகுத்தமைக்கப்படும் விதத்தில்

இருக்க வேண்டும்.

(3) உறுப்பினர்கள் (பதவி வழி உறுப்பினர்களைத் தவிர) தங்கள் கடமைகளையாற்றுவதில் ஏற்படுகின்ற செலவுகள் சம்பந்தமாக, வகுத்தமைக்கப்படும் (prescribed) படிகளை (allowances) பெறுவதற்கு உரிமையுடையவர்களாவார்கள்.

7. வாரியம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்(Procedure to be followed by the Board)

(1) வாரியம் ஆண்டிற்கு குறைந்த பட்சம் இரண்டு முறையாவது மாநில அரசு உத்திரவிடும் இடத்தில் கூட வேண்டும்.

(2) தனது நடவடிக்கைகளை (procedure) வாரியமே வகுத்துக் கொள்ள வேண்டும் (குறைவெண்வரம்பையும் சேர்த்து - Quorum)

(3) வாரியத்தின் உறுப்பினர் பதவி காலியாக இருப்பது அல்லது வாரிய அமைப்பில் குறைபாடு ஏதும் இருத்தல் அல்லது வழக்கின் தராதரத்தை பாதிக்காத நடைமுறை முறைகேடுகள் (வாரியத்தின்) என்ற காரணங்களுக்காக மட்டிலும் வாரியத்தின் எந்தச் செயலும் அல்லது நடவடிக்கைகளும் செல்லுபடியாகாத தாகாது.

8. மாநில வன உயிரின வாரியத்தின் கடமைகள் (Duties of State Board for Wildlife)

கீழ்கண்டவை குறித்து மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவது மாநில வன உயிரின வாரியத்தின் கடமையாகும் -

a) பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக (Protected Areas) சாற்றல் செய்யப்பட வேண்டிய பகுதியினைத் தெரிவு செய்தல் மற்றும் மேலாண்மை செய்தல்;

b) வன உயிரினங்கள் மற்றும் குறிப்பிட்ட தாவரங்களின் (Specified plants) பாதுகாப்பு (Protection) மற்றும் அவற்றை அழியாமல் தடுப்பதற்கான (Conservation) கொள்கைகளை வகுப்பது;

c) பட்டியல்களை திருத்துவது சம்பந்தப்பட்ட எந்தவித பொருட்கூறாகிலும்;

cc) பழங்குடியினர் மற்றும் வனங்களில் வாழ்வோரின் தேவைகளையும் வனஉயிரினங்களின் பாதுகாப்பு (protection) மற்றும் அழிவு தடுப்பு (conservation) பணிகளையும் சமன்படுத்தும் நடவடிக்கைகள் சம்மந்தமாக;

d) வன உயிரினப் பாதுகாப்பு சம்பந்தமாக மாநில அரசால் தனக்கு விடப்படும் மற்ற எந்தவித பொருட்கூறு (matters) களிலும்.

அத்தியாயம் III

வன உயிரினங்களை வேட்டையாடுதல்
(Hunting of Wild Animals)

9. வேட்டையாடுவதற்கு தடை (Prohibition of hunting)

பட்டியல் I, II, III மற்றும் IV ல் கண்ட எந்த ஒரு வன விலங்கையும் இச்சட்டத்தின் பிரிவுகள் 11 மற்றும் 12 ல் கண்டுள்ளபடியில்லாமல் எவரும் வேட்டையாடக் கூடாது.

10. விலக்கப்பட்டு விட்டது.

11. சில நிகழ்வுகளில் வன விலங்குகளை வேட்டையாட அனுமதி.
(Hunting of wild animals to be permitted in certain cases)

(1) அப்போதைக்குச் செல்லாற்றத்தித்திலுள்ள வேறு எந்தச் சட்டத்திலும் அது எவ்வாறு இருப்பினும் இச்சட்டத்தின் அத்தியாயம் IVல் சொல்லப்பட்டவைகளுக்கு உட்பட்டு -

(a) பட்டியல் Iல் கண்டுள்ள எந்த ஒரு வன விலங்காவது மனித உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக மாறிவிட்ட நிலையிலோ அல்லது அந்த வன விலங்கு செயலிழந்தோ அல்லது நோய் வாய்ப்பட்டோ மீட்க முடியாத நிலைக்கு சென்று விட்ட நிலையிலோ அந்த வன விலங்கை வேட்டையாட அதற்குண்டான காரணங்களை தெரிவித்து எழுத்து மூலமான உத்தரவின் மூலம் எந்த ஒரு நபரையும் தலைமை வன உயிரினக் காப்பாளர் அனுமதிக்கலாம். அல்லது அத்தகைய விலங்கு வேட்டையாடப்படுவதற்கு அவர் தக்க வகை செய்யலாம்.

இருந்த போதிலும் மேற்படி வன விலங்கை பிடிக்கவோ மயக்க நிலைக்கு கொண்டு வரவோ அல்லது வேறிடத்திற்கு கொண்டு சென்று விடவோ முடியாது என தலைமை வன உயிரினக் காப்பாளர் திருப்தி அடைந்தால் மட்டுமே அல்லாமல் எந்த ஒரு வன விலங்கையும் கொல்ல உத்தரவிடக் கூடாது.

மேலும் அப்படிப் பிடிக்கப்பட்ட வன விலங்கை வனத்தில் இயற்கையாக விட்டு மறுவாழ்வு அளிக்க இயலாது என தலைமை வன உயிரின்க காப்பாளர் திருப்தியடைந்து அதற்கான காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்யாமல் அவ்விலங்கை பிடித்து கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல் கூடாது.

<u>**விளக்கம் :**</u> உட்பிரிவு (a) சம்மந்தப்பட்ட விலங்குகளை பொறுத்து, பிடித்தல் அல்லது மயக்கமுறச் செய்தல் ஆகிய நடவடிக்கைகளின் போது அத்தகைய விலங்குகளுக்கு மிகவும் குறைந்த அளவிலான துன்பம் தரும் வழி முறைகளையே பின்பற்ற வேண்டும்.

(b) பட்டியல் II, III அல்லது IV ல் **கண்டுள்ள** எந்த ஒரு வன விலங்கும் மனித உயிர்களுக்கோ அல்லது எந்த ஒரு விளை நிலத்திலுமுள்ள பயிர்கள் உள்ளிட்ட சொத்துக்களுக்கோ ஆபத்து விளைவிப்பதாக மாறிவிட்டதாகவோ அல்லது அவ்விலங்கு மீட்க முடியாத நிலைக்கு நோய்வாய்ப்பட்டு விட்டதாகவோ அல்லது செயலிழந்து விட்டதாகவோ, தலைமை வன உயிரினக் காப்பாளரோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ திருப்தியடைந்தால், அதற்குண்டான காரணங்களை உள்ளடக்கிய எழுத்து மூலமான உத்தரவின் மூலம் அத்தகைய விலங்கினையோ அல்லது விலங்கு கூட்டத்தையோ வேட்டையாட எந்த ஒரு நபரையும் அனுமதிக்கலாம். அல்லது குறிப்பிட்டப் பகுதியில் உள்ள அத்தகைய விலங்கையோ அல்லது விலங்கு கூட்டத்தையோ வேட்டையாடுவதற்கு தக்க வகை செய்யலாம்.

(2) நல்லெண்ணத்துடன், தற்காப்புக்காகவோ அல்லது வேறு ஒரு நபரை காப்பாற்றவோ எந்த ஒரு வன விலங்கையும் கொல்வதோ அல்லது காயப்படுத்துவதோ குற்றம் ஆகாது.

இருப்பினும் அத்தகைய தற்காப்பு நடவடிக்கையின் போது ஒருவர் இச்சட்டத்திற்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு எதிராக எந்த ஒரு செயலையாவது செய்து கொண்டிருந்திருந்தால் அப்படிப்பட்டவரை அவர் புரிந்த குற்றத்திலிருந்து இந்த உட்பிரிவு விடுவிக்காது.

(3) ஒருவரின் தற்காப்புக்காகக் காயப்படுத்தப்பட்ட அல்லது கொல்லப்பட்ட எந்த விலங்கும் அரசு சொத்தாகும்.

12. சிறப்பு நோக்கங்களுக்கு அனுமதி வழங்குதல் (Grant of permit for special purposes)

இச்சட்டத்தில் வேறு எந்த இடத்திலும் எது எவ்வாறு சொல்லப்பட்டிருந்தாலும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திய பின்பு, உரிய காரணங்களையும் நிபந்தனைகளையும் எழுத்து மூலம் குறிப்பிட்டு வன உயிரினங்களைக் கீழ்க்கண்ட காரணங்களுக்காக வேட்டையாட தலைமை வன உயிரினக் காப்பாளர் அனுமதி வழங்கலாம்.

(a) கல்வி

(b) அறிவியல் ஆராய்ச்சி

(bb) அறிவியல் அடிப்படையிலான மேலாண்மை

<u>விளக்கம்:-</u> மேற்கண்ட உட்பிரிவு (bb) ல் சொல்லப்பட்ட அறிவியல் அடிப்படையிலான மேலாண்மை என்பது

(i) தகுந்த மாற்று வாழ்விடங்களுக்கு வன விலங்குகளை இடம் மாற்றுதல் மற்றும்

(ii) விலங்குகளை கொல்லாமலும் விஷமிடாமலும், அழிக்காமலும் அவற்றின் எண்ணிக்கையை மேலாண்மை செய்தல் என்பதாகும்.

(c) மாதிரிகள் சேகரித்தல் (Collection of specimens)

(i) பிரிவு 38-இன் கீழ் வழங்கப்பட்ட அனுமதிக்குட்பட்டு அங்கீகரிக்-கப்பட்ட மிருககாட்சிசாலைகளுக்கு; அல்லது

(ii) அருங்காட்சியகங்கள் மற்றும் அது மாதிரியான நிலையங்களுக்கு.

(d) உயிர் காக்கும் மருந்துகள் தயாரிப்பதற்காக பாம்பு நச்சை பெறுதல், சேகரம் செய்தல் மற்றும் தயார் செய்தல்.

இருப்பினும் மேற்கண்ட அனுமதிகளை கீழ்கண்டவாறு முன் அனுமதி பெறாமல் வழங்கக் கூடாது.

(a) சம்பந்தப்பட்ட வன விலங்கு பட்டியல் I ல் சேர்க்கப்பட்டிருந்தால் மத்திய அரசின் முன் அனுமதி, மற்றும்

(b) பட்டியல் Iல் சேர்க்கப்படாத மற்ற வன விலங்குகளுக்கு மாநில அரசின் முன் அனுமதி.

பிரிவுகள் 13 முதல் 17 வரை நீக்கப்பட்டு விட்டது.

அத்தியாயம் III –A

குறிப்பிடப்பட்ட தாவரங்களின் பாதுகாப்பு
(Protection of specified plants)

17-A. குறிப்பிடப்பட்ட தாவரத்தை கிள்ளி எடுத்தல், வேருடன் பிடுங்கல் போன்றவற்றிற்குத் தடை (Prohibition of picking, uprooting, etc., of specified plant)

இந்த அத்தியாயத்தின் கீழ் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு மாறாக எந்த ஒரு நபரும் -

(a) எந்த ஒரு வன நிலத்திலிருந்தும் மற்றும் மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட நிலம் எதிலிருந்தும் குறிப்பிடப்பட்ட தாவரங்கள் எதையும் வேண்டுமென்றே (willfully) கிள்ளி எடுக்கவோ, வேருடன் பிடுங்கவோ, சேதம் விளைவிக்கவோ, அழிக்கவோ, பெறவோ அல்லது சேகரம் செய்யவோ கூடாது;

(b) குறிப்பிடப்பட்ட தாவரம் எதையும் உயிருடனோ, பட்டுப்போனதையோ அல்லது அதன் எந்த ஒரு பாகத்தையோ அல்லது அதிலிருந்து பெறப்பட்ட எதையும் வைத்திருக்கவோ, விற்கவோ, விற்பனைக்கு உட்படுத்தவோ அல்லது அன்பளிப்பாகவோ அல்லது வேறு வகையில் மாற்றவோ, எடுத்துச் செல்லவோக் கூடாது.

இருப்பினும் பட்டியல் பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவர் அவர் வசிக்கும் மாவட்டத்தில், இந்தச் சட்டடத்தின் அத்தியாயம் IVல் கூறப்பட்டுள்ளவை-களுக்குட்பட்டு, தனது முறையான சொந்த உபயோகத்திற்கு எந்த ஒரு குறிப்பிடப்பட்ட தாவரத்தையோ, அதன் பாகத்தையோ அல்லது அந்த தாவரத்திலிருந்து கிடைக்கப் பெறும் பொருளையோ கிள்ளி எடுப்பதையோ, சேகரம் செய்வதையோ அல்லது வைத்திருப்பதையோ இந்தச் சட்டப் பிரிவில் கூறப்பட்டுள்ள எதுவும் தடை செய்யாது.

17-B. சிறப்பு தேவைகளுக்காக உரிமம் வழங்குதல் (Grants of permit for special purposes)

இச்சட்டத்தின் பிரிவு 17-Aன் கீழ் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு பகுதி-யிலிருந்தும் வன நிலத்திலிருந்தும், விதிக்கப்படும் நிபந்தனைக்குட்பட்டு, குறிப்பிடப்பட்ட தாவரம் எதையும் கீழ்கண்டத் தேவைகளுக்காக கிள்ளி எடுக்கவோ, வேருடன் பிடுங்கவோ, பெறுவதற்கோ அல்லது சேகரம் செய்வதற்கோ, மாநில அரசின் முன் அனுமதி பெற்று தலைமை வன உயிரினக் காப்பாளர் ஒருவருக்கு உரிமம் வழங்கலாம்.

(a) கல்வி

(b) அறிவியல் அடிப்படையிலான ஆராய்ச்சி

(c) சேகரம் செய்தல், பாதுகாத்து வைத்தல், அறிவியல் நிறுவனங்களின் ஹெர்பேரியங்களில் காட்சிக்கு வைத்தல்; அல்லது

(d) மத்திய அரசால் இதற்காக அனுமதிக்கப்பட்ட எவரும் அல்லது எந்த ஒரு நிறுவனமும் உற்பத்தி விளைச்சலை மேற்கொள்ளுதல்.

17-C. உரிமம் பெறாமல் குறிப்பிடப்பட்ட தாவரங்களை பயிர் செய்யத் தடை (Cultivation of specified plants without licence prohibited)

(1) தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது மாநில அரசால் இதற்காக அங்கீகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்பட்ட அனுமதியின்படியல்லாமல் எவரும் குறிப்பிடப்பட்ட தாவரம் எதையும் பயிரிடுதல் கூடாது.

இருப்பினும் 1991 வன உயிரின (பாதுகாப்பு) திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த தேதிக்கு முன்பிருந்தே குறிப்பிடப்பட்ட தாவரங்களை பயிர் செய்து வரும் ஒருவரை இச்சட்டம் அமலுக்கு வந்த ஆறு மாத காலம் வரையிலோ அல்லது பயிர் செய்ய உரிமம் வழங்கக் கோரி சட்டம் அமலுக்கு வந்த ஆறுமாத காலத்திற்குள் விண்ணப்பித்திருக்கும் பட்சத்தில் கோரப்பட்ட உரிமம் வழங்கப்படும் வரையிலோ அல்லது கோரப்பட்ட உரிமம் வழங்க இயலாது என எழுத்து மூலமாக தெரிவிக்கின்ற வரையிலோ அவர் தொடர்ந்து குறிப்பிடப்பட்ட தாவரங்களை பயிர் செய்வதை இந்த பிரிவில் கூறப்பட்டுள்ள எவையும் தடை செய்யாது.

(2) இப் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு உரிமமும் எந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்ட தாவரம் பயிர் செய்ய அனுமதிக்கப்படுகிறது என்பதையும் பயிர் செய்ய நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்பட்டிருந்தால் அத்தகைய நிபந்தனைகளையும் குறிப்பிட வேண்டும்.

17-D. உரிமம் இல்லாமல் குறிப்பிடப்பட்ட தாவரங்கள் சம்மந்தமான வியாபாரம் செய்யத் தடை (Dealing in specified plants without licence prohibited)

(1) தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது இதன் பொருட்டு மாநில அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் வழங்கப்பட்ட உரிமத்தின் கீழும் மற்றும் உரிமத்தின் படியுமல்லாமல் எவரும் குறிப்பிடப்பட்ட தாவரங்கள் அல்லது அதன் பாகம் அல்லது அவற்றில் இருந்து கிடைக்கப் பெற்ற பொருள்கள் சம்பந்தப்பட்ட வியாபாரத்தை தொடங்குவதோ அல்லது வியாபாரம் செய்வதோ அல்லது வியாபாரியாக தொழில் செய்வதோ கூடாது.

இருப்பினும் 1991 வன உயிரின (பாதுகாப்பு) திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த தேதிக்கு முன்பிருந்தே அதுபோன்ற வியாபாரத்தையோ, தொழிலையோ நடத்திக் கொண்டிருக்கும் ஒருவரை இச்சட்டம் அமலுக்கு வந்த அறுபது நாட்கள் வரையிலோ அல்லது அந்த அறுபது நாட்களுக்குள் அவர் உரிமம் வேண்டி

விண்ணப்பித்து இருக்கும் பட்சத்தில் கோரப்பட்ட உரிமம் வழங்கப்படும் வரையிலோ அல்லது கோரப்பட்ட உரிமம் எழுத்து மூல உத்தரவின் படி மறுக்கப்படும் வரையிலோ இந்த சட்ட பிரிவில் கூறப்பட்டுள்ள எவையும் அவர் பட்டியல் தாவரம் சம்பந்தப்பட்ட வியாபாரம் செய்வதை தடை செய்யாது.

(2) இப் பிரிவின் கீழ் வழங்கப்படுகிற ஒவ்வொரு உரிமமும் குறிப்பிடப்பட்ட தாவரங்களின் வியாபாரத்திற்காக அனுமதிக்கப்பட்ட இடம் மற்றும் நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்பட்டிருந்தால் அவற்றையும் குறிப்பிட வேண்டும்.

17 - E. இருப்பை சாற்றல் செய்தல் (Declaration of Stock)

(1) குறிப்பிடப்பட்ட தாவரங்களை பயிர் செய்பவர்கள் அல்லது குறிப்பிடப்பட்ட தாவரங்கள் அல்லது அதன் பாகம் அல்லது அதிலிருந்து பெறப்பட்ட பொருட்களை வியாபாரம் செய்பவர் எவரும் 1991 வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் நடைமுறைக்கு வந்த முப்பது நாட்களுக்குள் குறிப்பிடப்பட்ட தாவரங்கள் அல்லது அதன் பாகம் அல்லது அதிலிருந்து பெறப்பட்ட பொருட்கள் இச்சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியன்று இருந்த கையிருப்பை தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது இதற்கென மாநில அரசால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலருக்கு சாற்றல் வேண்டும்.

(2) பிரிவுகள் 44 ன் உட்பிரிவுகள் 3 முதல் 8 வரை மற்றும் பிரிவு 45, பிரிவு 46 மற்றும் 47 ல் கூறபட்டுள்ளவை விலங்குகள் மற்றும் விலங்குப் பொருட்களின் உரிமம் அல்லது வியாபாரம் ஆகியவற்றிற்கு எவ்வாறு பொருந்துமோ அதே வகையில் சட்டப் பிரிவு 17-C மற்றும் 17-Dன் கீழ் கூறப்படும் விண்ணப்பம் மற்றும் உரிமங்களுக்கும் பொருந்தும்.

17-F. உரிமம் பெற்றவர் குறிப்பிடப்பட்டத் தாவரங்களை வைத்திருத்தல் போன்றவை (Possession, etc of plants by licecensee)

இந்த அத்தியாயத்தின் கீழ் உரிமம் பெற்ற எவரும் -

(a) தன்னுடைய கட்டுப்பாட்டிலோ, பாதுகாப்பிலோ அல்லது தன் உடமையிலோ (possession) கீழ்கண்டவற்றை வைத்திருக்கக் கூடாது.

(i) பிரிவு 17-F ன் கீழ் கூறப்பட்டுள்ளவைகள்படி சாற்றல் (declaration) செய்யப்பட வேண்டிய ஆனால் அவ்வாறு செய்யப்படாத குறிப்பிடப்பட்டத் தாவரங்கள், அதன் பாகம் அல்லது அதன் பொருட்கள்;

(ii) இந்தச் சட்டம், இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் மற்றும் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் படி சட்டப்பூர்வமாக பெற்றடையாத எந்த ஒரு குறிப்பிடப்பட்டத் தாவரம், அதன் பாகம் அல்லது அதிலிருந்து பெறப்பட்ட பொருட்கள்;

(b) உரிமத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் படியும் இந்தச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் படியும் அல்லாமல் கீழ்கண்டவற்றை செய்யக் கூடாது.

(i) குறிப்பிடப்பட்டத் தாவரம் எதையும் கிள்ளியெடுத்தல், வேருடன் பிடுங்குதல், சேகரம் செய்தல் அல்லது பெற்றடைதல் (acquire).

(ii) குறிப்பிடப்பட்ட தாவரம் எதையுமோ அல்லது அதன் பாகத்தையோ அல்லது அதிலிருந்து பெறப்பட்ட பொருளையோ பெற்றடைதல், (acquire), பெற்றுக் கொள்ளுதல் (receive), தனது கட்டுப்பாட்டில், காவலில் அல்லது உடமையில் வைத்துக் கொள்ளல், விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்கு கொடுத்தல் அல்லது இடமாற்றம் செய்தல்.

17 - G. குறிப்பிடப்பட்ட தாவரங்களை வாங்குதல் (Purchase) போன்றவை,

உரிமம் பெற்ற வணிகரிடமிருந்து அல்லாமல் மற்ற எவரிடமிருந்தும் குறிப்பிடப்பட்ட தாவரங்கள் அல்லது அதன் பாகம் அல்லது அவற்றிலிருந்து பெறப்பட்ட பொருட்கள் எதையும் யாரும் வாங்குதல், பெறுதல் அல்லது பெற்றடைதல் கூடாது.

இருப்பினும் இந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ள எவையும் பிரிவு-17-Bல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்குப் பொருந்தாது.

17 - H. தாவரங்கள் அரசு சொத்து (Plants to be Government property)

(1) இச்சட்டம் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் சம்பந்தப்பட்ட குறிப்பிடப்பட்ட தாவரங்கள் அல்லது அதன் பாகங்கள் அல்லது அதிலிருந்து பெறப்பட்ட பொருட்கள் ஆகிய எவையும் மாநில அரசின் சொத்தாகும். மற்றும் அத்தகைய குறிப்பிடப்பட்டத் தாவரம் அல்லது அதன் பாகங்கள் அல்லது அதிலிருந்து பெறப்பட்ட பொருட்கள் ஆகியவை மத்திய அரசினால் சாற்றல் செய்யப்பட்ட வன உயிரின உய்விடம் அல்லது தேசியப்பூங்காவிலிருந்து சேகரம் செய்யப்பட்டிருந்தாலோ, பெற்றடைந்திருந்தாலோ அத்தகைய குறிப்பிடப்பட்டத் தாவரங்கள் அல்லது அதன் பாகங்கள் அல்லது அதிலிருந்து பெறப்பட்ட பொருட்கள் மத்திய அரசின் சொத்தாகும்.

(2) இச்சட்டப் பிரிவுகள் 39 (2), 39 (3) ல் சொல்லப்பட்டுள்ளவை பிரிவு 39(1) ல் சொல்லப்பட்டுள்ள வன விலங்குகள் மற்றும் விலங்குப் பொருட்களுக்குப் பொருந்துவது போலக் குறிப்பிடப்பட்ட தாவரங்கள் அல்லது அதன் பாகம் அல்லது அதிலிருந்து பெறப்பட்ட பொருட்களுக்கும் உரிய வகையில் பொருந்தும்.

அத்தியாயம் IV

பாதுகாக்கப்பட்ட பகுதிகள் (Protected Areas)

18. வன உயிரின உய்விடத்தை சாற்றல் செய்தல். (Declaration of sanctuary)

(1) வன உயிரினங்களை (Wildlife) அல்லது அவற்றின் சுற்றுப்புறச் சூழலை (environment) பாதுகாத்தல், விருத்தியடையச் செய்தல் (propagating) மற்றும் மேம்பாடடையச் செய்தல் (developing) போன்றவற்றிற்கு ஒரு பகுதி உயிர் சுற்றுச் சூழலியல், (ecological) விலங்கினங்கள் (faunal), தாவர இனங்கள் (Floral), புவியமைப்பியல் (Geomorphological), இயற்கை அல்லது விலங்கியல் (natural or zoological) ரீதியாக போதுமான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாக மாநில அரசு கருதும் பட்சத்தில், அந்தப் பகுதி காப்புக் காட்டின் (Reserved Forest) ஒரு பகுதியாகவோ அல்லது கரையாட்சிக் கடலின் (territorial waters) ஒரு பகுதியாகவோ இல்லாமல் இருக்கும் பட்சத்தில், அந்தப் பகுதியினை வன உயிரின உய்விடமாக அமைத்துருவாக்கவிருக்கும் (constitute) தனது எண்ணத்தினை, அறிவிக்கையின் (notification) மூலம், மாநில அரசு சாற்றல் செய்யலாம் (Declare).

(2) உட்பிரிவு (1) ல் சொல்லப்பட்ட அறிவிக்கையானது அத்தகைய பகுதியின் இருப்பிடம் மற்றும் எல்லைகளை முடிந்தவரை சரியாக குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

விளக்கம் : இந்தப் பிரிவின் குறிநோக்கத்தை பொறுத்த மட்டில் மேற்படி பகுதியை சாலைகள், ஆறுகள், மலை முகடுகள் அல்லது ஏற்கனவே உள்ள நன்கு தெரியும் எல்லைகள் இவற்றைக் கொண்டு விவரித்தால் போதுமானது.

18 - A. வன உயிரின உய்விடங்களுக்கு பாதுகாப்பு (Protection to sanctuaries)

(1) காப்புக் காடு அல்லது கரையாட்சிக் கடல் பகுதிக்குள் அடங்காத ஒரு பகுதியினை வன உயிரின உய்விடமாக அமைத்துருவாக்கும் தனது எண்ணத்தினை சட்டப் பிரிவு 18(1) ல் மாநில அரசு சாற்றல் செய்த உடன் இச்சட்டத்தின் பிரிவுகள் 27 முதல் 33-A முடிய (இரண்டு பிரிவுகளும் சேர்த்து) உள்ளவற்றில் சொல்லப்பட்டுள்ளவை அப்பகுதியில் உடனடியாக நடைமுறைக்கு வரும்.

(2) இச்சட்டப் பிரிவுகள் 19 முதல் 24 (இரண்டு பிரிவுகளும் சேர்த்து) வரை உள்ளவற்றில் சொல்லியுள்ளபடி பாதிக்கப்பட்ட ஒருவரின் உரிமைகள் இறுதியாக தீர்வு செய்யப்படும் வரை அரசு ஆவணங்கள் படியுள்ள அவர்கள் கோரும் உரிமைகளுக்குட்பட்ட எரிபொருள், தீவனம் மற்றும் மற்ற வன விளைப் பொருட்கள்

அவர்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் மாநில அரசு தகுந்த மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

18 - B. மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம். (Appointment of Collectors)

வன உயிரின (பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2002 நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து தொன்னூறு நாட்களுக்குள் அல்லது பிரிவு 18 ன் கீழ் அறிவிக்கை வெளிடப்பட்ட முப்பது நாட்களுக்குள் பிரிவு 18(1) ன் கீழ் அறிவிக்கை செய்யப்படும் வன உயிரின உய்விடப் பகுதிக்குள் அடங்கிய நிலத்தினுள்ளும் அதன் மேலும் எவருக்கேனும் உரிமைகள் உள்ளது பற்றியும் உரிமைகளின் தன்மை மற்றும் அதன் அளவுகள் ஆகியவற்றைப் பற்றியும் விசாரணை செய்து தீர்மானம் (determine) செய்ய மாவட்ட ஆட்சித் தலைவராக (Collector) இந்தச் சட்டத்தின் கீழ் செயல்படுவதற்கு அலுவலர் ஒருவரை மாநில அரசு நியமிக்க வேண்டும்.

19. மாவட்ட ஆட்சித் தலைவர் உரிமைகளை தீர்மானம் செய்ய வேண்டும். (Collector to determine rights)

பிரிவு - 18ன் கீழ் அறிவிக்கை வெளியான பின்பு வன உயிரின உய்விடத்திற்குள் அடங்கிய நிலத்தினுள்ளும் அதன் மேலும் ஒருவர் கோரும் உரிமைகள் குறித்து அவ்வாறான உரிமைகள் உள்ளதா எனவும், உரிமைகளின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றைக் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் விசாரித்து தீர்மானம் செய்ய வேண்டும்..

20. உரிமைகள் சேரத் தடை (Bar of accrual of rights).

பிரிவு 18ன் கீழ் அறிவிக்கை வெளியான பின்பு அவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியின் எல்லைக்குள் அடங்கிய நிலம் அல்லது நிலத்தின் மீது, உரிமை இறக்கம்படியோ (succession) உயில் படியோ (testamentary) அல்லது விருப்புறுதி இல்வழி அதாவது உயில் ஏதும் எழுதி வைக்காமல் ஒருவர் இறக்கும் போது வரும் சட்டப் பூர்வமான உரிமைப் (intestate) படியோ அல்லாமல் வேறு எந்த வகையிலும் உரிமையினை ஒருவர் அடையக் கூடாது.

21. மாவட்ட ஆட்சித் தலைவரின் பொது அறிவிப்பு (Proclamation by Collector)

பிரிவு 18 ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் வன உயிரின உய்விடப் பகுதியிலும் அதன் அண்மையிலும் (neighbourhood) அமைந்துள்ள ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் அங்குள்ள வட்டார மொழியில் கீழ்கண்டவைகளை உள்ளடக்கிய பொது அறிவிப்பு (Proclamation) ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியிட வேண்டும்.

(a) வன உயிரின உய்விடத்தின் இருப்பிடம், எல்லைகள் ஆகியவற்றை எவ்வளவு முடியுமோ அவ்வளவு சரியான அளவில் குறிப்பிடுதல்;

(b) பிரிவு 19 ன் கீழ் உரிமைகளை கோரும் ஒருவர்,அவர் கோரும் உரிமைகளின் தன்மை மற்றும் அதன் அளவுகளை உரிய விபரங்களுடனும் இழப்பீடு ஏதும் கோரினால் இழப்பீடுத் தொகை மற்றும் அதன் விபரங்களையும் எழுத்து மூலமாக அதற்கென வகுத்தமைக்கப்பட்ட (prescribed) படிவத்தில், பொது அறிவிப்பு வெளியிடப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு செய்யக் கோருதல்

22. மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை (Inquiry by Collector)

உரிமை கோருபவர்களுக்கு வகுத்தமைக்கப்பட்ட அறிவிப்பு (prescribed notice) வழங்கிய பின்பு, கீழ்கண்டவைகள் மீது அரசு ஆவணங்கள் மற்றும் அத்தகைய உரிமை கோரல்களைப் பற்றி அறிந்தவர்களின் சாட்சியங்கள் மூலம் உறுதி செய்யும்படியான விசாரணையினை மாவட்ட ஆட்சித் தலைவர் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

(a) பிரிவு 21 ன் சட்டக் கூறு (b) ன் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் கொணரப்பட்ட உரிமை கோரல்கள்; மற்றும்

(b) பிரிவு 21 ன் சட்டக் கூறு (b) ன்படி கோரப்படாத ஆனால் பிரிவு 19 ன் கீழ் குறிப்பிடப்பட்ட உரிமைகள் ஏதும் இருத்தல்.

23. மாவட்ட ஆட்சித் தலைவரின் அதிகாரங்கள் (Powers of Collector)

மேற்கண்ட விசாரணையின் பொருட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் கீழ்க்கண்ட அதிகாரங்களை பிரயோகப்படுத்தலாம் -

(a) எந்த நிலத்திலும் நுழைந்து நில அளவை மேற்கொண்டு, எல்லைகளை வரையறை செய்து அவற்றின் வரைபடங்களை தயார் செய்தல் அல்லது வேறு ஒரு அலுவலர் இப்பணிகளை செய்ய அதிகாரமளித்தல்;

(b) உரிமை வழக்குகளை விசாரிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரங்கள்.

24 . உரிமைகளைக் கொண்டடைதல் (Acquisition of rights)

(1) நிலம் அல்லது அதன் மீதான பிரிவு 19ன் கீழான உரிமை கோரல் எதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முழுவதுமாக ஏற்று அல்லது நிராகரித்து அல்லது பகுதி ஏற்றும் பகுதி நிராகரித்தும் உத்தரவு பிறப்பிக்கலாம்.

(2) அத்தகைய உரிமை கோரல்கள் முழுவதுமாகவோ அல்லது பகுதி யாகவோ ஏற்றுக் கொள்ளப்பட்டால் -

(a) உத்தேச வன உயிரின உய்விடத்தின் எல்லைகளுக்குள்ளிருந்து அத்தகைய நிலப்பகுதியை மாவட்ட ஆட்சித் தலைவர் விலக்கவிடலாம் ; அல்லது

(b) நிலச் சொந்தகாரர் அல்லது உரிமை பெற்றுள்ளவருக்கும் அரசுக்கும் இடையே ஒரு உடன்பாடு வழியாக நிலச் சொந்தக்காரர் அல்லது நிலத்தின் மீது உரிமை உள்ளவர் அவரது உரிமையை அதற்குரிய இழப்பீட்டுத் தொகையினை பெற்றுக்கொண்டு அரசுக்கு சரண் செய்ய ஒப்புக் கொள்ளும் நிகழ்வுகளைத் தவிர மற்ற இனங்களில் 1894 ஆம் வருடத்திய நில எடுப்புச் (land acquisition Act 1894) சட்டத்தின் கீழ் வகை செய்துள்ளபடி அத்தகைய நிலம் அல்லது உரிமைகளை பெற்றடைய (acquire) மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(c) வன உயிரின உய்விடத்தின் எல்லைகளுக்குள் அடங்கிய எந்த ஒரு நிலம் அல்லது அது சம்மந்தப்பட்ட எந்த ஒரு நபரின் உரிமையும் தொடர்ந்து நீடிக்க தலைமை வன உயிரினக் காப்பாளருடன் கலந்தாய்ந்து (in consultation with) மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதிக்கலாம்.

25. நில எடுப்பு நடவடிக்கைகள் (Acquisition proceedings)

(1) நிலம் அல்லது அதன் மீதான உரிமைகளை பெற்றடையும் (acquire) குறிநோக்கத்தில் -

(a) மாவட்ட ஆட்சித்தலைவர் என்பவர் 1894 ஆம் வருடத்திய நிலம் எடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைத் தொடரும் மாவட்ட ஆட்சித் தலைவராக கொள்ளப்படுவார்;

(b) உரிமை கோருபவர், 1894 ஆம் ஆண்டு நிலம் எடுப்பு சட்டத்தின் பிரிவு 9 ன்படி வழங்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு ஆஜராகும் அக்கரையுள்ள நபராக கொள்ளப்படுவார்;

(c) 1894 ஆம் வருடத்திய நில எடுப்புச் சட்டப் பிரிவு 9க்கு முன் உள்ள பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ளவை யாவும் நிறைவேற்றப்பட்டதாக (complied with) கொள்ளப்படும்;

(d) உரிமைக் கோருபவர், இழப்பீடு வழங்கலில் தனக்கு வழங்கப்பட்ட அளிப்பீட்டை (award) ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில், அவர் நில எடுப்புச் சட்டம் பிரிவு 18ன் பொருள்படி (within the meaning of sec.18) , இழப்பீடு அளிப்பினை ஏற்றுக்கொள்ளாத ஒரு அக்கரையுள்ள நபராக கொள்ளப்படுவதோடு அச்சட்டத்தின் பகுதி III-ன் கீழ் சொல்லப்பட்டுள்ளவைகள்படி நிவாரணம் கோருவதற்கும் தகுதியுடையவர் ஆவார்;

(e) உரிமை கோருபவரின் சம்மதத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது இரு தரப்பின் சம்மதத்துடன் நீதிமன்றமோ, இழப்பீட்டை நிலமாகவோ, பணமாகவோ அல்லது பகுதி நிலம் மற்றும் பகுதி பணமாகவோ வழங்கலாம்; மற்றும்

(f) பொது வழி அல்லது பொது மேய்ச்சல் நிலம் இவற்றை தடை செய்யும் போது மாவட்ட ஆட்சித் தலைவர் மாநில அரசின் முன் அனுமதி பெற்று, கூடுமானவரை நடைமுறைக்கு உகந்ததும், வசதியானதுமான மாற்று வழி அல்லது மாற்று மேய்ச்சல் நிலம் தருதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் எந்த ஒரு நிலத்தையோ அல்லது அது சம்மந்தமான நலனையோ (Interest) அரசு எடுத்துக் கொள்வது என்பது பொது நோக்கத்திற்காக எனக் கொள்ளப்படும்.

25 -A. நிலம் எடுப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கான காலக்கெடு (Time limit for completion of acquisition proceedings)

(1) பிரிவு 18ன் கீழான அறிவிக்கை வெளியான தேதியிலிருந்து, முடிந்தவரை இரண்டு வருட காலக் கெடுவிற்குள் பிரிவு 19 முதல் 25 முடிய உள்ள நடவடிக்கைகள் அனைத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் நிறைவு செய்ய வேண்டும்.

(2) எந்த காரணங்களுக்காவது இரண்டாண்டு காலக் கெடுவிற்குள் நிலம் எடுப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படவில்லை என்றாலும் பிரிவு 18 ன் படியான அறிவிக்கை காலாவதியாகாது.

26. மாவட்ட ஆட்சியரின் அதிகாரங்களை மற்றவருக்கு ஒப்படைத்தல் (Delegation of Collector's powers)

பிரிவுகள் 19 முதல் 25 முடிய உள்ளவற்றின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவரால் செலுத்தப்படக் கூடிய அதிகாரங்கள் அல்லது செய்யப்பட வேண்டிய பணிகளை, குறிப்பிடப்படும் வேறு எந்த ஒரு அலுவலராவது அத்தகைய அதிகாரங்களை செலுத்தவும் மற்றும் செயல்படவும் மாநில அரசு ஒரு பொது அல்லது சிறப்பு ஆணை மூலம் உத்திரவிடலாம்.

26-A. ஒரு பகுதியை வன உயிரின உய்விடமாக சாற்றல் செய்தல் .- (Declaration of area as sanctuary)

1) (a) பிரிவு 18ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்டு உரிமை கோரல்களை சமர்பிப்பதற்கான காலக்கெடு முடிந்து, வன உயிரின உய்விடமாக சாற்றல் செய்ய உத்தேசிக்கப்பட்ட பகுதிக்குள் உள்ள எந்த ஒரு நிலம்

சம்மந்தமாகவும் உரிமை கோரல்கள் ஏதும் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அத்தகைய உரிமைக் கோரல்கள் அனைத்தும் மாநில அரசால் முடிவு செய்யப்பட்ட நிலையிலும் ; அல்லது

(b) ஒரு காப்புக் காட்டிற்குள் அடங்கிய எந்த ஒரு பரப்போ அல்லது கரையாட்சிக் கடலின் (Territorial Waters) எந்த ஒரு பகுதியோ, உயிர்ச் சுற்றுச் சூழலியல் (ecological) , விலங்கினங்கள்;(Faunal)/ தாவர இனங்கள் (floral), புவியமைப்பியல் (Geomophological), இயற்கை மற்றும் விலங்கியல் ரீதியாக வன உயிரினங்களையும் அதன் சுற்றுச் சூழலையும் பாதுகாத்தல், விருத்தியடையச் செய்தல் (propagating) மற்றும் மேம்பாடடையச் செய்தலில் முக்கியத்துவம் வாய்ந்து விளங்குவதாக மாநில அரசு கருதி அப்பகுதியினை வன உயிரின உய்விடமாக அமைக்கவிருக்கும் நிலையிலும், வன உயிரின உய்விடத்தில் உள்ளடங்கும் பகுதியின் எல்லைகளை குறிப்பிட்டு ஒரு அறிவிக்கையினை மாநில அரசு வெளியிட்டு, அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்படும் தேதியிலிருந்து அப்பகுதி வன உயிரின உய்விடமாகும் என சாற்றல் செய்ய வேண்டும்.

இருப்பினும் வன உயிரின உய்விடப் பகுதிக்குள் கரையாட்சிக்கடல் பகுதி எதுவும் அடங்குமானால் அத்தகைய அறிவிக்கை செய்யும் முன்பு மத்திய அரசின் முன் ஒப்புதலை மாநில அரசு பெற வேண்டும்.

மேலும் மத்திய அரசின் முதன்மை நேவல் ஹைட்ரோகிராபருடன் கலந்து ஆலோசித்தும் உள்ளூர் மீனவர்களின் தொழில் நலனை பாதுகாக்க போதிய வழி முறைகளையும் மேற்கொண்ட பிறகே கரையாட்சி கடல் பகுதியின் எல்லைகள் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(2) உட்பிரிவு 1 ல் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும் கரையாட்சிக் கடல் பகுதியின் ஊடே கபடமில்லாமல் பயணிக்கும் படகு அல்லது நீர்க்கலன்களின் உரிமையை உட்பிரிவு 1 ன் கீழ் வெளியிடப்படும் அறிவிக்கை பாதிக்காது.

(3) தேசிய வாரியத்தின் (National Board) பரிந்துரையின் மீது அல்லாமல் மாநில அரசு ஒரு வன உயிரின உய்விடத்தின் எல்லைகளை மாற்றியமைக்கக் கூடாது.

27. வன உயிரின உய்விடத்திற்குள் நுழைவதற்கு கட்டுப்பாடுகள் (Restriction on entry in sancturary)

(1) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களைத் தவிர வேறு யாரும் பிரிவு 28 ன் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டில் கண்ட நிபந்தனைகளின்படி அல்லாது வன உயிரின உய்விடப் பகுதிக்குள் நுழையவோ, வசிக்கவோ கூடாது .

(a) பணியில் ஈடுபட்டிருக்கும் பொது ஊழியர்;

(b) தலைமை வன உயிரினக் காப்பாளரால் அல்லது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் வன உயிரின உய்விடத்தின் எல்லைக்குள் வசிக்க அனுமதிக்கப்பட்டவர்;

(c) வன உயிரின உய்விடப் பகுதியின் எல்லைக்குள் அசையாச் சொத்துக்கள் மீது உரிமை எதுவும் உள்ளவர்;

(d) பொது நெடுஞ்சாலை வழியாக வன உயிரின உய்விடப் பகுதியின் ஊடே செல்பவர் ;

(e) மேற்கண்ட சட்டக் கூறுகள் (a), (b) அல்லது (c) ல் கண்டுள்ளவரைச் சார்ந்திருப்பவர்கள்.

(2) வன உயிரின உய்விடப் பகுதிக்குள் தங்கியிருக்கும் ஒவ்வொருவரும் அவர் அங்கு தங்கியிருக்கும் காலம் வரையிலும். -

(a) இச்சட்டத்திற்கு எதிரான குற்றங்கள் வன உயிரின உய்விடத்திற்குள் நடைபெறுவதைத் தடுக்கவும்;

(b) இச்சட்டத்திற்கெதிரான குற்றம் வன உயிரின உய்விடத்தில் நடைபெற்றுள்ளதாக நம்புவதற்கான காரணங்கள் இருக்கும்போது அக்குற்றவாளியைக் கண்டு பிடிக்கவும் கைது செய்யவும், உதவி புரியவும்;

(c) எந்த ஒரு வன விலங்காவது இறந்து விட்டால் அது குறித்து தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தகவல் தெரிவிப்பதுடன் இந்த அலுவலர்கள் இறந்த விலங்கின் உடலை பொறுப்பேற்கும் வரை அதனைப் பாதுகாக்கவும்;

(d) வனஉயிரின உய்விடப் பகுதிக்குள் தீ நிகழ்வு எதுவும் ஏற்பட்டால் அதை அணைக்கவும் மேலும் பரவாமல் தடுக்கவும், வன உயிரின உய்விடப் பகுதிகளில் தீ நிகழ்வுகள் பற்றித் தெரிந்தாலோ தகவல் கிடைத்தாலோ தன் அதிகார வரம்பில் சட்டப்படி எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளை எடுக்கவும்; மற்றும்

(e) இந்த சட்டத்திக்கெதிரான குற்றம் ஏதும் நிகழ்வதைத் தடுப்பதிலும், குற்றம் பற்றிப் புலனாய்வு செய்வதிலும், வன அலுவலர், தலைமை வன உயிரினக் காப்பாளர், வன உயிரினக் காப்பாளர் அல்லது காவல் அலுவலர் ஆகியோருக்கு உதவி செய்யவும் கடமைப்பட்டவர் ஆவார்.

(3) வன உயிரின உய்விடத்தின் எல்லைக் குறியீடுகளை சேதப் படுத்த வேண்டும் என்ற கருத்திலோ (intention) அல்லது 1860 வருடத்திய இந்திய தண்டனைச் சட்டத்தில் (1860ல் 45வது சட்டம்) வரைவுரைத்துள்ளபடியான (defined) முறையற்ற ஆதாயத்தை (wrongful gain) உண்டாக்குவதற்கோ, எந்த ஒரு நபரும்

எல்லைக் குறியீடுகளை மாற்றியமைக்கவோ, அழிக்கவோ, நகர்த்தவோ அல்லது உருச்சிதைவு செய்யவோ கூடாது.

(4) வன உயரின உய்விடத்திற்குள் யாரும் எந்த வன விலங்கையும் சீண்டவோ, தொந்தரவு செய்யவோ அல்லது வன உயிரின உய்விடப் பகுதிக்குள் குப்பை போடவோ கூடாது.

28. அனுமதிச் சீட்டு வழங்குதல் (Grant of permit)

(1) வன உயரின உய்விடப் பகுதிக்குள் நுழைவதற்கு அல்லது தங்குவதற்கு, கீழ் குறிப்பிட்ட அனைத்துக் காரணங்களுக்காகவோ அல்லது ஏதாகிலும் ஒரு காரணத்திற்காகவோ, எந்த ஒரு நபருக்கும் அவரது விண்ணப்பத்தின் பேரில் தலைமை வன உயிரினக் காப்பாளர் அனுமதிச் சீட்டு வழங்கலாம்.

(a) வன விலங்குகளைப் பற்றி புலனாய்வு செய்தல் அல்லது கற்றறிதல் அல்லது அவற்றிற்குத் துணையான அல்லது இடையீடான காரணங்கள் ;

(b) புகைப்படம் எடுத்தல்;

(c) அறிவியல் ஆராய்ச்சி;

(d) சுற்றுலா;

(e) வன உயரின உய்விடப் பகுதிக்குள் தங்கி வாழ்பவர்களுடன் சட்டப்படியான வியாபார பரிவர்த்தனை செய்தல்;

(2) வன உயரின உய்விடத்திற்குள் நுழைதல் அல்லது தங்குவதற்கான அனுமதிச் சீட்டானது, விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் நிர்ணயிக்கப்படுகிற கட்டணத்தை செலுத்துவதின் பேரிலும் வழங்கப்படும்.

29. வன உயரின உய்விடத்தில் அனுமதிச் சீட்டின்றி அழித்தல் முதலானவை தடை செய்யப்படுகிறது.- (Destruction, etc. in a sanctuary prohibited without a permit)

தலைமை வன உயிரினக் காப்பாளர் வழங்கும் அனுமதிச் சீட்டின் கீழ், அந்த அனுமதிச் சீட்டின் படியல்லாமல் எந்த ஒரு நபரும் வன உயிரின உய்விடத்தில் எந்த ஒரு வன உயிரினத்தையும், வன விளைப் பொருளையும் அழிக்கவோ, பயன்படுத்தவோ (exploit) அப்புறப்படுத்தவோ அல்லது எந்த ஒரு செய்கையின் மூலமும் வனவிலங்கின் வாழ்விடத்தை அழிக்கவோ, சேதப்படுத்தவோ அல்லது திருப்பி விடவோ (divert) அல்லது வன உயிரின உய்விடத்திற்குள் வரும் அல்லது வன உயிரின உய்விடத்திலிருந்து வெளியேறும் தண்ணீர் ஓட்டத்தை நிறுத்தவோ, அதிகரிக்கவோ அல்லது திசை திருப்பி விடவோக் கூடாது. மேலும் வன உயிரின உய்விடத்திலிருந்து வன உயிரினங்களை அப்படி அப்புறப்படுத்துவதோ அல்லது வன உயிரின உய்விடத்திற்குள் வரும் அல்லது வன உயிரின உய்விடத்திலிருந்து வெளியேறும் தண்ணீர் ஓட்டத்தை மாற்றுவதோ, அங்குள்ள வன உயிரின மேம்பாட்டிற்கும், சிறப்பான மேலாண்மைக்கும் தேவையான ஒன்று என மாநில அரசு, மாநில வன உயிரின வாரியத்துடன் கலந்தாலோசித்து திருப்தியடைந்து,

அத்தகைய அனுமதிச் சீட்டினை வழங்குவதற்கு அதிகாரமளித்தாலன்றி தலைமை வன உயிரினக் காப்பாளர் அனுமதிச் சீட்டினை வழங்கக் கூடாது.

இருப்பினும், இவ்வாறு வன உயிரின உய்விடப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்படும் வனவிளைப் பொருட்களை வன உயிரின உய்விடத்திற்குள்ளும் மற்றும் அதைச் சுற்றி வாழும் மக்களின் உண்மையான சொந்த தேவைகளுக்காக அல்லாமல் வியாபாரத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது.

விளக்கம் :-

இந்தப் பிரிவின் குறிநோக்கத்தில், பிரிவு 33ன் சட்டக் கூறு (d) ன் கீழ் அனுமதிக்கப்பட்ட மேய்ச்சல் அல்லது கால்நடைகளின் நடமாட்டத்தை இந்தப் பிரிவின் கீழ் தடை செய்யப்பட்டச் செயலாக கொள்ளல் கூடாது.

30 - தீ ஏற்படுத்துவது தடை செய்யப்படுகிறது (Causing fire prohibited).

வன உயிரின உய்விடத்திற்கு அழிவை உண்டாக்கும் வகையில் எவரும் வன உயிரின உய்விடத்திற்கு தீ வைப்பதோ, அல்லது தீயை மூட்டுவதோ அல்லது எரியும் பொருள்களை வன உயரின உய்விடத்திற்குள் விட்டுச் செல்லுதலோ கூடாது.

31 - வன உயிரின உய்விடத்திற்குள் ஆயுதத்துடன் நுழைவது தடை செய்யப்படுகிறது (Prohibition of entry into sanctuary with weapon).

தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி எவரும் வன உயிரின உய்விடத்திற்குள் ஆயுதங்களுடன் நுழையக் கூடாது.

32 - ஊறு விளைவிக்கும் பொருட்களை பயன்படுத்தத் தடை (Ban on use of injurious substances).

வன உயிரின உய்விடத்திற்குள்ளிருக்கும் எந்த வன உயிருக்கும் காயம் ஏற்படுத்தக் கூடிய அல்லது ஆபத்து ஏற்படுத்தக் கூடிய பொருள் அல்லது வேதிய பொருட்கள் அல்லது வெடி மருந்துகள் போன்ற எவற்றையும் எவரும் வன உயிரின உய்விடத்தில் பயன்படுத்தக் கூடாது.

33 - வன உயிரின உய்விடங்களின் கட்டுப்பாடு (Control of sanctuaries)

அனைத்து வன உயிரின உய்விடங்களின் கட்டுப்பாடு, மேலாண்மை மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கு தலைமை வன உயிரினக் காப்பாளர் பொறுப்பதிகாரியாவார். மேலும் மேற்கண்ட பணிகளின் தேவைக்காக வன உயிரின உய்விடத்தின் எல்லைக்குள் :-

(a) சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள், வேலிகள், தடுப்பு வாயில்கள் ஆகியவற்றை கட்டுவதோடு வன உயிரின உய்விடத் தேவைக்கு அவசியம் எனக் கருதும் மற்றப் பணிகளையும் செய்யலாம்.

இருப்பினும் வன உயிரின உய்விடப் பகுதிக்குள் வியாபார நோக்கிலான சுற்றுலாப் பயணிகள் தங்குமிடங்கள், உணவு விடுதிகள், மிருகக் காட்சி சாலைகள், மற்றும் சபாரிப் பார்க்குகள் ஆகியவற்றை தேசிய வன உயிரின வாரியத்தின் முன் அனுமதி பெறாமல் கட்டக் கூடாது.

(b) வன உயிரின உய்விடத்தில் உள்ள வன விலங்குகளின் பத்திரத்தையும் மற்றும் வன உயிரின உய்விடம் மற்றும் அதில் உள்ள வன விலங்குகளின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்த உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்;

(c) வன உயிரினங்களின் நன்மைக்காக வன உயிரினங்களின் வாழ்விடங்களின் மேம்பாட்டிற்கு தேவையென தான் கருதும் நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம்;

(d) வன உயிரினங்களின் நலனை உத்தேசித்து கால் நடை மேய்ச்சல் அல்லது அவற்றின் நடமாட்டத்தை ஒழுங்கு படுத்தலாம், கட்டுப்படுத்தலாம் அல்லது தடை செய்யலாம்.

33–A கால் நடைகளுக்கான நோய் தடுப்பு நடவடிக்கைகள். (Immunisation of livestock)

(1) வன உயிரின உய்விடத்திற்குள் அல்லது அதிலிருந்து 5 கிமீ சுற்றளவிற்குள் வைக்கபட்டுள்ள கால்நடைகளுக்கு தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகளை வகுத்தமைக்கப்படும் முறையில் தலைமை வன உயிரினக் காப்பாளர் மேற்கொள்ள வேண்டும்.

(2) தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்குட்படுத்தப்படாத கால்நடைகள் எதையும் எவரும் வன உயிரின உய்விடத்திற்குள் அனுப்பவோ, அனுப்பச் செய்யவோ, மேய்க்கச் செய்யவோ கூடாது.

33 – B ஆலோசனைக் குழு (Advisory committee). -

(1) தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அவரால் நியமிக்கப்படும் வனப்பாதுகாவலர் தகுதி நிலைக்கு குறையாத அலுவலரை தலைவராகவும், எந்தச் சட்ட மன்றத் தொகுதிக்குள் வன உயிரின உய்விடம் அமைந்துள்ளதோ அந்தச் சட்ட மன்றத் தொகுதி உறுப்பினரை உறுப்பினராகவும், ஊராட்சி அமைப்புகளின் (Panchayat Raj Institutions) மூன்று பிரதிநிதிகளையும், அரசு சாரா நிறுவனங்களின் (NGO) இரண்டு பிரதிநிதிகளையும், வன உயிரின பாதுகாப்பில் ஆர்வத் துடிப்புடன் செயல்படும் மூன்று நபர்களையும், உள்துறை (home) மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளிலிருந்து துறைக்கு ஒரு பிரதிநிதியும், கௌரவ வன உயிரினக் காப்பாளர் இருப்பின் அவரையும், மற்றும் வன உயிரின உய்விடத்தின் பொறுப்பு வகிக்கும் அலுவலரை உறுப்பினர் செயலாளராகவும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும்.

(2) வன உயிரின உய்விடத்தின் மேலான பாதுகாப்பிற்கும், மேலாண்மைக்கும்-மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் இத்தகைய நடவடிக்கைகளில் வன உயிரின உய்விடத்திற்குள்ளும் அதைச் சுற்றிலும் வசிக்கும் மக்களின் பங்கேற்பைப் பெறவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் குழு உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

(3) இந்தக் குழுவானது தனது அலுவலை நடத்தும் முறைகள் (procedure) மற்றும் தனது கூட்டத்திற்குத் தேவையான குறைவெண் வரம்பு (quorum) ஆகியவற்றை தானே முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

34 - ஆயுதம் வைத்திருப்போர் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டியது (Registration of certain persons in possession of arms).

(1) ஒரு பகுதி வன உயிரின உய்விடமாக சாற்றல் செய்யப்பட்டதிலிருந்து மூன்று மாத காலக் கெடுவுக்குள் வன உயிரின உய்விடப் பகுதியில் அல்லது அதை ஒட்டி பத்து கிலோ மீட்டர் தூரத்திற்குள் வசிப்பவரும், 1959 ஆம் ஆண்டு (1959 ம் வருடத்திய 54 வது சட்டம்) ஆயுதச் சட்டத்தின்படி ஆயுதம் வைத்துக் கொள்ள உரிமம் பெற்றவர் எவரும் மற்றும் ஆயுதச் சட்டத்தின் வகை முறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆனால் ஆயுதம் வைத்திருப்பவர் எவரும் அதற்கென வகுத்தமைக்கப்படும் படிவத்தில், நிர்ணயிக்கப்படும் காலகெடுவிற்குள் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை செலுத்தி தனது பெயரை பதிவு செய்துக் கொள்ள தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2) உட்பிரிவு (1) ன் படி விண்ணப்பம் ஒன்றினை பெற்றவுடன் விண்ணப்பதாரரின் பெயரை வகுத்தமைக்கப்படும் வழிமுறைகளின் படி தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

(3) தலைமை வன உயிரினக் காப்பாளரின் முன் ஒருங்கிசைவின்றி (concurrence) வன உயிரின உய்விடப் பகுதியிலிருந்து 10 கி.மீ ஆரத்திற்குள் (radius) குடியிருக்கும் எவருக்கும் 1959 (1959 ம் வருடத்திய சட்டம் எண். 54) வருடத்திய ஆயுதச் சட்டத்தின்படி புதிய உரிமங்கள் வழங்கக் கூடாது.

34- A - நில ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான அதிகாரம் (Power to remove encroachment). -

(1) அப்போதைக்குச் செல்லாற்றத்திலுள்ள வேறு எந்தச் சட்டத்திலும் எது எவ்வாறு இருப்பினும், உதவி வனப்பாதுகாவலர் தகுதி நிலைக்குக் குறையாத எந்த அலுவலரும் -

(a) இச்சட்டத்தின் வகை முறைகளுக்கு முரணாக அரசு நிலத்தை முறைகேடாக பற்றுடைமையில் (unauthorisedly occupying) வைத்திருக்கும் எந்த ஒரு நபரையும் வன உயிரின உய்விடத்திலிருந்தோ தேசியப் பூங்காவிலிருந்தோ வெளியேற்றலாம்;

(b) தேசியப் பூங்கா அல்லது வன உயிரின உய்விடத்திற்குள் அரசு நிலத்தில் நிர்மானிக்கப்பட்டுள்ள அனுமதி பெறாத அமைப்புகள், கட்டிடங்கள் அல்லது கட்டுமானங்களை அகற்றலாம். மேலும் அத்தகைய நபரின் கருவிகள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்கள் மற்றும் உடைமைகளைத் துணைவனப்பாதுகாவலர் நிலைக்குக் குறையாத ஒரு அலுவலரின் ஆணையின் மூலம் அரசுக்கு பறிமுதல் செய்யலாம்..

இருப்பினும் பாதிக்கப்படும் நபருக்கு அவரது தரப்பினை சொல்வதற்கான வாய்ப்பினை வழங்காமல் அத்தகைய ஆணையினை பிறப்பிக்கக் கூடாது.

(2) இந்தச் சட்டத்தின் வகை மீறல்களுக்கு வேறு எந்த தண்டனைகள் வழங்கப்பட்டபோதிலும் இந்தப் பிரிவின் வகை முறைகளும் பொருந்தும்.

35 - தேசியப் பூங்காக்களைச் சாற்றல் செய்தல் (Declaration of National Parks)

(1) ஒரு நிலப்பகுதி (an area) ஒரு வன உயிரின உய்விடத்திற்குள் இருந்தாலும் இல்லையென்றாலும், அப்பகுதியின் உயிர்ச் சுற்றுச் சூழலியல் (ecological), விலங்கினங்கள் (faunal), தாவர இனங்கள் (floral), புவியமைப்பியல் (geomorphological) அல்லது விலங்கியல் ரீதியான சேர்க்கை (zoological association) அல்லது இவற்றின் முக்கியத்துவத்தின் காரணமாக அப்பகுதியில் உள்ள வன உயிரினங்களை (wildlife) அல்லது அவற்றின் சுற்றுப்புறச் சூழலை (environment) பாதுகாத்தல், விருத்தியடையச் செய்தல் (probagating) மற்றும் மேம்பாடடையச் செய்வதற்காக அப்பகுதியினை தேசியப் பூங்காவாக அமைத்துருவாக்க வேண்டியுள்ளது என மாநில அரசுக்கு தோன்றும் பொழுது, அத்தகைய நிலப்பகுதியினை தேசியப் பூங்காவாக அமைத்துருவாக்கவிருக்கும் தனது எண்ணத்தினை (intention) அறிவிக்கையின் மூலம் மாநில அரசு சாற்றல் செய்யலாம்.

இருப்பினும் அத்தகைய தேசியப் பூங்காவிற்குள் கரையாட்சிக் கடலின் (territorial waters) எப்பகுதியினையாவது சேர்க்கவிருக்கும் பட்சத்தில், வன உயிரின உய்விடச் சாற்றிலில் பிரிவு **26**-Aன் வகை முறைகள் எவ்வாறு பொருந்துகின்றனவோ அவ்வாறே தேசியப் பூங்காச் சாற்றலுக்கும் பொருந்தும்.

(2) உட்பிரிவு (1) ல் குறிப்பிடப்பட்ட அறிவிக்கையில் தேசியப் பூங்காவாக சாற்றல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளப் பகுதியின் எல்லைகளை வரையறை செய்து காட்ட வேண்டும்.

(3) தேசியப் பூங்கா ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளபோது உரிமைகளை விசாரணை செய்யவும், தீர்மானிக்கவும், உரிமைகள் அற்றுப் போகச் செய்யவும், வன உயிரின உய்விடத்திற்குப் போலவே இச்சட்டத்தின் பிரிவுகள் 19 முதல் பிரிவு 24 (2) (c) நீங்கலாக பிரிவு 26 – A முடிய உள்ள அனைத்துப் பிரிவுகளும் தேசியப் பூங்காவிற்கும் பொருந்தும்.

(4) கீழ்க்கண்ட நிகழ்வுகள் நடைபெற்று முடிந்த பின்பு -

(a) உரிமை கோரலுக்கான காலக்கெடு நிறைவு பெற்றும் உத்தேச தேசியப் பூங்கா சம்பந்தப்பட்ட நிலம் சம்பந்தப்பட்ட உரிமை கோரல்கள் அனைத்தும் மாநில அரசால் முடிவு செய்யப்பட்ட பின்னரும்; மேலும்

(b) தேசியப் பூங்காவில் சேர்க்க உத்தேசிக்கப்பட்ட நிலங்களின் எல்லா உரிமைகளும் மாநில அரசுக்குச் சொந்தமாகிய பின்பும்,

மாநில அரசு தேசியப் பூங்காவில் உள்ளடங்கும் பகுதிகளின் எல்லைகளைக் குறிப்பிட்டு ஒரு அறிவிக்கையினை வெளியிட்டு அவ்வறிவிக்கையில் குறிப்பிடப்படும் தேதியிலிருந்து அப்பகுதி தேசியப் பூங்காவாகும் எனச் சாற்றல் (declare) செய்ய வேண்டும்.

(5) தேசிய வன உயிரின வாரியத்தின் பரிந்துரையின்றி தேசியப் பூங்காவின் எல்லைகளை மாநில அரசு மாற்றக் கூடாது.

(6) தலைமை வன உயிரினக் காப்பாளர் வழங்கும் அனுமதிச் சீட்டின் கீழ், அந்த அனுமதிச் சீட்டின் படியல்லாமல் எந்த ஒரு நபரும் தேசியப் பூங்காவில் உள்ள எந்த ஒரு வன உயிரினத்தையும், வன விளைப் பொருளையும் அழிக்கவோ, பயன்படுத்தவோ (exploit) அப்புறப்படுத்தவோ அல்லது எந்த ஒரு செய்கையின் மூலமும் வனவிலங்கின் வாழ்விடத்தை அழிக்கவோ, சேதப்படுத்தவோ அல்லது திருப்பி விடவோ அல்லது தேசியப் பூங்காவிற்குள் வரும் அல்லது தேசியப் பூங்காவிலிருந்து வெளியேறும் தண்ணீர் ஓட்டத்தை நிறுத்தவோ, அதிகரிக்கவோ அல்லது திசை திருப்பி விடவோக் கூடாது. மேலும் தேசியப் பூங்காவிலிருந்து வன உயிரினங்களை அப்படி அப்புறப்படுத்துவதோ அல்லது தேசியப் பூங்காவிற்குள் வரும் அல்லது தேசியப் பூங்காவிலிருந்து வெளியேறும் தண்ணீர் ஓட்டத்தையோ மாற்றுவது, அங்குள்ள வன உயிரின மேம்பாட்டிற்கும், சிறப்பான மேலாண்மைக்கும் தேவையான ஒன்று என மாநில அரசு, தேசிய வன உயிரின வாரியத்துடன் கலந்தாலோசித்து திருப்தியடைந்து, அத்தகைய அனுமதிச் சீட்டினை வழங்குவதற்கு

அதிகாரமளித்தாலன்றி தலைமை வன உயிரினக் காப்பாளர் அனுமதிச் சீட்டினை வழங்கக் கூடாது.

இருப்பினும் இவ்வாறு தேசியப் பூங்காப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்படும் வனவிளைப் பொருட்களை வன உயிரின உய்விடத்திற்குள்ளும் மற்றும் அதைச் சுற்றி வாழும் மக்களின் உண்மையான சொந்த தேவைகளுக்காக அல்லாமல் வியாபாரத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது.

(7) தேசியப் பூங்காவிற்குள் எந்த ஒரு கால் நடையையும் மேய்ச்சலுக்கு அனுமதிக்கக் கூடாது. மேலும் தேசியப் பூங்காவில் நுழைய அனுமதிக்கப்பட்ட நபர் வாகனமாகப் பயன்படுத்தும் கால்நடையைத் தவிர வேறு எந்த கால் நடையையும் தேசியப் பூங்காவில் நுழைய அனுமதிக்கக் கூடாது.

(8) பிரிவுகள் 27 மற்றும் 28, பிரிவுகள் 30 லிருந்து 32 (இரண்டையும் உள்ளடக்கியது) மற்றும் பிரிவு 33ன் சட்டக் கூறுகள் (a), (b) மற்றும் (c), பிரிவு 33-A மற்றும் பிரிவு 34 ஆகியவற்றில் கண்ட வகை முறைகள் வன உயிரின உய்விடத்திற்கு பொருந்துவது போலவே தேசியப் பூங்காவிற்கும் பொருந்தும்.

விளக்கம் : வன உயிரின உய்விடத்திற்குட்பட்ட பகுதி அல்லது வேறு எந்த ஒரு பகுதியாக இருப்பினும், அவ்விற்றின் மீது உள்ள உரிமைகள் வேறு எந்த சட்டத்தின் படியோ அல்லது வேறு வகையிலோ அற்றுப் போகச் செய்யப்பட்டு (extinguished) மாநில அரசுக்கு சொந்தமாகியிருப்பின் மாநில அரசு அத்தகைய பகுதியை தேசியப் பூங்காவாக அறிவிக்கை செய்யலாம். இந்நிகழ்வில் இச்சட்டத்தின் பிரிவுகள் 19 முதல் 26 முடிய உள்ள பிரிவுகள் மற்றும் இப்பிரிவின் உட்பிரிவுகள் அதாவது பிரிவு 35 (3), 35(4) ஆகியவையின் சட்ட நடைமுறைகள் இதற்குப் பொருந்தாது.

36. நீக்கப்பட்டது.

36–A. பாதுகாப்பு ஒதுக்கு பகுதிகள் அறிவிக்கை மற்றும் மேலாண்மை (Declaration and Management of Conservation Reserve)

(1) அரசுக்குச் சொந்தமான எந்தப் பகுதியினையும் குறிப்பாக தேசியப் பூங்காக்கள் மற்றும் வன உயிரின உய்விடங்களை ஒட்டியுள்ள பகுதிகளையும் மற்றும் ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியினை மற்றொரு பாதுகாக்கப்பட்ட பகுதியுடன் இணைக்கக் கூடிய வகையில் அமைந்துள்ள பகுதிகளையும் அவற்றின் நிலத்தோற்றம் (landscape), கடல் தோற்றங்கள் (sea scapes), விலங்கினங்கள் மற்றும் தாவர இனங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு, உள்ளூர் மக்களுடன் கலந்தாலோசித்தப் பிறகு அப்பகுதியை 'பாதுகாப்பு ஒதுக்குப்பகுதி' என மாநில அரசு சாற்றல் செய்யலாம்.

இருப்பினும் பாதுகாப்பு ஒதுக்குப் பகுதி மத்திய அரசுக்கு சொந்தமான எந்த ஒரு இடத்தையாவது உள்ளடக்கியதாக இருப்பின் மாநில அரசு அவ்வாறு சாற்றல் செய்வதற்கு முன் மத்திய அரசின் முன் ஒப்புதலைப் பெற வேண்டும்.

(2) பிரிவு *18 (2)*, பிரிவு *27(2)*, *(3)*, *(4)*, பிரிவு **(30)**, பிரிவு *32*, *33* (b), 33(c) ஆகியவற்றின் வகை முறைகள் (provision) வன உயிரின உய்விடத்திற்கு எப்படிப் பொருந்துமோ அதே போல் பாதுகாப்பு ஒதுக்குக்குப் பகுதிக்கும் பொருந்தும்.

36-B. பாதுகாப்பு ஒதுக்குப் பகுதி மேலாண்மைக் குழு (Conservation Reserve Management Committee)

(1) பாதுகாப்பு ஒதுக்குப் பகுதியினை மேலாண்மை செய்யவும், பாதுகாக்கவும், பராமரிக்கவும் தலைமை வன உயிரினக் காப்பாளருக்கு ஆலோசனை வழங்க மாநில அரசு பாதுகாப்பு ஒதுக்குப் பகுதி மேலாண்மைக் குழு ஒன்றினை அமைக்க வேண்டும்.

(2) இந்தக் குழு வனம் அல்லது வன உயிரினத் துறையின் பிரதிநிதி ஒருவரை உறுப்பினர் - செயலாளராகவும், பாதுகாப்புப் பகுதி எந்தெந்த ஊராட்சிகளின் அதிகார வரம்பிற்குள் வருகிறதோ அந்த ஊராட்சிகளின் பிரதிநிதிகள் ஊராட்சிக்கு ஒரு பிரதிநிதி வீதமும், வன உயிரினப் பாதுகாப்பில் ஈடுபட்டுவரும் அரசு சாரா நிறுவனங்களின் மூன்று பிரதிநிதிகளையும் மற்றும் வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதிகளையும் கொண்டதாக இருக்கும்.

(3) பாதுகாப்பு ஒதுக்குப் பகுதி மேலாண்மைக்குழு தனது நடவடிக்கைகளுக்கான நெறிமுறைகளையும் தனது கூட்டத்திற்கு வருகை புரிய வேண்டிய குறைவெண் (quorum) வரம்பினையும் தானே ஒழுங்குமுறை படுத்திக் கொள்ளும்.

36–C சமுதாய ஒதுக்குப் பகுதிகள் அறிவிக்கை மற்றும் மேலாண்மை (Declaration and Management of Community Reserve)

(1) தேசியப் பூங்கா, வன உயிரின உய்விடம் அல்லது பாதுகாப்பு ஒதுக்குப் பகுதிக்குள் அமையப் பெறாமல் ஒரு சமுதாயத்திற்கோ (community) அல்லது தனிப்பட்ட நபர் ஒருவருக்கோ சொந்தமாக உள்ள நிலப் பகுதியினை அந்தச் சமுதாயமோ (community) அல்லது தனிப்பட்ட நபரோ வன உயிரினங்களையும் அதன் வாழ்விடத்தையும் பாதுகாக்க தானாக முன்வரும் பொழுது விலங்கினங்கள், தாவர இனங்கள் மற்றும் பரம்பரை பழக்க வழக்கங்கள் (traditions) அல்லது பண்பாட்டு பாதுகாப்பின் உயர்வு மற்றும் செயல் வழக்கங்களை பாதுகாக்கும் பொருட்டு சமுதாய ஒதுக்குப் பகுதியாக மாநில அரசு சாற்றல் செய்யலாம்.

(2) பிரிவு 18(2), பிரிவு 27(2), (3), (4), பிரிவு 30, பிரிவு 32, பிரிவு 33(b) (c) ஆகியவைகளின் வகை முறைகள் வன உயிரின உய்விடத்திற்கு எப்படிப் பொருந்துமோ அதே போல சமூக ஒதுக்குப் பகுதிகளுக்கும் பொருந்தும்.

(3) மாநில அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட மேலாண்மைகள் குழுவின் தீர்மானத்தின் படியல்லாமல் உட்பிரிவு (1)ன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட பின் சமூக ஒதுக்குப் பகுதி நிலத்தில் நில உபயோக முறையில் மாறுதல் செய்யக் கூடாது.

36-D. சமுதாய ஒதுக்குப் பகுதி மேலாண்மைக் குழு (Community Reserve Management Committee)

(1) சமுதாய ஒதுக்குப் பகுதியின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றின் பொறுப்பினை ஏற்கும் அதிகார அமைப்பாக சமுதாய ஒதுக்குப் பகுதி மேலாண்மைக் குழு ஒன்றினை மாநில அரசு அமைக்கலாம்.

(2) சமுதாய ஒதுக்குப் பகுதி மேலாண்மைக் குழுவானது கிராமப் பஞ்சாயத்தினால் நியமிக்கப்படும் ஐந்து பிரதிநிதிகளையும் அல்லது கிராம பஞ்சாயத்துக்கள் இல்லாத போது கிராம சபையினால் நியமிக்கப்படும் ஐந்து பிரதிநிதிகளையும் மற்றும் அப்பகுதிக்கு அதிகார வரம்பு பெற்ற வனம் அல்லது வன உயிரினத் துறையின் பிரதிநிதி ஒருவரையும் கொண்டதாக இருக்க வேண்டும்.

(3) சமுதாய ஒதுக்குப் பகுதிக்கான மேலாண்மைத் திட்டத்தைத் தயாரிக்கவும், அதைச் செயல்படுத்தவும், அப்பகுதியில் வன உயிரினங்கள் மற்றும் அதன் வாழ்விடங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சமுதாய ஒதுக்குப் பகுதி மேலாண்மை குழு தகுதி வாய்ந்த அதிகார அமைப்பாகும். (Competent authority)

(4) சமுதாய ஒதுக்குப் பகுதி மேலாண்மைக் குழு தனது தலைவரை (Chairman) தேர்ந்தெடுக்கும். அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் அதன் தலைவர் சமுதாய ஒதுக்குப் பகுதிக்கு கௌரவ வன உயிரினக் காப்பாளராகவும் இருப்பார்.

(5) சமுதாய ஒதுக்குப் பகுதி மேலாண்மைக் குழு அதன் நடவடிக்கைகளுக்கான நெறிமுறைகளையும் அதன் கூட்டத்திற்கு தேவையான குறைவெண் வரம்பினையும் (quorum) தானே ஒழுங்கு முறைப்படுத்திக் கொள்ளும்.

37 . நீக்கப்பட்டு விட்டது.

மத்திய அரசினால் சாற்றல் செய்யப்படும் வன உயிரின உய்விடங்கள் அல்லது தேசிய பூங்காக்கள்

38. வன உயிரின உய்விடங்களையும், தேசியப் பூங்காக்களையும் சாற்றல் செய்வதற்கான மத்திய அரசின் அதிகாரம் (Power of Central Government to declare areas as sanctuaries or National Parks)

(1) மாநில அரசு ஒரு வன உயிரின உய்விடப் பகுதிக்கு உட்படாத எப்பகுதியையாவது மத்திய அரசுக்கு குத்தகைக்கு அல்லது அதன் கட்டுப்பாட்டிற்கு மாறுதல் செய்துள்ள நிலையில் அப்படி மாற்றம் செய்த பகுதி இச்சட்டத்தின் பிரிவு 18ன் படியான நிபந்தனைகளை நிறைவு செய்வதாக இருப்பின் அப்பகுதியை மத்திய

அரசு ஒரு அறிவிக்கை வாயிலாக வன உயிரின உய்விடமாக சாற்றல் செய்யலாம். மேலும் அவ்வாறு சாற்றல் செய்யப்பட்ட வன உயிரின உய்விடத்திற்கு இச்சட்டத்தின் பிரிவுகள் 18 முதல் 35 முடிய மற்றும் பிரிவு 54, பிரிவு 55 ஆகியவை மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட வன உயிரின உய்விடத்திற்குப் போலவே பொருந்தும்.

(2) உட்பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு பகுதியாவது மத்திய அல்லது மாநில அரசால் வன உயிரின உய்விடமாக சாற்றல் செய்யப்பட்டிருந்தாலும், சாற்றல் செய்யப்படாமலிருந்தாலும், பிரிவு 35ல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்வதாக இருப்பின் அத்தகைய பகுதியை மத்திய அரசு ஓர் அறிவிக்கையின் மூலம் தேசியப் பூங்காவாக சாற்றல் செய்யலாம். மேலும் பிரிவுகள் 35, 54 மற்றும் 55ன் வகை முறைகள் மாநில அரசால் சாற்றல் செய்யப்பட்ட தேசியப் பூங்காவிற்கு எப்படி பொருந்துமோ அதைப் போலவே இதற்கும் பொருந்தும்.

(3) மத்திய அரசால் சாற்றல் செய்யப்படும் வன உயிரின உய்விடம் அல்லது தேசியப்பூங்காக்களை பொறுத்தவரை உட்பிரிவுகள் (1) மற்றும் (2) ல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் கீழான தலைமை வன உயிரினக் காப்பாளருக்கான அனைத்து கடமைகள் மற்றும் அதிகாரங்களை வன உயிரினப் பாதுகாப்பு இயக்குநர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் செயல்படுத்தப்படும். மேலும் மேற்கண்ட உட்பிரிவுகளில் எங்கெல்லாம் மாநில அரசு மற்றும் மாநில சட்ட சபை எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அவற்றையெல்லாம் மத்திய அரசு மற்றும் பாராளுமன்றம் எனக் கொள்ள வேண்டும்.

அத்தியாயம் IV-A

மத்திய மிருகக்காட்சி சாலைகளின் ஆணையம் மற்றும் மிருகக்காட்சி சாலைகள் அங்கீகாரம்

(Central Zoo Authority and Recognition of Zoos)

38-A. மத்திய மிருக்காட்சி சாலைகளின் ஆணையத்தின் அமைப்பு (Constitution of Central Zoo Authority)

இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிகாரங்களை செலுத்தவும் விதிக்கப்படும் பணிகளை நிறைவேற்றவும் "மத்திய மிருகக்காட்சி சாலைகளின் ஆணையம்" என்ற ஒரு அமைப்பினை இந்த அத்தியாயத்தின் கீழ் (இதன் பிறகு ஆணையம்' என குறிப்பிடப்படும்) மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும்.

(2) ஆணையம் மத்திய அரசால் நியமனம் செய்யப்படும் கீழ்கண்டவர்களை கொண்டதாக இருக்கும்.

a)தலைவர் (Chair person) ;

b)பத்துக்கும் குறையாத உறுப்பினர்கள் , மற்றும்

c)உறுப்பினர் செயலர்.

38. B. தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவிக் காலம் மற்றும் பணி நிபந்தனைகள். (Term of office and conditions of Service of Chairperson and members, etc.)

(1) உறுப்பினர் செயலர் நீங்கலாக தலைவர் மற்றும் உறுப்பினர் அனைவரும் மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும் மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்படாத கால அளவுக்கு பதவியிலிருப்பர்.

(2) தலைவர் அல்லது உறுப்பினர்கள் மத்திய அரசுக்கு தங்கள் கைப்பட எழுதிய பதவி விலகல் கடிதம் அனுப்பி பதவி விலகலாம்.

(3) கீழ்குறிப்பிட்ட காரணங்களுக்காக உட்பிரிவு 2ல் கண்ட உறுப்பினர்கள் அல்லது தலைவரை மத்திய அரசு பதவி நீக்கம் செய்யலாம் -

a) கடனை அடைப்பதிலிருந்து விடுவிக்கப்படாத ஆனால் கடன் அடைக்க முடியாதவர்/ நொடிந்து போனவர் என நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவர்;

b) ஒழுக்கக்கேடு (Moral turpitude) என மத்திய அரசு கருதும் ஒரு குற்றத்திற்காக நீதிமன்றத்தால் சிறை தண்டனை விதிக்கப்பட்டவர்;

c) புரிந்துணரும் மனநிலை இல்லாதவர் (Unsounded mind) என தகுந்த நீதிமன்றத்தால் அறிவிக்கை செய்யப்பட்டவர்;

d) செயல்பட மறுப்பவர் அல்லது செயல்படும் சக்தியை இழந்தவர்;

e) ஆணையத்தின் அனுமதி இன்றி ஆணையத்தின் கூட்டங்களுக்குத் தொடர்ந்து மூன்று முறை வருகை தராமல் இருப்பவர்; அல்லது

f) தலைவர் அல்லது உறுப்பினர் அப்பதவியில் நீடிப்பது பொது நன்மைக்கு உகந்ததல்ல எனக் கருதும் அளவிற்கு தனது பதவியினை தவறான வழியில் உபயோகப்படுத்தியுள்ளதாக மத்திய அரசால் கருதப்படுபவர்.

இருப்பினும் தனது தரப்பினை எடுத்துரைக்க உரிய வாய்ப்பினை அளிக்காமல் எவர் ஒருவரையும் பதவியிலிருந்து நீக்கம் செய்யக் கூடாது.

(4) உட்பிரிவு (2)ன்படியோ அல்லது வேறு வகையிலோ காலியாகும் இடங்கள் புதிய நியமனங்கள் மூலம் நிரப்பப்பட வேண்டும்.

(5) ஆணையத்தின் தலைவர், உறுப்பினர், உறுப்பினர் செயலர் ஆகியோரின் பணி நியமனம், சம்பளம், இதரப் படிகள் மற்றும் இதர நிபந்தனைகள் ஆகியவை மத்திய அரசு வகுத்தமைக்கும்படி நிர்ணயம் செய்யப்படும்.

(6) ஆணையத்தின் குறிக்கோளைச் செயல்படுத்துவதற்குத் தேவையென தான் கருதும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை மத்திய அரசின் முன் அனுமதி பெற்று ஆணையம் பணியமர்த்தும்.

(7) ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணிக்காலம் மற்றும் பணி நிபந்தனைகள் வகுத்தமைக்கப்படுவதற்கேற்றவாறு இருக்கும்.

(8) ஆணைய உறுப்பினர்களின் காலி இடம், உறுப்பினர் நியமனங்களில் குறைபாடு ஆகிய காரணங்களுக்காக ஆணையத்தின் செயல்முறைகள் அல்லது நடவடிக்கைகளை குறித்து வினா எழுப்ப முடியாது.

38-C ஆணையத்தின் பணிகள் : (Functions of the Authority)

ஆணையம் கீழ்கண்ட பணிகளைச் செய்யும்.

a) மிருகக்காட்சிசாலையில் வைக்கப்படும் விலங்குகளுக்கான இருப்பிட வசதி, அவற்றின் தினசரி பராமரிப்பு மற்றும் மருத்துவக் கண்காணிப்பு ஆகியவற்றிக்கு குறைந்தபட்ச தர நிலைகளை (Minimum standards) வகுத்தல்;

b) வகுத்தமைக்கப்படும் தர நிலைகள் (Standards) மற்றும் நெறிமுறை களுக்குட்பட்டு (norms) மிருகக்காட்சிசாலைகள் செயல்படுவதை மதிப்பாய்வு செய்து கணித்தல்;

c) மிருகக்காட்சிசாலைகளை அங்கீகாரம் செய்தல் அல்லது அதனை ரத்து செய்தல்;

d) அழிந்து வரும் வனவிலங்கினங்களைக் கண்டறிந்து அவற்றை மிருகக்காட்சிசாலையில் பிடி நிலையில் இனவிருத்தி (Captive breeding) செய்வதற்கான பொறுப்பை மிருகக்காட்சி சாலைகளுக்கு நிர்ணயித்தல்;

e) இனவிருத்திக்காக விலங்குகளைப் பெற்றடைதல் (acquisition), பரிமாற்றம் செய்தல் மற்றும் கடனாகப் பெறுதல், வாங்குதல் ஆகியவற்றில் ஒருங்கிணைப்பு செய்தல்;

f) அழிந்து வரும் நிலையில் உள்ள வன உயிரின இனங்கள் பிடியில் இனவிருத்தி செய்யப்பட்டது குறித்த பதிவுகளின் (Stud-book) பராமரிப்பை உறுதி செய்தல்;

g) மிருகக்காட்சிசாலைகளில் விலங்குகளை பார்வைக்கு வைத்தல் சம்பந்தப்பட்ட முன்னுரிமைகள் (priorities) மற்றும் இருப்பொருளை (theme) கண்டறிதல்;

h) மிருகக்காட்சிசாலைசம்பந்தப்பட்டவர்கள் இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் பயிற்சி பெற ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்;

i) பிடி நிலையில் இனவிருத்தி செய்தல் மற்றும் கல்வித் திட்டங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மிருகக்காட்சி சாலைகளுக்காக ஒருங்கிணைப்பு செய்தல்;

j) மிருகக்காட்சிசாலைகளின் சரியான மேலாண்மை மற்றும் அறிவியல் ரீதியான மேம்பாட்டிற்கு தொழில் நுட்ப உதவிகள் மற்றும் இதர உதவிகளை வழங்குதல்;

k) மிருகக்காட்சிசாலைகளைப் பொறுத்தமட்டிலும் இச்சட்டத்தின் குறிநோக்கத்தினைத் நிறைவேற்றத் தேவையான இதர பணிகளை மேற்கொள்ளுதல்.

38-D நடைமுறைகளை ஆணையமே ஒழுங்குமுறைப்படுத்துதல் (Procedure to be regulated by the Authority)

(1) தலைவர் உகந்ததெனக் கருதும் நேரத்திலும் இடத்திலும் தேவை ஏற்படும் பொழுதெல்லாம் ஆணையம் கூட வேண்டும்.

(2) ஆணையம் தனக்கான நடைமுறைகளை தானே ஒழுங்குமுறைப்படுத்திக் கொள்ளும்.

(3) ஆணையத்தின் உத்தரவுகள் மற்றும் முடிவுகள் அதன் உறுப்பினர் செயலர் அல்லது அவரால் இதற்காக அதிகாரமளிக்கப்பட்டவரால் அதிகாரச் சான்றளிக்கப்பட வேண்டும் / மெய்யுறுத்தப்பட வேண்டும் (authenticated).

38-E ஆணையத்திற்கு மானியம் மற்றும் கடன் வழங்குதல் மற்றும் நிதியம் ஏற்படுத்துதல் (Grants and Loans to Authority and constitution of Fund)

(1) பாராளுமன்றத்தில் சட்டப்படியான நிதி ஒதுக்கீடு இதற்காகப் பெற்ற பின் ஆணையத்திற்கு தேவையென மத்திய அரசு கருதும் தொகையினை மானியமாகவும் கடனாகவும் கொடுக்கும்.

(2) மத்திய மிருகக்காட்சிசாலைகளின் ஆணையத்தின் நிதியம் என்ற நிதியம் ஏற்படுத்தப்பட்டு, மத்திய அரசிடமிருந்து பெறும் மானியம் மற்றும் கடன் தொகைகள் ஆகியவை அந்நிதியத்தின் வரவில் வைக்கப்படும். இச்சட்டத்தின்படி ஆணையம் பெறும் கட்டணங்கள் மற்றும் மத்திய அரசால் தீர்மானிக்கப்படும் இதர மூலாதாரங்களிலிருந்து ஆணையத்தால் பெறப்படும் தொகைகளும் இந்த நிதியத்தின் வரவில் வைக்கப்படும்.

(3) வாரியத்தின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் சம்பளம், படிகள் மற்றும் நிதிப்பயன்களுக்கான செலவுகளுக்கும் இந்த அத்தியாயத்தின் கீழ் ஆணையம் ஆற்ற வேண்டிய பணிகள் மற்றும் இந்தச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் குறிநோக்கத்தினை அடைவதற்கான செலவுகளுக்கும் உட்பிரிவு 2ல் குறிப்பிடப்பட்டுள்ள நிதியம் பயன்படுத்தப்படும்.

(4) ஆணையம் சரியான கணக்கு மற்றும் உரிய ஆவணங்களைப் பராமரிப்பதுடன் கணக்கு வழக்குப் பற்றிய வருடாந்திர அறிக்கையை மத்திய அரசு இந்திய தணிக்கைத்துறைத் தலைவருடன் (Comptroller and Auditor General of India) கலந்தாலோசித்து நிர்ணயிக்கும் படிவத்தில் தயாரிக்க வேண்டும்.

(5) ஆணையத்தின் கணக்குகள் இந்திய தணிக்கைத் துறைத் தலைவரால் அவர் குறிப்பிடும் கால இடைவெளிகளில் தணிக்கை செய்யப்படும். இத்தணிக்கையின் பொருட்டு மேற்கொள்ளப்படும் செலவுகள் ஆணையத்தால் இந்திய தணிக்கைத் துறைத் தலைவருக்கு பட்டுவாடா செய்யப்படும்.

(6) அரசு கணக்குகளை தணிக்கை செய்வதில் இந்திய தணிக்கைத் துறைத் தலைவருக்கு என்ன உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள் (Privileges) இருக்கின்றனவோ அதே உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளை ஆணையத்தின் கணக்குகளை தணிக்கை செய்வதிலும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரும் இத்தணிக்கை சம்பந்தமாக அவரால் நியமனம் செய்யப்படும் வேறு எந்த நபரும்

பெற்றிருப்பார்கள். குறிப்பாக புத்தகங்கள், கணக்குகள், பட்டியல்கள் மற்றும் இதர ஆவணங்கள் ஆகியவற்றை கோரிப் பெறவும் ஆணையத்தின் எந்த ஒரு அலுவலகத்தையும் தணிக்கை செய்யவும் உரிமை உண்டு.

(7) தணிக்கைத் துறைத் தலைவர் அல்லது அவரால் இதற்கென நியமிக்கப்பட்ட வேறு ஒரு நபரால் சான்றளிக்கப்பட்ட ஆணையத்தின் கணக்குகள், தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆணையத்தால் வருடா வருடம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்.

38-F ஆண்டு அறிக்கை (Annual Report)

ஒவ்வொரு நிதி ஆண்டிலும் முந்தைய நிதி ஆண்டில் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்த முழு விபரங்களுடன் இதற்கென வகுத்தமைக்கப்படும் படிவத்தில் ஆண்டறிக்கை தயார் செய்து அதன் நகலை குறிப்பிடப்பட்ட காலத்தில் மத்திய அரசுக்கு ஆணையம் அனுப்ப வேண்டும்.

38-G ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் நாடாளுமன்றத்தின் முன்பு வைக்கப்பட வேண்டும். (Annual report and audit report to be laid before Parliament)

ஆணையத்தின் ஆண்டறிக்கையை, அதன் பரிந்துரைகளின் மீது மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அல்லது பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்படாததற்கான காரணங்கள் ஏதேனும் இருப்பின் அதையும் சேர்த்து ஆண்டு கணக்குத் தணிக்கை அறிக்கையுடன் அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் பார்வைக்கும் மத்திய அரசு வைக்க வேண்டும்.

38-H மிருகக்காட்சி சாலைகளின் அங்கீகாரம் (Recognition of Zoos)

(1) ஆணையத்தின் அங்கீகாரம் இல்லாமல் எந்த மிருகக் காட்சி சாலையும் செயல்படக் கூடாது.

இருப்பினும் 1991 ஆம் வருடத்திய திருத்திய வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் நடைமுறைக்கு வந்த தேதிக்கு முன்னரே செயல்பட்டு வந்த மிருகக் காட்சிச் சாலைகள் தொடர்ந்து அத்தகைய அங்கீகாரம் இல்லாமல் திருத்திய சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து பதினெட்டு மாதங்கள் வரை செயல்படலாம். இதனிடையில் இக்கால கட்டத்தில் அத்தகைய மிருகக் காட்சி சாலைக்கு அங்கீகாரம் வேண்டி மனு செய்து அம்மனு மீதான இறுதி முடிவு தெரியும் வரை அல்லது அங்கீகாரம் மறுக்கப்பட்டு மறுப்பானை கிடைத்த தேதியிலிருந்து ஆறுமாதங்கள் வரை மிருகக் காட்சி சாலை செயல்படலாம்.

(1-A) **2002 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வன உயிரின பாதுகாப்புச் சட்டம்** நடைமுறைக்கு வந்தவுடன் அல்லது அதற்குப் பின்னர் ஆணையத்தின் முன் அனுமதியின்றி மிருகக் காட்சி சாலைகள் எதையும் நிறுவக் கூடாது.

(2) மிருகக்காட்சிசாலைகளின் அங்கீகாரத்திற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் உரிய கட்டணம் செலுத்தி ஆணையத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு அங்கீகாரமும் நிபந்தனைகள் ஏதும் இருப்பின் அதைக் குறிப்பிட வேண்டும். அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்தாரர் மிருக்காட்சி சாலையினை நடத்த வேண்டும்.

(4) வன உயிரினங்களின் பாதுகாப்பு (Protection) மற்றும் அழிவின்றி காத்தல் (Conservation) மற்றும் வகுத்தமைக்கப்படும் தரநிலைகள் (Standars), நெறிமுறைகள் (Norms) மற்றும் இதர பொருட்கூறுகளை (matters) உரிய முறையில் பரிசீலித்து, அங்கீகாரம் வழங்கலாம் என திருப்தியடைந்தாலன்றி மிருகக்காட்சி சாலைக்கு ஆணையம் அங்கீகாரம் வழங்கக் கூடாது.

(5) மிருகக்காட்சிசாலை அங்கீகாரத்திற்கான விண்ணப்ப-தாரர்களுக்கு உரிய வாய்ப்பளித்து அவரின் கருத்தைக் கேட்காமல் விண்ணப்பங்களை ஆணையம் நிராகரிக்கக் கூடாது.

(6) உட்பிரிவு (4)ன் கீழ் வழங்கப்பட்டட அங்கீகாரத்தை உரிய காரணங்களைப் பதிவு செய்து தற்காலிகமாக ரத்து செய்யலாம் அல்லது அங்கீகாரத்தை விலக்கிக் கொள்ளலாம்.

இருப்பினும் அத்தகைய தற்காலிக ரத்து அல்லது அங்கீகாரம் விலக்கிக் கொள்ளும் நடவடிக்கை மிருகக் காட்சி சாலை நடத்தும் நபருக்கு அவரது நியாயத்தைத் தெரிவிக்க உரிய வாய்ப்பளிக்காமல் செய்யக் கூடாது.

(7) உட்பிரிவு (5)ன் கீழ் மிருகக் காட்சி சாலைக்கு அங்கீகாரம் வழங்க மறுத்து வழங்கப்படும் ஆணை மற்றும் உட்பிரிவு (6)ன்கீழ் அங்கீகாரத்தை தற்காலிகமாக இரத்து செய்தோ அல்லது விலக்கிக் கொண்டோ வழங்கப்படும் ஆணைகளை எதிர்த்து மத்திய அரசுக்கு மேல் முறையீடு செய்யலாம்.

(8) உட்பிரிவு (7)ன் படியான மேல் முறையீடுகள் அத்தகைய உத்தரவுகள் கிடைக்கப் பெற்ற முப்பது நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.

இருப்பினும் மேற்கண்ட காலம் தவறிய மேல்முறையீட்டை மேல் முறையீட்டாளர் காலம் தாழ்த்தி செய்தமைக்கான நியாயமான காரணங்கள் இருப்பதாக மத்திய அரசு கருதினால் காலம் தாழ்த்திய மேல் முறையீடுகளையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளலாம்.

38-I மிருகக் காட்சி சாலை விலங்குகளைப் பெற்றடைதல் (Acquisition of animals by a Zoo)

(1) இச்சட்டத்தின் மற்ற வகைமுறைகளுக்குட்பட்டு மத்திய மிருகக் காட்சி சாலைகளின் ஆணையத்தின் முன் அனுமதி பெறாமல் எந்த ஒரு மிருகக் காட்சி சாலையும் பட்டியல் I மற்றும் II ல் கண்ட வன விலங்கு அல்லது பிடியிலிருக்கும் விலங்கை பெற்றடையவோ (acquire) விற்கவோ, அல்லது உரிமை மாற்றம் செய்யவோக் கூடாது.

(2) எந்த ஒரு மிருகக் காட்சி சாலையும் எந்த ஒரு வன விலங்கு அல்லது பிடியிலிருக்கும் விலங்கையும் அங்கீகரிக்கப்பட்ட மிருகக் காட்சி சாலைக்கோ அல்லது அங்கிருந்தோ அல்லாமல் பெற்றடையவோ, விற்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ கூடாது.

38-J மிருகக்காட்சிசாலையில் விலங்குகளை சீண்டுதல் போன்றவற்றை செய்தலுக்குத் தடை (Prohibition of teasing, etc., in a zoo)

எந்த ஒரு நபரும் மிருகக்காட்சிசாலையில் விலங்குகளை சீண்டுவதோ, தொந்தரவு செய்வதோ, காயப்படுத்துவதோ அல்லது அவற்றிற்கு உணவளிப்பதோ, சத்தமிடுதல் அல்லது வேறு எந்த வகையிலும் அவற்றிற்கு இடையூறு செய்வதோ, மிருகக்காட்சிசாலை வளாகத்தில் குப்பை போடுவதோ கூடாது.

அத்தியாயம் V

வன விலங்குகள், விலங்குப் பொருட்கள் அல்லது ட்ரோஃபிகளின் வணிகம் அல்லது வர்த்தகம்

(Trade or Commerce in Wild Animals, Animal Articles and Trophies)

39. வன விலங்குகள் மற்றும் இன்னப் பிற அரசின் சொத்தாகும். (Wild animals, etc., to be Government property)

1. (a) பிரிவு 11 அல்லது பிரிவு 29ன் உட்பிரிவு (1) அல்லது பிரிவு 35ன் உட்பிரிவு (6)ன் கீழ் வேட்டையாடப்படும் அல்லது இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு முரணாக பிடியில் வைத்திருக்கப்படும் அல்லது பிடியில் இனவிருத்தி செய்யப்படும் அல்லது வேட்டையாடப்படும் அல்லது இறந்து காணப்படும் அல்லது தவறுதலாக கொல்லப்படும் வெர்மின் அல்லாத எந்த ஒரு வனவிலங்கும்; மற்றும்

(b) இந்தச் சட்டம் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக் கெதிரான குற்றங்களுக் குள்ளாக்கப்பட்ட, சட்டக் கூறு (a)ல் குறிப்பிடப்பட்டுள்ள விலங்கு களிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருட்கள், ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபி அல்லது இறைச்சி;

(c) இந்தச் சட்டம் அல்லது இதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு முரணாக இழைக்கப்பட்ட குற்றத்தில் சம்பந்தப்பட்ட, இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட யானைத் தந்தம் மற்றும் அதிலிருந்து செய்யப்பட்ட பொருட்கள்;

(d) குற்றமிழைத்தலில் பயன்படுத்தப்பட்டு இச்சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் பறிமுதல் செய்யப்படும் வாகனங்கள், மரக்கலன்கள், ஆயுதங்கள், கண்ணி அல்லது கருவிகள்.

மேற்கண்ட அனைத்தும் மாநில அரசின் சொத்தாகும். அத்தகைய விலங்கு மத்திய அரசினால் சாற்றல் செய்யப்பட்ட வன உயிரின உய்விடம் அல்லது தேசியப் பூங்காவில் வேட்டையாடப்பட்டிருந்தால் அத்தகைய விலங்கு அல்லது அதிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருள், ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி அல்லது இறைச்சி அல்லது அத்தகைய வேட்டையாடுதலில் பயன்படுத்தப்பட்ட வாகனம், மரக்கலன், கண்ணி அல்லது கருவிகள் மத்திய அரசின் சொத்தாகும்.

(2) அரசு சொத்தினை எந்த வகையிலும் பெறும் ஒருவர் அத்தகைய உடமையினை பெற்ற நாற்பத்தி எட்டு மணி நேரத்திற்குள் அத்தகைய உடமையினை பெற்றது குறித்து அருகில் உள்ள காவல்நிலையத்திற்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கோ அறிக்கை செய்வதோடு, கேட்டுக் கொள்ளப்பட்டால், அத்தகைய சொத்தினை காவல் நிலைய பொறுப்பு அலுவலரிடமோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமோ ஒப்படைக்க வேண்டும்.

(3) தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் முன் அனுமதியின்றி எந்த ஒரு நபரும் அத்தகைய அரசு சொத்தினை-.

a) பெற்றடையவோ (acquire), தனது உடமையிலோ, காவலிலோ அல்லது கட்டுப்பாட்டிலோ வைத்திருக்கவோ கூடாது, அல்லது

b) வேறு எந்த நபருக்கும் அன்பளிப்பு மூலமாகவோ, விற்பனை மூலமாகவோ அல்லது மற்ற வழிகளிலோ உரிமை மாற்றம் செய்யக் கூடாது, அல்லது

c) அழிக்கவோ சேதப்படுத்தவோ கூடாது.

40. சாற்றல்கள் (Declarations)

(1) இந்தச் சட்டம் அமலுக்கு வந்த போது பட்டியல் I மற்றும் பட்டியல் II ன் பகுதி IIல் குறிப்பிடப்பட்டுள்ள பிடியிலிருக்கும் விலங்கு அல்லது அத்தகைய விலங்குகளிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருள், ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபி அல்லது அத்தகைய விலங்குகளின் உப்பிடப்பட்ட தோல் அல்லது காய்ந்த தோல் அல்லது கஸ்தூரி மானிலிருந்து (musk deer) பெறப்பட்ட கஸ்தூரி (musk) அல்லது காண்டா மிருகத்தின் கொம்பு ஆகியவற்றைத் தம் பாதுகாப்பில் அல்லது கட்டுப் பாட்டில் அல்லது உடமையில் வைத்திருக்கும் எவரும் இச்சட்டம் நடைமுறைக்கு வந்த முப்பது நாட்களுக்குள் இங்கு முன்னர் விவரிக்கப்பட்டபடி தன் கட்டுப்பாட்டிலோ, பாதுகாப்பிலோ அல்லது உடமையிலோ வைக்கப்பட்டிருக்கும் விலங்கு அல்லது விலங்கு பொருட்களின் விபரம், அவற்றின் எண்ணிக்கை மற்றும் அவை எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்ற விபரத்தை தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு சாற்றல் (Declare) செய்ய வேண்டும்.

(2) பட்டியல் I மற்றும் பட்டியல் IIன் பகுதி IIல் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு விலங்கையோ அல்லது அத்தகைய விலங்கிலிருந்து பெறப்பட்ட பதப்படுத்தப்படாத ட்ரோஃபி அல்லது இறைச்சி அல்லது அத்தகைய விலங்கின் உப்பிடப்பட்ட அல்லது

உலர்ந்த தோல், அல்லது கஸ்தூரிமானின் கஸ்தூரி அல்லது காண்டா மிருகத்தின் கொம்பு ஆகியவற்றையோ இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு எவரும் தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி பெற்றடையவோ (acquire), பெற்றுக் கொள்ளவோ (receive) அல்லது தன்னுடைய கட்டுப்பாட்டிலோ அல்லது பாதுகாப்பிலோ அல்லது உடமையிலோ வைத்திருப்பதோ அல்லது விற்பதோ, விற்பனைக்கு வைத்திருப்பதோ அல்லது வேறு எந்த வகையிலும் உரிமை மாற்றம் செய்வதோ அல்லது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதோ கூடாது.

(2-A) 2002 ம் ஆண்டு திருத்திய வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் நடைமுறைக்கு வந்த பின் பட்டியல் I மற்றும் பட்டியல் II-ன் பகுதி II ல் கண்ட பிடியிலிருக்கும் விலங்கு, அத்தகைய விலங்குகளிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருள், ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபி ஆகியவற்றை அதற்கான உரிமைச் சான்றிதழ் இல்லாத எவரும் வாரிசுரிமைப்படியல்லாமல் பெற்றடையவோ (acquire), பெற்றுக் கொள்ளவோ (receive) தன் கட்டுப்பாட்டில், பாதுகாப்பில் அல்லது உடைமையில் வைத்திருப்பதோ கூடாது.

(2-B) பிடியிலிருக்கும் விலங்கு, விலங்குப் பொருள், ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபி ஆகியவற்றை உட்பிரிவு (2-A)ன் கீழ் வாரிசுரிமை முறையில் அடையும் எவரும் அவ்வாறு அடையப் பெற்ற 90 நாட்களுக்குள் அவ்விவரங்களை தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு சாற்றல் செய்ய வேண்டும். பிரிவு 40 (1) ன் கீழ் சாற்றல் செய்தலுக்கு போலவே இந்தச் சாற்றலுக்கும் பிரிவுகள் 41 மற்றும் 42ன் வகைமுறைகள் பொருந்தும்.

இருப்பினும் உட்பிரிவுகள் (2-A) மற்றும் (2-B) ஆகியவை உயிருடன் உள்ள யானைகளுக்குப் பொருந்தாது.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) ல் குறிப்பிடப்பட்டுள்ள எதுவும் பிரிவு 38 -I ன் வகை முறைகளுக்குட்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மிருகக் காட்சி சாலை ஒன்றுக்கோ அல்லது பொது அருங்காட்சியகத்திற்கோ (public Museum) பொருந்தாது.

(4) பட்டியல் I மற்றும் பட்டியல் II ன் பகுதி II ல் கண்டுள்ள எந்த ஒரு விலங்கு அல்லது அத்தகைய ஒரு விலங்கிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருள்கள், அல்லது ட்ரோஃபி (கஸ்தூரி அல்லது காண்டா மிருகத்தின் கொம்பு நீங்கலாக) அல்லது அவ்விலங்கின் உப்பிடப்பட்ட அல்லது உலர்ந்த தோல் ஆகியவற்றைத் தன் கட்டுப்பாட்டில் அல்லது பாதுகாப்பில் அல்லது தன் உடைமையில் வைத்திருக்கும் எவரையும் அது பற்றிக் குறிப்பிட்ட படிவத்தில், குறிப்பிட்ட

காலக்கெடுவில், வகுத்தமைக்கப்படும் முறையில் தலைமை வன உயிரினக் காப்பபாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு சாற்றல் செய்யும்படி மாநில அரசு ஒரு அறிவிக்கை வாயிலாக கோரலாம்.

40 - A சில இனங்களில் சட்ட விலக்களிப்பு (Immunity in certain cases)

(1) பிரிவு 40(2) மற்றும் 40(4)ல் எது எவ்விதம் சொல்லப்பட்டிருந்தாலும், பட்டியல் I மற்றும் பட்டியல் II ன் பகுதி II ல் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு பிடியிலிருக்கும் விலங்கு, அத்தகைய விலங்குகளிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருள், ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி ஆகியவை சம்மந்தமாக பிரிவு 40ன் உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (4)ன் கீழ் சாற்றல் செய்யாமல் தன் கட்டுப்பாட்டில், பாதுகாப்பில் அல்லது உடைமையில் வைத்திருக்கும் எந்த நபரையும் குறிப்பிடப்படும் படிவத்தில் குறிப்பிடப்படும் முறையில், நிர்ணயிக்கப்படும் காலக் கெடுவுக்குள் தலைமை வன உயிரினக் காப்பாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு சாற்றல் செய்யும்படி மத்திய அரசு ஒரு அறிவிப்பின் மூலமாகக் கோரலாம்.

(2) வன உயிரின (பாதுகாப்பு) திருத்திய சட்டம், 2002 அமலுக்கு வருவதற்கு முன்பாக பிரிவு 40ன் மீறலுக்காக எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டதாக கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு தொடரப்பட மாட்டாது. நிலுவையில் உள்ள அனைத்து நடவடிக்கைகளும் அற்றுப்போன நிலையினை அடையும் (Stand abated).

(3) பிரிவு 40 A (1) ன் படி சாற்றல் செய்யப்பட்ட பிடியிலிருக்கும் விலங்குகள், விலங்குப் பொருட்கள், ட்ரோஃபி, பதப்படுத்தப் படாத ட்ரோஃபி ஆகியவை வகுத்தமைக்கப்படும் முறையில் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு கையாளப்படும்.

41. விசாரணையும் பொருள் விவரப் பட்டியல் தயாரித்தலும் (Inquiry and preparation of inventories)

(1) பிரிவு 40 ன் கீழான சாற்றலை (Declaration) பெற்ற பின்பு தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர், வகுத்தமைக்கப்படும் முறையில் முன் அறிவிப்பு வழங்கி குறிப்பிடப்பட்ட நேரத்தில். -

a) பிரிவு 40 ன்படி தெரிவிக்கப்பட்ட இடத்தில் நுழையலாம் ;

b) அங்கு கண்டறியப்பட்ட, பட்டியல் I மற்றும் பட்டியல் II ன் பகுதி II ல் குறிப்பிடப்பட்ட விலங்குகளிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருட்கள், ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபிகள், உப்பிடப்பட்ட மற்றும் காய்ந்த தோல்கள் மற்றும் பிடியிலிருக்கும் விலங்குகள் குறித்து விசாரித்து பொருள் விபரப் பட்டியல் தயாரிக்கலாம் ;

c) விலங்குகள், விலங்குப் பொருட்கள், ட்ரோஃபிகள், பதப்படுத்தப்படாத ட்ரோஃபிகள் மீது வகுத்தமைக்கப்படும் முறையில் அடையாளக் குறிகளைப் பதிக்கலாம்.

(2) இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் அடையாளக் குறிகளை யாரும் அழிக்கவோ போலியாகச் செய்யவோக் கூடாது.

42. உரிமைச் சான்று (Certificate of ownership)

ஒரு வன விலங்கு, விலங்குப் பொருள், ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி, ஆகியவற்றை சட்டப்படியான உடைமையில் ஒரு நபர் வைத்திருப்பதாக தலைமை வன உயிரினக் காப்பாளர் கருதும் நிலையில், பிரிவு 40ன் குறிநோக்கத்தின் பொருட்டு, இதற்கென வகுத்தமைக்கப்படும் படிவத்தில் உரிமைச் சான்றினை அந்த நபருக்கு வழங்குவதோடு அடையாளம் காணும் பொருட்டு, சாத்தியமான நிகழ்வுகளில், அத்தகைய விலங்குப்பொருள், ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபிகளுக்கு வகுத்தமைக்கப்படும் முறையில் அடையாளக் குறியிடலாம்.

இருந்த போதிலும் உரிமைச் சான்று கோரும் மனுதாரர் அத்தகைய விலங்குகளை வைத்திருக்க தங்கும் வசதி, வளர்ப்பு மற்றும் பராமரிப்பு வசதிகள் கொண்டிருப்பதை உரிமைச் சான்றிதழ் வழங்கும் முன்பு தலைமை வன உயிரினக் காப்பாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

43. விலங்குகளின் உரிமை மாற்றம் போன்றவற்றை ஒழுங்கு முறைப்படுத்துதல் (Regulation of transfer of animal, etc.)

1. பிடியிலிருக்கும் விலங்கு, விலங்குப் பொருள், ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபி ஆகியவற்றிற்கு உரிமைச் சான்றிதழ் வைத்திருக்கும் எவரும் அத்தகைய விலங்கு, விலங்குப் பொருள், ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபி ஆகியவற்றை விற்பனை மூலமோ, விற்பனைக்கு வைத்தல் மூலமோ அல்லது வணிக தன்மை கொண்ட எந்த வகையான மறு பயனுக்காகவோ உரிமை மாற்றம் செய்யக் கூடாது.
2. அத்தகைய உரிமைச் சான்றிதழ் உள்ள விலங்கு, விலங்குப் பொருள், ட்ரோஃபி பதப்படுத்தப்படாத ட்ரோஃபி எதையும் ஒருவர் வசிக்கும் மாநிலத்திலிருந்து பிற மாநிலத்திற்கு உரிமை மாற்றம் (transfer) செய்தாலோ அல்லது கொண்டு சென்றாலோ (transports) அல்லது மாநிலத்திற்கு வெளியிலிருந்து உரிமை மாற்ற மூலம் பெற்றடைந்தாலோ எந்த மாநிலத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்படுகிறதோ அல்லது கொண்டு செல்லப்படுகிறதோ அந்த மாநிலத்தின் தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு அவ்வாறு எடுத்துச் சென்ற

அல்லது உரிமை மாற்றம் செய்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அறிக்கை செய்ய வேண்டும்.

3. இப்பிரிவில் சொல்லப்பட்ட எதுவும் கீழ்கண்டவற்றிற்கு பொருந்தாது -

a) மயிலின் வால் இறகு அல்லது அதைக் கொண்டு செய்யப்பட்ட விலங்குப் பொருள் அல்லது ட்ரோஃபி ;

b) பிரிவு *38-1*ன் வகைமுறைகளுக்குட்பட்டு நடைபெறும் மிருகக் காட்சி சாலைகளுக்கிடையான உரிமை மாற்றம் அல்லது மிருகக்காட்சிசாலைகளுக்கும் பொது அருங்காட்சியகங்-களுக்குமிடையில் நடைபெறும் உரிமை மாற்றங்கள்.

44. ட்ரோஃபி மற்றும் விலங்குப் பொருட்கள் சம்மந்தப்பட்ட உரிமம் இல்லாத வணிகத் தொடர்புகள் தடை செய்யப்படுகிறது. (Dealings in trophy and animal articles without licence prohibited)

(1) அத்தியாயம் V – A ன் வகைமுறைகளுக்குட்பட்டு உட்பிரிவு (4) ன்கீழ் வழங்கப்படும் உரிமம் இல்லாமலும், உரிமப்படியல்லாமலும் எவரும் கீழ்கண்டவற்றை செய்யக் கூடாது -

a) கீழ்குறிப்பிடப்பட்டவராக வியாபாரத்தை துவக்கவோ மேற்கொள்ளவோக் கூடாது;

i) விலங்குப் பொருட்களை தயாரிப்பவர் அல்லது வணிகம் செய்பவர் ; அல்லது

ii) பதனம் செய்பவர் (a taxidermist) ; அல்லது

iii) ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபியின் வணிகர்; அல்லது

iv) பிடியிலிருக்கும் விலங்குகளின் வணிகர் ; அல்லது

v) மாமிச வியாபரி ; அல்லது

b) உணவருந்தும் இல்லங்களில் (eating house) மாமிசம் சமைப்பது அல்லது பரிமாறுவது;

c) பாம்பு விஷத்தை கறப்பது, சேகரிப்பது அல்லது தயாரிப்பது அல்லது அதன் வியாபாரத்தில் ஈடுபடுவது.

இருப்பினும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் முன்பே இத்தகைய வியாபாரம் அல்லது தொழில் செய்து வருபவர் இச்சட்டம் நடைமுறைக்கு வந்து முப்பது நாட்கள் வரை அவர் அத்தகைய வியாபாரம் அல்லது தொழில் செய்வதற்கு அல்லது அந்தக் காலக் கெடுவிற்குள் உரிமம் கோரி மனுச் செய்திருந்து உரிமம் வழங்கப்படும் வரை அல்லது உரிமம் வழங்க முடியாது எனத் தகவல் பெறப்படும் வரை சம்பந்தப்பட்டவருக்கு உட்பிரிவு (1) பொருந்தாது.

மேலும், மயிலின் வால் இறகு மற்றும் அதிலிருந்து செய்யப்பட்ட பொருட்கள் இவற்றினை வியாபாரம் செய்பவர் அல்லது அத்தகைய பொருட்களை உருவாக்குபவருக்கு இந்த உட்பிரிவில் சொல்லப்பட்ட எவையும் பொருந்தாது.

விளக்கம் - இந்தப் பிரிவின் குறிநோக்கத்தில் "உணவருந்தும் இல்லம்" (eating – house) என்பது ஓட்டல் அல்லது ரெஸ்ட்டாரன்ட் அல்லது பணம் பெற்றுக் கொண்டு உணவு/ திண்பண்டம் (eatables) பரிமாறும் மற்ற எந்த ஒரு இடத்தையும் உள்ளடக்கியதாகும். உணவிற்கு தனியாக பணம் செலுத்தினாலும் அல்லது தங்கி உணவருந்துவதற்கான (Board and lodging) பட்டியல் தொகையில் உணவிற்கான தொகை சேர்க்கப்பட்டாலும் இது பொருந்தும்.

(2) விலங்குப் பொருட்களை உருவாக்குபவர் அல்லது அதன் வணிகர் அல்லது பிடியிலிருக்கம் விலங்குகள் ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபியின் வணிகர்கள் அல்லது பதப்படுத்தும் தொழில் செய்பவர்கள் ஆகியோர் இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பதினைந்து நாட்களுக்குள் அவர்களிடம் உள்ள விலங்குப் பொருட்கள், பிடியிலிருக்கும் விலங்குகள், ட்ரோஃபிகள் மற்றும் பதப்படுத்தாத ட்ரோஃபிகள் ஆகியவற்றின் அந்த நாளைய இருப்புக் கணக்கை தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு சாற்றல் (Declare) செய்ய வேண்டும். அத்தகைய விலங்குப் பொருட்கள், பிடியிலிருக்கும் விலங்கு, ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபி ஆகியவற்றின் மீது தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அடையாளக் குறி இட வேண்டும்.

(3) உட்பிரிவு 1 ல் குறிப்பிடப்பட்ட உரிமம் பெற விரும்பும் எவரும் உரிமம் வேண்டி தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(4) (a) உட்பிரிவு (3)ல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் வகுத்தமைக்கப்படும் படிவத்தில் அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துடன் தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

(b) விண்ணப்பதாரரின் முன் வரலாறு (antecedents) மற்றும் முன் அனுபவம், வழங்கப்படவிருக்கும் உரிமம் வன உயிரின தகுநிலையில் (Status of wildlife) உண்டாக்கவிருக்கும் தாக்கம் (implication) மற்றும் வகுத்தமைக்கப்படும் (prescribed) இதர பொருட்கூறுகள் (matters) ஆகியவற்றிற்கு உரிய முக்கியத்துவம் கொடுத்தும் அத்தகைய பொருட்கூறுகளில் தான் சரியெனக் கருதும் விசாரணைகளையும் மேற்கொண்ட பிறகு, உரிமம்

வழங்கப்பட வேண்டும் என தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் திருப்தியடைந்தால் அல்லாமல் எந்த உரிமமும் வழங்கப்படக் கூடாது.

(5) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு உரிமத்திலும், உரிமதாரர் தன்னுடைய வியாபாரத்தை நடத்த வேண்டிய இடம் மற்றும் அவர் தனது வியாபாரத்தை மேற் கொள்வதற்கு உள்ள நிபந்தனைகள் ஆகியவற்றை குறிப்பிடப்பட வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமங்கள் ஒவ்வொன்றும். -

a) வழங்கப்பட்டதிலிருந்து ஓராண்டிற்கு செல்லத்தக்கதாகும்;

b) மாறுதல் செய்யத்தக்கதல்ல ; மேலும்

c) ஒரு தடவையில் ஓராண்டுக்கு மிகாமல் புதுப்பிக்கத்தக்கதாகும்.

(7) கீழ்க்குறிப்பிட்ட காரணங்களால் திருப்தியடைந்து தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் உரிமதாரர்களின் உரிமம் புதுப்பிக்கக் கோரும் மனுக்களை நிராகரிக்கும் முன்பு மனுதாரர் தன் தரப்பு நியாயங்களை எடுத்துக் கூற வாய்ப்பளிக்கப்பட வேண்டும் -

i) குறிப்பிடப்பட்ட காலக் கெடு முடிந்து புதுப்பித்தலுக்காக மனுச் செய்தல், அல்லது

ii) உரிமம் புதுப்பிக்கப்படும் போது உரிமதாரர் கொடுத்த விவர அறிக்கை (Statement) தவறானது அல்லது பொய்யானது ; அல்லது

iii) உரிமத்தின் கூறுகள் அல்லது நிபந்தனைகள் அல்லது இச்சட்டத்தின் வகை முறைகள் அல்லது இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளை யனுதாரர் மீறியது, அல்லது

iv) மனுதாரர் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவு செய்யாதது..

(8) உரிமம் கோரும் அல்லது உரிமத்தை புதுப்பிக்கக் கோரும் மனுக்களை ஏற்று வழங்கும் ஆணை அல்லது நிராகரிக்கும் ஆணை ஆகிய எவையும் எழுத்து மூலமான ஆணையாக இருக்க வேண்டும்.

(9) முன் கண்ட உட்பிரிவுகளில் சொல்லப்பட்ட எவையும் வெர்மின் சம்மந்தப்பட்டவைகளுக்கு பொருந்தாது.

45. உரிமங்களை இடை நிறுத்தம் செய்தல் அல்லது ரத்து செய்தல் (Suspension or Cancellation of licences)

மாநில அரசின் பொதுவான அல்லது சிறப்பு உத்தரவு எதற்கும் உட்பட்டு தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், பிரிவு

44ல் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட உரிமங்களை அதற்கான காரணங்களை எழுத்தில் பதிவு செய்து இடைநிறுத்தம் செய்யலாம் அல்லது ரத்து செய்யலாம்.

இருப்பினும் உரிமம் வைத்திருப்பவருக்கு அவரது தரப்பினை எடுத்துரைக்க உரிய வாய்ப்பு வழங்கப்பட்ட பின்னரே அத்தகைய இடை நிறுத்தம் அல்லது இரத்து செய்யப்பட வேண்டும்.

46. மேல்முறையீடு (Appeal)

1. பிரிவு 44ன்கீழ் உரிமம் வழங்க அல்லது புதுப்பிக்க மறுக்கும் உத்தரவுகள் அல்லது பிரிவு 45ன் படி உரிமங்களை இடை நிறுத்தம் செய்தல் அல்லது ரத்து செய்யும் உத்தரவிற்கு எதிரான மேல்முறையீட்டினை கீழ்கண்ட அலுவலர்களுக்கு செய்து கொள்ள வேண்டும் -
   a) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் வழங்கப்பட்டிருப்பின் தலைமை வன உயிரினக் காப்பாளருக்கும்; அல்லது
   b) தலைமை வன உயிரினக் காப்பாளரால் வழங்கப்பட்டிருப்பின் மாநில அரசுக்கும் மேல்முறையீடு செய்யலாம்.
2. உட்பிரிவு 1 (a) ன்படி மேல்முறையிட்டின் மீதான உத்தரவு தலைமை வன உயிரினக் காப்பாளரால் வழங்கப்பட்டிருப்பின் அதன் மீதான இரண்டாவது மேல் முறையீட்டை மாநில அரசுக்கு செய்யலாம்.
3. மேற்கண்டவகைகளுக்குட்பட்டு இப்பிரிவின்கீழ் மேல் முறையீடுகளின் மீது வழங்கப்பட்ட உத்தரவுகள் இறுதியானதாகும்.
4. மனுதாரர்கள் உத்தரவுகள் கிடைக்கப் பெற்ற முப்பது தினங்களுக்குள் அவற்றின் மீது மேல் முறையீடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

இருப்பினும் மேல்முறையீட்டை உரிய காலத்திற்குள் செய்யாமல் போனதற்கு மேல்முறையீட்டுதாரர் போதுமான காரணங்களை உடையவராக இருந்தார் என மேல்முறையீட்டு அதிகாரம் படைத்தவர் திருப்தியடைவாரானால் அத்தகைய மேல்முறையீடுகளை ஏற்றுக் கொள்ளலாம்.

47. பதிவுருகள் பராமரிப்பு (Maintenance of records)

இந்த அத்தியாயத்தின்படியான ஒவ்வொரு உரிமதாரரும் -

a) வகுத்தமைக்கும்படியான (prescribed) பதிவுருகளை (records) வைத்திருப்பதுடன் கீழ்கண்ட அலுவலர்களுக்கு அவருடைய வணிக தொடர்புகளைப் பற்றிய காலமுறை அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

i) இயக்குநர் அல்லது இதன் பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்படும் வேறு எந்த அலுவலருக்கும் ; மற்றும்

ii) தலைமை வன உயரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

b) மேற்படி ஆவணங்களை அத்தகைய அலுவலர்களின் தணிக்கைக்கு வேண்டும் போது தயாராக கிடைக்கச் செய்ய வேண்டும்.

48. உரிமதாரர்கள் விலங்குகளை வாங்குதல் போன்றவை (Purchase of animals, etc., by licensee)

இந்த அத்தியாயத்தின் படி உரிமம் பெற்ற எவரும்,

(a) கீழ்கண்டவற்றை தனது கட்டுப்பாட்டிலோ, பாதுகாவலிலோ அல்லது உடைமையிலோ வைத்திருக்கக் கூடாது.

(i) பிரிவு 44 (2) ன் கீழ் சாற்றல் செய்திருக்க வேண்டிய ஆனால் சாற்றல் செய்யப்படாமல் வைக்கப்பட்டுள்ள விலங்கு, விலங்குப் பொருள்கள், ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபிகள்;

(ii) இச்சட்டத்தின் வகைமுறைகள் அல்லது இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அல்லது பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளின் கீழ் சட்டப்படியாக பெற்றடையப்படாத விலங்கு, விலங்குப் பொருள், ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி அல்லது இறைச்சி;

(b) (i) எந்த ஒரு வன விலங்கினையும் பிடிக்கக் கூடாது, அல்லது

(ii) பட்டியல் I, பட்டியல் II ன் பகுதி II யில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு பிடியிலிருக்கும் விலங்கு அல்லது அத்தகைய விலங்கிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருள், ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி அல்லது இறைச்சி ஆகியவற்றை பெற்றடைவது, பெற்றுக் கொள்வது, தமது கட்டுப்பாட்டில், பாதுகாவலில் அல்லது உடைமையில் வைத்திருப்பது அல்லது விற்பது, விற்பனைக்கு வைப்பது, எடுத்துச் செல்வது, அவற்றின் மாமிசத்தைப் பறிமாறுவது, அத்தகைய விலங்குகளை பதப்படுத்தும் செயல்முறையில் வைத்தல் அல்லது விலங்கை முழுமையாவோ அல்லது பகுதியாவோ கொண்டு காட்சிப் பொருள்கள் செய்வது போன்ற செயல்களை இந்தச் சட்டத்தின் கீழ் இயற்றப்படும் விதிகளின்படி அல்லாமல் செய்யக்கூடாது.

இருப்பினும் அத்தகைய விலங்குகள், விலங்குப் பொருட்கள், ட்ரோஃபிகள், பதப்படுத்தப்படாத ட்ரோபிகள் ஆகியவற்றைப் பெற்றடைவது, உடைமையில் வைத்திருப்பது, தமது கட்டுப்பாட்டில் அல்லது பாதுகாவலில் வைத்திருப்பது ஆகிய செயல்கள் அவற்றை மாநிலம் விட்டு மாநிலம் கொண்டு செல்லும் நிகழ்விற்கு

இட்டுச் செல்லுமாயின் இயக்குநர் அல்லது அவரால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் எழுத்து மூலமான முன் அனுமதியில்லாமல் அப்படி மாநிலம் விட்டு மாநிலம் கொண்டுச் செல்லக் கூடாது.

மேற்சொல்லப்பட்ட விலங்குகள், விலங்குப் பொருட்கள் ஆகியவை சட்டப்படியாகவே பெறப்பட்டுள்ளது என இயக்குனர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் திருப்தியடையாத பட்சத்தில் முன்கண்ட வகைமுறையின் கீழ் அனுமதி வழங்கக் கூடாது.

48-A. வன உயிரினங்களை ஒரு இடம் விட்டு ஒரு இடம் கொண்டுச் செல்ல கட்டுப்பாடுகள் (Restriction on transportation of wildlife)

தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரின் அனுமதி பெறப்பட்டுள்ளதை உறுதி செய்யாமல் அல்லது அப்படி உறுதி செய்து கொள்வதற்கு தக்க சிரத்தை எடுத்துக் கொள்ளாமல் எந்த ஒரு வன விலங்கு, (வெர்மின் நீங்கலாக) விலங்குப் பொருள், குறிப்பிடப்பட்ட தாவரம் அல்லது அதன் பாகம் அல்லது அவற்றிலிருந்து பெறப்பட்ட பொருள்கள் ஆகியவற்றை ஒரு இடம் விட்டு ஒரு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு எந்த ஒரு நபரும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

49. உரிமம் பெற்றவர் தவிர்த்து மற்றவர்கள், பிடியிலிருக்கும் விலங்குகள் போன்றவற்றை வாங்குதல் (Purchase of captive animal, etc., by a person other than a licensee)

இந்தச் சட்டத்தின் கீழ் விற்பனை செய்வதற்கோ அல்லது மற்ற வகையில் உரிமை மாற்றம் செய்யவோ அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் (dealer) அல்லது அத்தகைய ஒரு நபர் ஆகியவர்களிடமிருந்து அல்லாமல் வேறு எவரிடமிருந்தும், பிடியிலிருக்கும் விலங்கையோ, அல்லது அத்தகைய விலங்கிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருட்கள், ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி அல்லது இறைச்சியையோ ஒருவர் வாங்கவோ (purchase) பெற்றுக் கொள்ளவோ (receive) அல்லது பெற்றடையவோ (acquire) க் கூடாது.

இருப்பினும் பிரிவு 38-Iன் வகைமுறைகளுக்குட்பட்டு இந்தப் பிரிவில் சொல்லப்பட்ட எதுவும் அங்கீகரிக்கப்பட்ட மிருகக்காட்சி சாலை அல்லது பொது அருங்காட்சியகத்திற்கு பொருந்தாது.

அத்தியாயம் V- A (Chapter – V-A)

சில விலங்குகளிலிருந்து பெறப்பட்ட ட்ரோஃபிகள், விலங்குப் பொருட்கள் போன்றவற்றின் வர்த்தகம் அல்லது வணிகம் தடை செய்யப்படுதல்

(Prohibition of trade or commerce in trophies, animal articles, etc. derived from certain animals)

49-A. வரைவுரைகள் (Definitions) இந்த அத்தியாயத்தில் -

(a) "பட்டியல் விலங்கு" (Scheduled animal) என்பது அப்போதைக்கு பட்டியல் I அல்லது பட்டியல் II ன் பாகம் II ல் குறிப்பிடப்பட்ட விலங்கு என பொருள்படும் ;

(b) "பட்டியல் விலங்குப் பொருள்" (Scheduled animal article) என்பது பட்டியல் விலங்கிலிருந்து செய்யப்பட்ட ஒரு பொருள் என்பதோடு அத்தகைய விலங்கு முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியினையோ கொண்ட ஒரு உருவத்தையும் உள்ளடக்கியதாகும். ஆனால் மயிலின் வால் இறகு அல்லது அதிலிருந்து செய்யபட்ட ஒரு பொருள் அல்லது ட்ரோஃபி மற்றும் பாம்பு விஷத்தையும் அதிலிருந்து பெறப்பட்டதையும் உள்ளடக்கியதாகாது ;

(c) "குறிப்பிடப்பட்ட தேதி" (Specified date) என்பது -

(i) பட்டியல் விலங்கு சம்மந்த மட்டில் வன உயிரின (பாதுகாப்பு) திருத்தியச் சட்டம், 1986 அமலுக்கு வந்து இரண்டு மாதங்கள் காலாவதியாகிற நாள் என பொருள்படும் ;

(ii) அந்த திருத்தியச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு பட்டியல் I அல்லது பட்டியல் IIன் பாகம் IIல் சேர்க்கப்பட்ட அல்லது மற்ற பட்டியல்களிலிருந்து இப்பட்டியல்களுக்கு மாற்றப்பட்ட விலங்குகள் சம்மந்த மட்டில், அத்தகைய சேர்க்கை அல்லது மாற்றல் செய்த நாளிலிருந்து இரண்டு மாதங்கள் காலாவதியாகிற நாள் எனப் பொருள்படும்;

(iii) இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட யானைத் தந்தம் அல்லது அத்தகைய தந்தத்திலிருந்து செய்யப்பட்ட பொருள் சம்மந்தமட்டில், வன உயிரின (பாதுகாப்பு) திருத்தியச் சட்டம், 1991, அமலுக்கு வந்ததிலிருந்து ஆறுமாதங்கள் காலாவதியாகிற நாள் என பொருள்படும்.

49–B. பட்டியல் விலங்குகளிலிருந்து பெறப்பட்ட ட்ரோஃபிகள், விலங்குப் பொருட்கள் போன்றவற்றின் வணிகத் தொடர்புகள் தடை செய்யப்படுதல் (Prohibition of dealings in trophies, animal articles, etc., derived from scheduled animals)

(1) இந்தப் பிரிவின் மற்ற வகைமுறைகளுக்குட்பட்டு, குறிப்பிடப்பட்ட தேதியன்றும் அதன் பிறகும் எந்த ஒரு நபரும் -

(a) கீழ்குறிப்பிடப்பட்டவராக வியாபாரத்தை துவக்கவோ மேற்கொள்ளவோ கூடாது.

(i) பட்டியல் விலங்குப் பொருட்களை உருவாக்குபவராக (manufacturer) அல்லது அதன் வணிகராக ; அல்லது

(i.a.) இந்தியாவிற்கு இறக்குமதீ செய்யப்பட்ட யானைத் தந்தம் அல்லது அதிலிருந்து செய்யப்பட்ட பொருட்களின் வணிகராக அல்லது அத்தகைய பொருட்களை உருவாக்குபவராக ; அல்லது

(ii) எந்த ஒரு பட்டியல் விலங்குடல் அல்லது அத்தகைய விலங்குகளின் எந்த பகுதியையாவது பதனப்படுத்துவராக (taxidermist) ; அல்லது

(iii) எந்த ஒரு பட்டியல் விலங்கிலிருந்தும் பெறப்பட்ட ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபிகளின் வணிகராக ; அல்லது

(iv) பட்டியல் விலங்காகவும் உள்ள பிடியிலிருக்கும் விலங்குகளின் (captive animal) வணிகராக ; அல்லது

(v) எந்த ஒரு பட்டியல் விலங்கிலிருந்தும் பெறப்பட்ட இறைச்சியின் வணிகராக ; அல்லது

(b) எந்த ஒரு உணவருந்தும் இல்லத்திலும் (eating place) எந்த ஒரு பட்டியல் விலங்கிலிருந்தும் பெறப்பட்ட இறைச்சியை சமைக்கவோ அல்லது பரிமாறவோ கூடாது

<u>விளக்கம்</u>

இந்த உட்பிரிவின் குறிநோக்கத்தில் உணவருந்தும் இல்லம் (eating place) என்பது, பிரிவு 44 ன் உட்பிரிவு (1) க்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளள விளக்கத்தில் உள்ள அதே பொருளை கொண்டதாகும்.

(2) இந்தப் பிரிவின் மற்ற வகை முறைகளுக்குட்பட்டு, குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்னர் பிரிவு 44 ன் கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட உரிமம், இந்தப் பிரிவின் உட்பிரிவு (1) ன் சட்டக் கூறு (a)ல் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரத்தையோ அல்லது சட்டக் கூறு (b) ல் குறிப்பிடப்பட்டுள்ள

தொழிலையோ துவக்க அல்லது மேற்கொள்ள தேவையான உரிமையினை உரிமத்தை உடையவருக்கோ அல்லது வேறு நபருக்கோ வழங்காது.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) ல் எது எவ்வாறு சொல்லப்பட்டிருப்பினும், பொது நலனுக்குத் தேவை மற்றும் உகந்தது என மத்திய அரசு திருப்தியடைகின்றபோது, அரசுக்கு சொந்தமான அல்லது அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்ற ஒரு கழகம் (கம்பெனிகள் சட்டம், 1956 (1 of 1956) பிரிவு 617 ன் பொருள்படியான அரசு கம்பெனிகளையும் சேர்த்து), அல்லது பெருமளவில் நிதியளிக்கப்பட்டதும் சங்கங்களின் பதிவுச் சட்டம், 1860 (21 of 1860) அல்லது அப்போதைக்குச் செல்லாற்றத்திலுள்ள வேறு எந்த ஒரு சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ஆகியவற்றை ஏற்றுமதிக்காக உட்பிரிவு (1) மற்றும் (2) ன் வகைமுறைகளிலிருந்து, அரசிதழில் பிரசுரம் செய்யப்படும் ஒரு பொதுவான அல்லது சிறப்பு ஆணை மூலம் மத்திய அரசு விலக்களிக்கலாம்.

(4) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) ல் எது எவ்வாறு சொல்லப்பட்டிருந்த போதிலும், ஆனால் இதன் பொருட்டு இயற்றப்படும் விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு, பதனப்படுத்துபவராக (taxidermmist) வியாபாரம் செய்வதற்கு பிரிவு 44 ன் கிழ் உரிமம் வைத்திருக்கும் ஒரு நபர், கீழ் குிறிப்பிடப்பட்டவர்களுக்காக அல்லது அவர்கள் சார்பாக, பட்டியல் விலங்கு எதையும் அல்லது அதனுடைய பாகம் எதையும் பதனப்படுத்தும் (taxidermy) செயல்முறைக்கு உட்படுத்தலாம்.

(a) அரசு அல்லது உட்பிரிவு (3)ன் கீழ் விலக்களிக்கப்பட்ட கழகம் எதற்காகவும் அல்லது சார்பாக ; அல்லது

(b) தலைமை வன உயிரின காப்பாளரின் எழுத்து மூலமான முன் அதிகாரமளிப்புடன் (previous authorisation), கல்வி அல்லது அறிவியல் குறிநோக்கத்திற்காக எந்த ஒரு நபருக்கோ அல்லது அவர் சார்பாகவோ.

49.C. வணிகர்களின் சாற்றல் (Declaration by dealers)

பிரிவு 49-B ன் உட்பிரிவு (1) ன் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரம் அல்லது தொழிலை மேற்கொண்டு வரும் ஒவ்வொரு நபரும் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் கீழ்கண்டவைகள் குறித்து தலைமை வனஉயிரினக் காப்பாளருக்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கோ சாற்றல் செய்ய வேண்டும்.

(a) குறிப்பிடப்பட்ட தேதியின் முடிவில் தன் கையிருப்பில் உள்ள பின்கண்டவைகள் பற்றி -

(i) பட்டியல் விலங்குப் பொருட்கள் ;

(ii) பட்டியல் விலங்குகள் மற்றும் அதன் பாகங்கள் ;

(iii) பட்டியல் விலங்குகளிலிருந்து பெறப்பட்ட ட்ரோஃபிகள் மற்றும் பதப்படுத்தப்படாத ட்ரோஃபிகள் ;

(iv) பட்டியல் விலங்குமான பிடியிலிருக்கும் விலங்குகள் ;

(v) இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட யானைத் தந்தங்கள் அல்லது அவற்றிலிருந்து செய்யப்பட்ட பொருள்கள் ;

(b) சாற்றலில் குறிப்பிடப்பட்ட கையிருப்பு வைக்கப்பட்டிருக்கும் இடம் அல்லது இடங்கள் ; மற்றும்.

(c) சாற்றல் செய்யப்பட்ட கையிருப்பிலிருந்து தனது நல்ல நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்காக தன்னிடமே வைத்துக் கொள்ள விரும்பும் இனங்களைப் பற்றிய விபரங்கள்.

2. உட்பிரிவு (1) ன் கீழ் செய்யப்பட்ட சாற்றலைப் பெறும் தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், பிரிவு 41 ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அல்லது ஏதாகிலுமான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். மேலும் இந்த குறி நோக்கத்திற்கு பிரிவு 41 ன் வகைமுறைகள் கூடிய மட்டிலும் பொருந்தும்.

3. உட்பிரிவு (1) ன் கீழ் செய்யப்படும் சாற்றலில், சாற்றலை செய்யும் நபர் தனது கையிருப்பில் உள்ள இனங்களில் எவற்றையாவது தனது நல்ல நோக்கம் கொண்ட தனிப்பட்ட பயன்பாட்டிற்கு வைத்துக் கொள்ள விரும்பும் தனது விருப்பத்தை தெரியப்படுத்தியிருக்கும் பொழுது, அத்தகைய இனங்களை அவர் சட்டப்படியான உடைமையில் வைத்திருப்பவர் என்பதில் தலைமை வன உயிரினக் காப்பாளர் திருப்தியடைந்தால், இயக்குநரின் முன் ஒப்புதலுடன், கேட்கப்படும் அனைத்து இனங்களுக்கோ அல்லது தலைமை வன உயிரினக் காப்பாளரின் கருத்தில் அத்தகைய நபரின் நல்ல நோக்கம் கொண்ட தனிப்பட்ட பயன்பாட்டிற்கு தேவைப்படும் அத்தகைய இனங்களுக்கு மட்டும் அத்தகைய நபருக்கு உரிமைச் சான்றிதழ் வழங்கலாம். மேலும் அத்தகைய இனங்கள் மீது வகுத்தமைக்கப்படும் விதிமுறைகள் படி அடையாளக்குறி பதிக்கப்பட வேண்டும். ஆனால் அத்தகைய

இனங்கள் எதையும் வணிக வளாகத்தில் (commercial premises) வைக்கக் கூடாது.

4. உட்பிரிவு (3) ல் குறிப்பிடப்பட்ட அடையாளக் குறி எதையும் யாரும் அழிக்கவோ அல்லது போலியாக உருவாக்கவோ கூடாது.

5. உட்பிரிவு (3) ன் கீழ் உரிமைச் சான்றிதழ் மறுக்கப்படுவதை எதிர்த்து மேல் முறையீடு செய்யலாம். இதற்கு பிரிவு 46 ன் உட்பிரிவுகள் (2) (3) மற்றும் (4) ஆகியவைகளின் வகைமுறைகள் பொருந்தும்.

6. எந்த இனங்களுக்காவது உட்பிரிவு (3) ன் கீழ் உரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள ஒரு நபர் -

(a) அந்த இனத்தை எந்த நபருக்காவது அன்பளிப்பு, விற்பனை அல்லது வேறு வகையில் உரிமை மாற்றம் செய்யும்பொழுது, அல்லது

(b) அத்தகைய இனத்தைத் தான் வசிக்கும் மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு உரிமை மாற்றம் செய்யும் பொழுது அல்லது கொண்டு செல்லும் பொழுது,

அப்படி உரிமை மாற்றம் (transfer) செய்த அல்லது கொண்டு சென்ற (transport) முப்பது நாட்களுக்குள், அப்படி உரிமை மாற்றம் செய்த அல்லது கொண்டு சென்ற பகுதியின் அதிகார வரம்பு கொண்ட தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அத்தகைய உரிமை மாற்றம் அல்லது கொண்டு செல்லலைப் பற்றி அறிக்கை செய்ய வேண்டும்.

7. குறிப்பிடப்பட்ட தேதியன்று அல்லது அதன் பிறகு உட்பிரிவு (3) ன் கீழ் உரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள ஒரு நபரைத் தவிர வேறு எந்த நபரும் பட்டியல் விலங்கு, பட்டியல் விலங்குப் பொருள் அல்லது இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட யானைத் தந்தம் அல்லது அதிலிருந்து செய்யப்பட்ட பொருள் எதையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கவோ, விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்கு வைக்கவோ அல்லது வேறு நபருக்கு உரிமை மாற்றம் செய்யவோ கூடாது.

அத்தியாயம் VI (Chapter – VI)

குற்றங்களை தடுத்தலும் கண்டு பிடித்தலும்
(Prevention and detection of offences)

50. பிரவேசித்தல், தேடுதல், கைதுசெய்தல் மற்றும் காவலில் வைப்பதற்கான அதிகாரம் (Power of entry, search, arrest and detention)

1. அப்போதைக்கு செல்லாற்றத்திலுள்ள வேறு எந்தச் சட்டத்திலும் எது எவ்வாறு இருப்பினும், இயக்குநர் அல்லது அவரால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறு எந்த ஒரு அலுவலர் அல்லது தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் (authorised officer) அல்லது எந்த ஒரு வன அலுவலர் அல்லது உதவி ஆய்வாளர் தகுதி நிலைக்கு குறையாத ஒரு காவல் துறை அதிகாரி ஒருவர் எந்த நபராவது இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்று நம்புவதற்கு தகுந்த காரணங்களை கொண்டிருந்தால், -

(a) அத்தகைய எந்த ஒரு நபரையும் அந்த நபர் தன்னுடைய கட்டுப்பாடு, காவல் மற்றும் உடமையில் வைத்திருக்கும் பிடியிலிருக்கும் விலங்கு, வனவிலங்கு, விலங்குப்பொருள், இறைச்சி, ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி, குறிப்பிடப்பட்ட தாவரம் அல்லது அதன் பாகம் அல்லது அதிலிருந்து பெற்றவை அல்லது அவருக்கு வழங்கப்பட்ட அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் வைத்திருக்க வேண்டிய உரிமம், அனுமதிச் சீட்டு அல்லது மற்ற ஆவணங்கள் எவற்றையும் தணிக்கைக்கு கொண்டு வரக் கோரலாம்.

(b) எந்த ஒரு வாகனத்தையும் அல்லது மரக்கலத்தையும் (Vessel) சோதனையிடுவதற்காகவும், விசாரிப்பதற்காகவும் நிறுத்தலாம், அல்லது அத்தகைய நபரின் பற்றுடைமையில் (in occupation) இருக்கும் வளாகம் (premises) நிலம், வாகனம் அல்லது மரக்கலத்திற்குள் பிரவேசித்து சோதனையிடலாம். மற்றும் அவரின் உடமையில் (possession) இருக்கும் மூட்டை, முடிச்சுகள் (baggage) அல்லது மற்றப் பொருட்களை திறந்தும் சோதனையிடலாம்.

(c) இந்தச் சட்டத்திற்கு எதிராக குற்றம் புரியப்பட்டிருப்பதாக தெரியவருகின்ற நிலையில், இக்குற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட பிடியிலிருக்கும் விலங்கு, வனவிலங்கு, விலங்குப்பொருள், இறைச்சி அல்லது ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி அல்லது குறிப்பிடப்பட்டத் தாவரம் அல்லது அதன் பாகம் அல்லது அதிலிருந்து

பெறப்பட்டவை ஆகியவற்றுடன் அக்குற்றத்தை செய்ய பயன்படுத்தப்பட்ட கண்ணி (trab), கருவி (tool), வாகனம், மரக்கலம் (vessel) அல்லது ஆயுதத்தையும், அவை யாருடைய உடைமையிலிருக்கிறதோ அவரிடமிருந்து கைப்பற்றலாம். மற்றும் அத்தகைய நபர் மீது சாட்டப்படும் குற்றம் சம்மந்தமாக அவர் நேரில் வந்து பதிலளிப்பார் என திருப்தியடையவில்லையெனில் அத்தகைய நபரை பிடியாணையில்லாமலேயே கைது செய்து காவலில் வைக்கலாம்.

இருப்பினும் ஒரு வன உயிரின உய்விடம் அல்லது தேசியப் பூங்காவிலிருந்து பத்து கிலோ மீட்டருக்குள் குடியிருக்கும் மீனவர் ஒருவர் அந்த வன உயிரின உய்விடம் அல்லது தேசியப் பூங்காவிலிருக்கும் கரையாட்சிக் கடலில் (territorial waters) வணிக ரீதியிலான மீன் பிடித்தலுக்குப் பயன்படுத்தப்படாத ஒரு **படகில்** கவனக் குறைவாக (inadvertently) உட்புகுந்துவிட்டால் அந்தப் படகிலிருந்து மீன்பிடிக்கும் தூண்டிலையோ அல்லது வலையையோ கைப்பற்றக் கூடாது.

2. நீக்கப்பட்டது (omitted)

3. இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களின் கீழ் உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு பெற்றுச் செய்ய வேண்டிய செய்கையினை ஒரு நபர் செய்து கொண்டிருப்பதை பார்க்கும் உட்பிரிவு 1ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் எவரும் அத்தகையச் செயலை செய்து கொண்டிருக்கும் நபரை, தேவையான உரிமம் அல்லது அனுமதிச் சீட்டினைத் தாக்கல் செய்யக் கோருவதற்காக, தடுத்து நிறுத்திக் காவலில் வைப்பது சட்டப்படியானதேயாகும். மற்றும் அத்தகைய நபர் உரிமத்தையோ அல்லது அனுமதிச் சீட்டினையோ தாக்கல் செய்ய தவறும் பட்சத்தில் அவர் தன்னுடைய பெயர் மற்றும் முகவரியினை தெரிவிக்கவில்லையென்றாலும் மற்றபடி அவர் தனக்கு எதிராக கொடுக்கப்படும் அழைப்பாணை அல்லது கொடுக்கப்படும் நடவடிக்கைக்கு உரிய வகையில் பதிலளிப்பார் என கைது செய்யும் அலுவலர் திருப்தியடையாவிட்டாலும், பிடியாணையின்றி அத்தகைய நபரை கைது செய்யலாம்.

3.A. வன உயிரினப் பாதுகாப்பு உதவி இயக்குநர் அல்லது உதவி வனப்பாதுகாவலர் தகுதி நிலைக்கு குறையாத அலுவலர் ஒருவர், அவரோ அல்லது அவரது சார்நிலைப் பணியாளரோ உட்பிரிவு 1ன் சட்டக் கூறு (c)- ன் கீழ், பிடியிலிருக்கும் விலங்கினையோ அல்லது வன விலங்கினையோ கைப்பற்றியிருந்தால், எந்த குற்றம் சம்மந்தமாக அத்தகைய கைப்பற்றுதல் மேற்கொள்ளப்பட்டதோ அந்த குற்றத்தை விசாரிக்கும் அதிகார வரம்புடைய

நீதிமன்ற நடுவர் (magistrate) முன்னிலையில், தேவைப்பட்டால், அப்படித் தேவைப்படும் பொழுது கைப்பற்றப்பட்ட விலங்கினை கொண்டு வந்து நிறுத்துவதற்கான உறுதி முறியினை (Bond) வழங்கும் எந்த ஒரு நபரிடமும், பாதுகாப்பிற்காக கைப்பற்றப்பட்ட விலங்கினை ஒப்படைக்கலாம்.

4. முன்கண்ட அதிகாரத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்ட எந்த ஒரு நபரையும் அல்லது கைப்பற்றப்பட்ட எந்த ஒரு பொருளையும் சட்டப்படி கையாளுவதற்காக, தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது இதன் பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலருக்கோ தகவல் கொடுத்து விட்டு, நீதிமன்ற நடுவர் முன்பு உடனடியாக கொண்டு செல்ல வேண்டும்.

5. இந்தப் பிரிவின் கீழ் ஆஜர்படுத்தப்பட வேண்டிய எந்த ஒரு பொருளையும் நியாயமான காரணமின்றி ஆஜர் படுத்தத் தவறும் எந்த ஒரு நபரும் இந்தச் சட்டத்திற்கு எதிரான ஒரு குற்றத்தை செய்தவராவார்.

6. இறைச்சி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி, குறிப்பிடப்பட்டத் தாவரம் அல்லது அதன் பகுதி அல்லது அதிலிருந்து பெறப்பட்டவை போன்றவை இந்தப் பிரிவின் வகை முறைகள்படி கைப்பற்றப்படும்பொழுது, வன உயிரின பாதுகாப்பு உதவி இயக்குநர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற தகுதி நிலை அலுவலர் அல்லது தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் (authorized officer) ஆகியோர் இதற்கென வகுத்தமைக்கப்படும் வழிமுறைகள் படி, கைப்பற்றப்பட்டவைகளை முடிவு (dispose) செய்யலாம்.

7. இந்தச் சட்டத்திற்கு எதிராக இழைக்கப்படும் குற்றத்தை தடுப்பதற்கோ அல்லது கண்டுபிடிப்பதற்கோ அல்லது இந்தச் சட்டத்தை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவரை கண்டுபிடிப்பதற்கோ அல்லது உட்பிரிவு 1 ன் சட்டக் கூறு (c) ன் படி கைப்பற்றுதலை மேற்கொள்வதற்கோ உதவி செய்யும்படி எந்த நபரையாவது பிரிவு 1ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் கோரினால் அந்த நபர் அல்லது நபர்கள் அப்படி உதவி கோரும் அலுவலருக்கு கேட்கப்பட்ட உதவியை நல்க கடமைப்பட்டவர்களாவார்கள்.

8. அப்போதைக்கு செல்லாற்றத்திலுள்ள மற்ற எந்தச் சட்டத்திலும் எது எப்படி கூறப்பட்டிருந்த போதிலும், வன உயிரின பாதுகாப்பு உதவி இயக்குநர் தகுதி நிலைக்கு குறையாத ஒரு அலுவலர் அல்லது மாநில அரசால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உதவி வனப்பாதுகாவலர் தகுதி நிலைக்கு குறையாத எந்த ஒரு அலுவலரும், இந்தச் சட்டத்திற்கு எதிராக

இழைக்கப்படும் குற்றங்களை புலனாய்வு செய்யும் குறிநோக்கத்திற்காக கீழ்க்கண்ட அதிகாரங்களை உடையவர்களாவார்கள்.

(a) சோதனை ஆணை வழங்கல் (to issue a search warrant) ;

(b) சாட்சிகளின் வருகையை கட்டாயப்படுத்தி செயல்படுத்துதல் ;

(c) ஆவணங்களையும் சான்று பொருட்களையும் (material objects) கண்டுபிடிக்கவும் ஆஜர்படுத்தவும் கட்டாயப்படுத்துதல் ;

(d) சாட்சியத்தைப் பெறுதல் மற்றும் பதிவு செய்தல் (to receive and record evidence).

9. உட்பிரிவு 8 ன் சட்டக் கூறு (d) ன் கீழ் பதிவு செய்யப்படும் எந்த சாட்சியமும், குற்றம் சாட்டப்பட்டவர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில், நீதிமன்ற நடுவர் முன்பு அடுத்துத் தொடரப்படும் விசாரணையில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

51. தண்டனைகள் (Penalties)

1. அத்தியாயம் V-A மற்றும் பிரிவு 38 J தவிர, இந்தச் சட்டத்தின் வேறு எந்த ஷரத்தையோ அல்லது அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதி எதையுமோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையினையோ மீறும் எந்த ஒரு நபரும், அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் அல்லது அனுமதிச் சீட்டின் நிபந்தனைகள் எதையும் மீறும் ஒருவரும் இந்தச் சட்டத்திற்கு எதிராக ஒரு குற்றத்தை செய்தவராவார். மற்றும் குற்றவாளி எனக் குற்றத் தீர்ப்பு வழங்கும் பொழுது (on conviction) மூன்று வருடம் வரை நீளும் சிறைத்தண்டனையோ அல்லது ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் வரை நீளும் அபராதத் தொகையோ அல்லது இரண்டையும் சேர்த்தோ விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்.

இருப்பினும் செய்த குற்றம், பட்டியல் I அல்லது பட்டியல் II ன் பகுதி II ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விலங்கு அல்லது அத்தகைய விலங்கின் இறைச்சி அல்லது அத்தகைய விலங்கிலிருந்து பெறப்பட்ட விலங்குப் பொருள், ட்ரோஃபி அல்லது பதப்படுத்தப்படாத ட்ரோஃபி சம்பந்தப்பட்டதாகவோ அல்லது செய்த குற்றம் வன உயிரின உய்விடம் அல்லது தேசியப் பூங்காக்களில் நடைபெற்ற வேட்டையாடுதல் அல்லது வன உயிரின உய்விடம் அல்லது தேசிய பூங்காக்களின் எல்லைகளை மாற்றியமைத்தது சம்மந்தப்பட்டதாகவோ இருந்தால் அத்தகைய குற்றத்திற்கு மூன்று வருடத்திற்கு குறையாத ஆனால் ஏழு வருடங்கள் வரை நீளும் சிறைத் தண்டனையுடன் ரூபாய் பத்தாயிரத்திற்கும் குறையாத அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

மேலும் இந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தன்மை கொண்ட குற்றத்தை இரண்டாவது அல்லது அதை தொடர்ந்து செய்யும் நிகழ்வுகளில் சிறைத் தண்டனைக் காலம் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் ஏழு ஆண்டுகள் வரை நீளக் கூடியதாகவும் கூடவே ரூபாய் இருபத்தி ஐந்தாயிரத்திற்கு குறையாமல் அபராதமும் விதிக்கப்பட வேண்டும்.

1.A. அத்தியாயம் V-A ன் வகை முறைகளை (provisions) மீறும் ஒருவர், மூன்று ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் ஏழு ஆண்டுகள் வரை நீளக் கூடிய சிறைத் தண்டனையுடன் கூடவே ரூபாய் பத்தாயிரத்திற்கு குறையாத அபராதத்துடன் தண்டிக்கப்பட வேண்டும்.

1.B. பிரிவு 38 J ன் வகைமுறைகளை (provisions) மீறும் நபர் ஒருவருக்கு ஆறுமாதம் வரை நீளக் கூடிய சிறைத் தண்டனையோ அல்லது ரூபாய் இரண்டாயிரம் வரை நீளக் கூடிய அபராதத்தையோ அல்லது இந்த இரண்டு வகையான தண்டனைகளையும் சேர்த்தோ விதிக்கப்பட வேண்டும்.

இருப்பினும் இரண்டாவது அல்லது அதை தொடர்ந்து நிகழ்கின்ற குற்றத்திற்கு ஒரு வருடம் வரை நீளக் கூடிய சிறைத் தண்டனையையோ அல்லது ரூபாய் ஐந்தாயிரம் வரை நீளக் கூடிய அபராதத்தையோ தண்டனையாக விதிக்கப்படும்.

2. இந்தச் சட்டத்திற்கு எதிரான ஒரு குற்றத்திற்காக ஒருவர் தண்டிக்கப்படும்பொழுது வழக்கை விசாரித்த நீதிமன்றமானது, இக்குற்ற வழக்கிற்கு சம்மந்தப்பட்ட பிடியிலிருக்கும் விலங்கு, வன விலங்கு, விலங்குப்பொருள், ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி, இறைச்சி, இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட தந்தம் அல்லது அத்தகைய தந்தத்திலிருந்து செய்யப்பட்டபொருள், குறிப்பிடப்பட்ட யாதொரு தாவரம், அதன் பாகம் அல்லது அதிலிருந்து பெறப்பட்டவை மற்றும் அக்குற்றம் இழைப்பதில் பயன்படுத்தப்பட்ட கண்ணி, கருவி, வாகனம், மரக்கலம் அல்லது ஆயுதம் எதையும் மாநில அரசுக்கு பறிமுதல் செய்து ஆணையிடுவதோடு தண்டிக்கப்பட்ட நபர் இந்தச் சட்டத்தின் கீழ் வைத்திருக்கும் உரிமம் அல்லது அனுமதிச் சீட்டினையும் இரத்து செய்யலாம்.

3. இத்தகைய உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு இரத்து அல்லது பறிமுதல் என்பது அக்குற்றத்திற்கு விதிக்கப்படும் மற்ற தண்டனைக்கு கூடுதலாகும்.

4. ஆயுதச் சட்டம், 1959 (54 of 1959) ன் கீழ் ஆயுதம் வைத்துக் கொள்ள உரிமம் வழங்கப்பட்ட ஆயுதத்தை வைத்து இந்தச் சட்டத்திற்கு எதிரான குற்றத்தை ஒருவர் புரிந்திருந்தால் அவர் தண்டிக்கப்படும்பொழுது,

அத்தகைய நபருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்யும்படி நீதிமன்றம் கட்டளையிடலாம். அத்தகைய நபர் தண்டிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு ஆயுதச் சட்டம், 1959 (54 of 1959) ன் கீழ் உரிமம் பெறுவதற்கு தகுதியில்லாதவராவார்.

5. வன உயிரின உய்விடம் அல்லது தேசியப் பூங்காவில் வேட்டையாடிய குற்றம் அல்லது அத்தியாயம் V –A ன் வகைமுறைகளுக்கு (provision) எதிராக புரிந்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்ட ஒரு நபருக்கு, அவர் பதினெட்டு வயதிற்குள் இருந்தாலன்றி, குற்ற விசாரணை முறைச் சட்டம், 1973 (2 of 1974) பிரிவு 360 அல்லது குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958 (20 of 1958) ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள எவையும் பொருந்தாது.

51.A. பிணையத்தில் விடுதலை செய்யும் பொழுது பின்பற்றப்பட வேண்டிய சில நிபந்தனைகள் (certain conditions to apply while granting bail)

பட்டியல் I அல்லது பட்டியல் II ன் பகுதி II ல் சம்பந்தப்பட்டக் குற்றம் அல்லது வன உயிரின உய்விடம் அல்லது தேசியப் பூங்காவில் வேட்டையாடிய குற்றம் அல்லது அத்தகைய பூங்காக்கள் மற்றும் உய்விடங்களின் எல்லைகளை மாற்றியமைத்தல் சம்பந்தமான குற்றத்தை புரிந்ததாக ஒருவர் குற்றம் சாட்டப்பட்டு இந்தச் சட்டத்தின் வகைமுறைகள்படி கைது செய்யப்படும் பொழுது, அந்த நபர் ஏற்கனவே இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டிருந்தால், குற்ற விசாரணை முறைச் சட்டம், 1973 (2 of 1974) ல் எது எப்படி சொல்லப்பட்டிருந்தபோதிலும் அத்தகைய நபரை கீழ்க்கண்ட நிபந்தனைகளை பின்பற்றாமல் பிணையத்தில் விடுதலை செய்யக் கூடாது.

(a) பிணையத்தில் விடுதலை செய்வதை ஆட்சேபிக்க அரசு வழக்கறிஞருக்கு (Public Prosecutor) ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் மற்றும்

(b) பிணையத்தில் விடுதலை கோரும் மனுவை அரசு வழக்கறிஞர் ஆட்சேபிக்கும் நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் அக்குற்றத்தைப் புரிந்திருக்க மாட்டார் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாகவும், அவர் பிணைய விடுதலையில் இருக்கும்பொழுது எந்த குற்றத்தையும் செய்யமாட்டார் எனவும் நீதிமன்றம் திருப்தியடைய வேண்டும்.

52. குற்ற முயற்சிகளும் குற்ற உடந்தையும் (Attempts and abetments)

இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை (provisions) அல்லது அவற்றின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளை அல்லது வழங்கப்பட்ட ஆணைகளை யாரொருவர் மீற

முயற்சிக்கின்றாரோ அல்லது அத்தகைய மீறலுக்கு உடந்தையாக இருக்கிறாரோ அவர் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை, விதிகளை அல்லது ஆணைகளை நேர்வுக்கேற்றவாறு மீறியதாக கொள்ளப்படும்.

53. முறையிலா கைப்பற்றுதலுக்கு தண்டனை (Punishment for wrongful seizure)

இந்தச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களைச் செலுத்தும் எந்த ஒரு நபரும் பிரிவு 50ல் சொல்லப்பட்டுள்ள காரணங்களின் படி கைப்பற்றுதலை மேற்கொள்ளும் பாசாங்கில் (pretence) எந்த நபருடைய சொத்தினையாவது அடாவடித்தனமாகவும் (vexatiously) தேவையில்லாமலும் (unnecessarily) கைப்பற்றினால், அவர் குற்றவாளி எனக் குற்றத் தீர்ப்பு வழங்கப்படும் பொழுது (on conviction) ஆறுமாதங்கள் வரை நீளும் சிறைத் தண்டனையோ அல்லது ரூபாய் ஐநூறு வரை நீளும் அபராதமோ அல்லது இரண்டையும் சேர்த்தோ விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

54. குற்றங்களை சமரசமாக தீர்த்துக் கொள்ளும் அதிகாரம் (power to compound offences)

1. இந்தச் சட்டத்திற்கு எதிராக ஒரு நபர் ஒரு குற்றத்தை புரிந்துள்ளார் என்பதற்கான நியாயமான சந்தேகம் நிலவும் பொழுது, அந்தக் குற்றத்தை சமரசமாக (இணக்கமாக) தீர்த்துக் கொள்ளும் வழியாக அத்தகைய நபர் செலுத்தும் தொகையினை ஏற்றுக் கொள்ளும் அதிகாரத்தை வன உயிரினப் பாதுகாப்பு இயக்குநர் அல்லது உதவி வன உயிரினப் பாதுகாப்பு இயக்குநர் தகுதி நிலைக்கு குறையாத ஒரு அலுவலருக்கு மைய அரசும், அதே முறையில் தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது துணை வனப்பாதுகாவலர் தகுதி நிலைக்கு குறையாக ஒரு அலுவலருக்கு மாநில அரசும், அறிவிக்கை மூலம் அதிகாரமளிக்கலாம்.
2. அத்தகைய தொகையினை அத்தகைய அலுவலரிடம் சந்தேகத்திற்குட்பட்ட நபர் செலுத்தியவுடன், அவர் காவலில் வைக்கப்பட்டிருந்தால் அவர் விடுவிக்கப்பட வேண்டும். மற்றும் அந்தக் குற்றம் சம்பந்தமாக மேற்கொண்டு எந்த நடவடிக்கையினையும் அத்தகைய நபருக்கு எதிராக மேற்கொள்ளக் கூடாது.
3. குற்றத்தினை சமரசமாக தீர்த்துக் கொள்ளும் அலுவலர், குற்றவாளிக்கு இந்தச் சட்டத்தின் கீழ் உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு ஏதாகிலும் வழங்கப்பட்டிருந்தால் அதை இரத்து செய்து ஆணை பிறப்பிக்கலாம் அல்லது அவ்வாறு செய்வதற்கு அவர் அதிகாரமுடையவர் இல்லையெனில் அப்படி அதிகாரமுடைய அலுவலர் ஒருவரை உரிமம் அல்லது அனுமதிச் சீட்டை இரத்தும் செய்யும்படிகோரலாம்.

4. உட்பிரிவு (1) ன் கீழ் சமரசத் தொகையாக (இணக்கக் கட்டணம்) ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்வதாக ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை எந்த நேர்விலும் ரூபாய் இருபத்தி ஐந்தாயிரத்திற்கு மிமையாகக் கூடாது.

இருப்பினும் பிரிவு 51 ன் கீழ் குறைந்த பட்ச கால சிறைத் தண்டனைக் குரியவைகளாக குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தை சமரசமாக தீர்த்து கொள்ளக் கூடாது.

55. குற்றங்களை புலன் கொள்ளல் (விசாரணைக்கு எடுத்துக் கொள்ளல்) (Cognizance of offences)

இந்தச் சட்டத்திற்கு எதிரான எந்த குற்றத்தைப் பற்றியும் கீழ்க்கண்ட நபர்களைத் தவிர வேறு எந்த ஒரு நபர் குற்ற முறையீடு (Complaint) செய்தாலும் அதை எந்த நீதிமன்றமும் புலன் கொள்ளக் கூடாது (விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது). -

(a) வன உயிரினப் பாதுகாப்பு இயக்குநர் அல்லது இதன் பொருட்டு மைய அரசினால் அதிகாரமளிக்கப்படும் மற்ற எந்த ஒரு அலுவலர் ; அல்லது

(aa) அத்தியாயம் IV-A ன் வகைமுறைகளை (provisions) மீறும் பொருட்கூறுகளில் மைய மிருகக் காட்சி சாலைகளின் ஆணையத்தின் உறுப்பினர்செயலாளர் ; அல்லது

(b) தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது மாநில அரசால் குறிப்பிடப்படும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு, இதன் பொருட்டு மாநில அரசால் அதிகாரமளிக்கப்படும் அலுவலர் ; அல்லது

(bb) பிரிவு 38.Jன் வகை முறைகள் சம்பந்தமான மீறல்களில் மிருகக் காட்சி சாலையின் பொறுப்பு வகிக்கும் அலுவலர் ; அல்லது

(c) சாட்டுரைக்கப்பட்ட குற்றத்தைப் பற்றியும் (alleged offence) குற்ற முறையீடு (complaint) செய்யவிருக்கும் தனது உள்ளெண்ணத்தைப் (intension) பற்றியும், வகுத்தமைக்கப்பட்ட முறையில், மைய அரசுக்கோ அல்லது மாநில அரசுக்கோ அறுபது நாட்களுக்கு குறையாத அறிவிப்பை (notice) கொடுக்கும் நபர் எவரும்.

56. மற்றச் சட்டங்களின் செல்லாற்றத்திற்கு தடையில்லை (Operation of other laws not barred)

இந்தச் சட்டத்தின் கீழ் குற்றமாகும் எந்த செயலுக்கும் (acts) அல்லது செய்யத்தக்க செய்யாமைக்கும் (omission) அப்போதைக்குச் செல்லாற்றத்திலுள்ள மற்ற எந்தச் சட்டத்தின் கீழாவது குற்ற வழக்கிடுவதையோ (prosecute) அல்லது இந்தச் சட்டம் விதிக்கும் தண்டனை அல்லது தண்டப் பணத்தைக் காட்டிலும் வேறு சட்டத்தின் கீழ் அதிகமான தண்டனை பெறுவதற்குள்ளாகும் குற்றங்களை

அத்தகையச் சட்டத்தின் கீழ் குற்ற வழக்கிடுவதையோ (prosecute) இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள எவையும் தடுப்பதாக கொள்ளக் கூடாது.

இருப்பினும் எந்த ஒரு நபரும் ஒரே குற்றத்திற்காக இருமுறை தண்டிக்கப்படக் கூடாது.

57. சில வழக்குகளில் துணிபு கொள்ளுதல் (presumption to be made in certain cases)

இந்தச் சட்டத்திற்கெதிரான ஒரு குற்றத்தின் குற்ற வழக்கிடுதலில் (prosecution), பிடியிலிருக்கும் விலங்கு, விலங்குப் பொருள், இறைச்சி, ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி, குறிப்பிடப்பட்டத் தாவரம் அல்லது அதன் பாகம் அல்லது அவற்றிலிருந்து பெறப்பட்டவையை, தன்னுடைய உடமையில், காவலில் அல்லது கட்டுப்பாட்டில் ஒருவர் வைத்திருந்தார் என்பது நிறுவப்பட்டால் (established) அதன் எதிர்நிலை (contrary) மெய்ப்பிக்கப்படும்வரை, மெய்ப்பிக்கும் பாடு (burden of proof) குற்றம் சாட்டப்பட்டவரைச் சாரும், அத்தகை நபர் அத்தகைய பிடியிலிருக்கும் விலங்கு, விலங்குப் பொருள், இறைச்சி, ட்ரோஃபி, பதப்படுத்தப்படாத ட்ரோஃபி, குறிப்பிடப்பட்டத் தாவரம் அல்லது அதன் பாகம் அல்லது அவற்றிலிருந்து பெறப்பட்டவையை சட்ட முரணாக தன் உடமையில், காவலில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாக துணிபு கொள்ளப்பட வேண்டும் (shall be presumed).

58. நிறுவனங்கள் செய்யும் குற்றங்கள் (offences by companies)

1. இந்தச் சட்டத்திற்கெதிரான ஒரு குற்றத்தை ஒரு நிறுவனம் (company) செய்திடும்பொழுது, அந்தக் குற்றத்தைச் செய்திடும் பொழுது அந்த நிறுவனத்திற்கும் அதன் வியாபார நடவடிக்கைகளுக்கும் பொறுப்பு வகித்த ஒவ்வொரு நபரும் குற்றம் செய்தவராக கொள்ளப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன்படி தண்டிக்கப்படுவதற்குள்ளாவார்கள். இருப்பினும் ஒருவர் தனக்குத் தெரியாமலேயே குற்றம் செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது அத்தகைய குற்றம் செய்யப்படுவதை தடுக்க தகுந்த அனைத்து சிரத்தைகளையும் தான் மேற்கொண்டதாகவோ நிரூபணம் செய்தால், இந்த உட்பிரிவில் சொல்லப்பட்ட எவையும் அத்தகைய நபரை தண்டிக்கத் தக்கவராகச் செய்யாது.
2. உட்பிரிவு 1ல் எது எவ்வாறு இருப்பினும், இந்தச் சட்டத்திற்கெதிரான ஒரு குற்றத்தை ஒரு நிறுவனம் (company) செய்திடும்பொழுது, அந்த நிறுவனத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் மற்றும் இதர அலுவலர் எவரின் இசைவுடனோ (consent) அல்லது உடந்தையுடனோ அல்லது கவனமின்மை காரணமாகவோ (negligence) குற்றம் நடைபெற்றதாக நிரூபணம் செய்யப்பட்டால், அத்தகைய நபர் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம்

புரிந்தவராக கொள்ளப்பட்டு, நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டு அதன்படி தண்டிக்கப்படுவதற்குள்ளாவார்.

விளக்கம் - இந்தப் பிரிவின் குறிநோக்கத்தில் -

a. நிறுவனம் (company) என்பது ஒரு கூட்டமைப்பு (body corporate) என பொருள்படுவதோடு ஒரு தொழில் கூட்டமைப்பு / நிறுவகம் (firm) அல்லது மற்ற தனி நபர்களின் சங்கம் (association of individuals) ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

b. ஒரு தொழில் கூட்டமைப்பு/நிறுவகம் சம்பந்தமாக 'இயக்குநர்' என்பது அந்த தொழில் கூட்டமைப்பு/நிறுவகத்தின் கூட்டாளி எனப் பொருள்படும்.

அத்தியாயம் - VI-A

சட்ட முரணான (illegal) வேட்டையாடுதல் மற்றும் வணிகம் மூலம் பெற்ற சொத்துக்களை தண்ட இழப்பாக (Forfeiture) பறிமுதல் செய்தல்.

58-A. பொருந்துகை (Application):-

இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ளவை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு மட்டுமே பொருந்துவனவாகும்.

(a) இந்தச் சட்டத்தின் கீழ் மூன்று வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு சிறை தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றத்தினைச் செய்ததாகக் குற்றத் தீர்ப்புப் பெற்றவர்கள் (Persons convicted).

(b) சட்டக் கூறு (Clause) (a)ல் குறிப்பிடப்பட்ட நபரின் கூட்டாளிகள் (Associates)

(c) சட்டக் கூறு (a) அல்லது (b) ல் குறிப்பிடப்பட்ட ஒரு நபரின் உடமையில் முன்பு எப்போதாகிலும் இருந்த சொத்தினை தற்போது தன் உடமையில் வைத்திருக்கும் உடைய ஒருவர் (Holder - இந்தச் சட்டக் கூறில் இனிமேல் தற்போதைய உடமையாளர் எனக் குறிப்பிடப்படுபவர்) - அல்லது சட்டக் கூறு (a) அல்லது (b)ல் குறிப்பிடப்பட்ட நபருக்கு பின்பும் தற்போதைய உடமையாளருக்கு முன்னதாகவும் சொத்தின் உடமையாளராக இருந்தவர்கள் அந்தச் சொத்தினை நல்ல நம்பிக்கையில் போதுமான விலை கொடுத்து வாங்கியிருந்தால் அன்றி அத்தகைய உடமையாளர்கள்

58 – B வரைவுரைகள் (Definitions) - தறுவாயின் தேவை வேறானலன்றி (unless the context require otherwise) இந்த அத்தியாயத்தில்

(a) **"மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்" (Appellate Tribunal)** என்பது தண்ட இழப்பாக பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் (forfeited property) சம்பந்தமாக பிரிவு 58-Nன் கீழ் அமைக்கப்பட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமாகும்.

(b) **"கூட்டாளி" (associate)**: இந்த அத்தியாயத்தின் கீழ் தண்ட இழப்பாக பறிமுதல் செய்யப்படுவதற்கு உள்ளான சொத்துக்களின் உரிமையாளரின் கூட்டாளிகளில் கீழ்கண்டவர்களும் உள்ளடங்குவர்.

(i) அந்த நபரின் விஷயங்களை நிர்வகித்தும் கணக்கு வழக்குகளை கவனித்தும் வந்தவர் அல்லது வருபவர்;

(ii) அத்தகைய நபர் உறுப்பினராகவோ, கூட்டாளியாகவோ (Partner) அல்லது இயக்குநராகவோ (Director) இருந்து வரும் சங்கம்

(Association of persons), குழுமம் (Body of individuals), 1956ம் வருடத்திய (1956ம் ஆண்டின் முதல் சட்டம்) கம்பெனிகள் சட்டத்தின் படியான கூட்டுத் தொழில் நிறுவகம் (Partnership firm) அல்லது தனியார் நிறுவனம் (Private company);

(iii) உட்கூறு (sub clause) (ii) ல் கூறப்பட்டுள்ள சங்கம், குழுமம், கூட்டுத் தொழில் நிறுவனம் அல்லது தனியார் நிறுவனத்தில் அத்தகைய நபர் உறுப்பினராகவோ, கூட்டாளியாகவோ அல்லது இயக்குநராகவோ இருந்த அல்லது இருக்கின்ற காலத்தில் உறுப்பினராகவோ, கூட்டாளியாகவோ அல்லது இயக்குநராகவோ இருந்த அல்லது இருக்கின்ற எந்த ஒரு நபரும் ;

(iv) உட்கூறு iii ல் சொல்லப்பட்ட ஒரு சங்கம், குழுமம், கூட்டுத் தொழில் நிறுவனம் அல்லது தனியார் நிறுவனத்தின் விஷயங்களை நிர்வகித்து வந்த அல்லது நிர்வகித்து வரும் அல்லது அதன் கணக்கு வழக்குகளை கவனித்து வந்த அல்லது கவனித்து வரும் எந்த ஒரு நபரும்;

(v) 1. அத்தகையக நபரால் உருவாக்கப்பட்ட பொறுப்புரிமை அமைப்பின் (Trust) பொறுப்புரிமையர் (Trustee); அல்லது
2. அத்தகைய நபரின் பங்களிப்புள்ள (பங்களிப்பு கொடுக்கும் தேதியில் பொறுப்புரிமை அமைப்பின் சொத்து மதிப்பில் 20% க்கு குறையாமல் பங்களிப்பு இருக்க வேண்டும். முன்பு கொடுத்த பங்களிப்பும் சேர்க்கப்படும்). பொறுப்புரிமை அமைப்பில் பொறுப்புரிமையராக இருப்பவர்;

(vi) அத்தகைய நபரின் எந்த சொத்தையாவது அந்த நபரின் சார்பில் வேறு யாராவது வைத்திருப்பதாக எழுத்து மூலமாக பதியத்தக்க காரணங்களின் அடிப்படையில் தக்க அதிகாரி (Competent authority) கருதுவாரானால் அந்த சொத்தை வைத்திருப்பதாக கருதப்படும் அந்த வேறு நபர் ;

(c) **"தக்க அதிகாரி" (competent authority)** என்பவர் பிரிவு 58-Dன் கீழ் அதிகாரமளிக்கப்படும் ஒரு அதிகாரியாவார் ;

(d) **"மறைத்தல்" (Concealment)** என்பது சொத்தை மறைத்து வைத்தல் அல்லது சொத்தின் தன்மை (nature), மூலம் (source) அமைவு (disposition) இடம் மாறுதல் (movement) அல்லது சொத்துரிமையினை அதன் உண்மை நிலைக்கு மாறாக (disguise) காண்பித்தல் - மற்றும் எலக்ட்ரானிக் ட்ரான்ஸ்மிஷன் அல்லது வேறு

முறையில் சொத்தினை இடம் மாற்றுதல் மற்றும் அதனை மாற்றியமைத்தலை (conversion) யும் இது உள்ளடக்கும்;

(e) **"முடக்கி வைத்தல்" (Freezing)** என்பது பிரிவு 58-Fன் கீழ் பிறப்பிக்கப்படும் ஒரு ஆணையின் வாயிலாக சொத்தின் உரிமை மாற்றம் (transfer), சொத்தை முடிவு செய்தல் (disposition) அல்லது இடம் மாற்றுதலை தற்காலிகமாக தடை செய்வதாகும்;

(f) **"அடையாளம் காணுதல்" (identifying)** என்பது வன உயிரினங்களை சட்ட முரணாக வேட்டையாடுதல் மற்றும் வன உயிரினங்கள் மற்றும் அதன் பொருட்கள் சம்பந்தப்பட்ட சட்ட முரணான வணிகம் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட அல்லது அவற்றின் மூலமாக சேர்த்த சொத்து என்பதை மெய்யுறுதி (establishment of proof) அல்லது சான்றுறுதி செய்வதையும் உள்ளடக்கும் ;

(g) **"சட்டத்திற்கு முரணாக பெற்றடைந்த சொத்து" (illegally acquired property)** என்பது இந்த அத்தியாயம் யாருக்கு பொருந்துகிறதோ அவரை பொறுத்தவரை கீழ்கண்டவாறு பொருள் கொண்டதாகும், -

(i) சட்டத்திற்கு முரணாக வன உயிரினங்களை வேட்டையாடுதல் மற்றும் வன உயிரினங்கள் மற்றும் அதன் பொருட்களின் சட்டத்திற்கு முரணான வணிகம் ஆகியவற்றின் மூலமாகவோ அதன் காரணமாகவோ அடைந்த அல்லது ஈட்டிய வருமானம் (income), சம்பாத்தியம் (earnings) அல்லது சொத்திருப்பிலிருந்து (assets) முழு விலையையுமோ அல்லது விலையின் ஒரு பகுதியையோ கொடுத்து ஒருவர் பெற்றடைந்த எந்த சொத்தும்;

(ii) உட்கூறு (i) ல் கூறப்பட்ட சொத்திலிருந்து அல்லது அதிலிருந்து கிடைத்த வருமானம் அல்லது சம்பாத்தியத்தி-லிருந்து முழுவிலையையுமோ அல்லது அதில் ஒரு பகுதியையோ கொடுத்து ஒருவர் பெற்றடைந்த சொத்து மற்றும் கீழ்கண்ட வைகளையும் உள்ளடக்கும்.

(A) தற்போது ஒருவரிடம் உள்ள சொத்து அந்தச் சொத்து அதனுடைய முந்தைய உடமையாளரை (previous holder) பொறுத்தவரை, அந்தச் சொத்தின் உடமையாளர் என்ற நிலையினை அவர் இழக்காமலிருந்து, இந்தச் சட்டப் பிரிவின் உட்கூறின் கீழ் "சட்டத்திற்கு முரணாகப் பெற்றடைந்த சொத்தாக" கருதப்பட வேண்டிய ஒன்றாக இருந்தி-ருந்தால் அத்தகைய சொத்தும் இந்த உட்கூறின் கீழ் உள்ளடங்கிய சொத்தாகும்.

ஆனால் முந்தைய உடமையாளருக்குப் (previous holder) பின் எப்போதாகிலும் அத்தகைய சொத்தின் உடமையைப் பெற்றவர் - அப்படி உரிமைப் பெற்றவர்கள் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டவர்களாக இருக்கும் பட்சத்தில் அதில் கடைசியாக உடமைப் பெற்றவர்- நல்லெண்ணத்தில் (good faith) தக்க மறுபயன் (adequate consideration) கொடுத்து அச்சொத்தினைப் பெற்றிருந்தால் அந்தச் சொத்து இதில் சேராது.

(B) மேலே சொன்ன இனம் (A) ல் கண்ட சொத்து அல்லது அதிலிருந்து கிடைத்த வருமானம் அல்லது சம்பாத்தியத்திலிருந்து முழு விலையையுமோ அல்லது விலையில் ஒரு பகுதியையோ கொடுத்து ஒருவர் பெற்ற சொத்தும் இதில் உள்ளடங்கும் ;

(h) **"சொத்து" (property)** என்பது சட்டத்திற்கு முரணாக வன உயிரினங்களை வேட்டையாடுதல் மற்றும் வன உயிரினம் மற்றும் அதன் பொருட்கள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கு முரணான வணிகம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து (property) அல்லது சொத்திருப்பாகும் (assets). அத்தகைய சொத்து அல்லது சொத்திருப்பு என்பது பருப்பொருள் (Corporal) அல்லது பருப்பொருள் அல்லாத (incorporeal), தொட்டுணரத்தக்க (tangible) அல்லது தொட்டுணர இயலாத (intangible) அசையும் (movable) அல்லது அசையா (immovable) சொத்தாகவோ அல்லது சொத்தில் உள்ள அக்கறையாகவோ (interest in the property) அல்லது உரிமை மூலம் (title) குறித்து சான்று பகரும் ஒப்பாவணமாகவோ (deeds) அல்லது முறை ஆவணமாகவோ (instruments) இருக்கலாம்.

(i) **"உறவினர்" (Relative)** என்பது பின்வருமாறு பொருள்படும்

1.அந்த நபரின் வாழ்க்கைத் துனை (spouse) ;

2.அந்த நபரின் சகோதரர் அல்லது சகோதரி ;

3.அந்த நபரின் வாழ்க்கைத் துணையின் சகோதரர் அல்லது சகோதரி;

4.அந்த நபரின் நேர்வழி முந்தையர் (Lineal ascendant) அல்லது நேர்வழி பிந்தையர் (Lineal descendant);

5.அந்த நபரின் வாழ்க்கைத் துணையின் நேர்வழி முந்தையர் அல்லது நேர்வழி பிந்தையர் ;

6.உட்கூறு (2), (3), (4) மற்றும் (5)ல் குறிப்பிடப்பட்டுள்ள நபரின் வாழ்க்கைத் துணை;

7.உட்கூறு (2) அல்லது உட்கூறு (3)ல் குறிப்பிடப்பட்டுள்ள நபரின் நேர்வழி பிந்தையர் எவரும் ;

(j) "கண்டுபிடித்தல்" (tracing) என்பது சொத்தின் தன்மை (nature), மூலம் (source), அமைவு (disposition), இடமாற்றம் (movement), உரிமை மூலம் (title), அல்லது சொத்துரிமை ஆகியவற்றை நிர்ணயம் செய்தல் ஆகும்;

(k) "பொறுப்புரிமை அமைப்பு" (trust) என்பது மற்ற எந்த சட்டக் கட்டுப்பாட்டினையும் (legal obligation) உள்ளடக்கியதாகும்.

58-C சட்டத்திற்கு முரணாக பெற்றடைந்த சொத்துக்களை வைத்திருத்தலை தடை செய்தல் (Prohibition of holding illegally acquired property)

(1) இந்த அத்தியாயம் அமலுக்கு வந்த தேதியிலிருந்து, இந்த அத்தியாயம் யாருக்கு பொருந்துகிறதோ அவர் தானோ அல்லது தனது சார்பாக வேறு எவர் மூலமாகவோ சட்டத்திற்கு முரணாகப் பெற்றடைந்த சொத்துக்களை வைத்திருப்பது சட்டத்திற்கு ஏற்புடையதாகாது.

(2) உட்பிரிவு (1) க்கு முரணாக சொத்துக்களை எந்த நபராவது வைத்திருப்பாரேயானால், அத்தகைய சொத்தானது இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டிருப்பவைகளின்படி மாநில அரசிற்கு பறிமுதல் செய்யப்படுவதற்கு உட்பட்டதாகும்.

இருப்பினும் இந்தச் சட்டம் யாருக்கு பொருந்துகிறதோ, அவர் மீது வன உயிரினங்களைச் சட்டத்திற்கு முரணாக வேட்டையாடியதாகவோ அல்லது வன உயிரினங்கள் மற்றும் அதன் பொருட்களின் சட்ட முரண்பட்ட வர்த்தகத்தில் ஈடுபட்டதாகவோ குற்றம் சுமத்தப்பட்ட தேதியிலிருந்து ஆறு வருடத்திற்கு முன்பே அவர் அச்சொத்துக்களை பெற்றடைந்திருந்தால் அந்தச் சொத்துக்களை இந்த அத்தியாயத்தின் கீழ் பறிமுதல் (Forfeiture) செய்தல் கூடாது.

58-D தக்க அதிகாரி (Competent authority)

மாநில அரசு பணித்திடும் (direct) அத்தகைய நபர்கள் அல்லது அத்தகைய பிரிவுகளைச் சேர்ந்த நபர்கள் சம்பந்தமாக, இந்த அத்தியாயத்தின் கீழான தக்க அதிகாரியின் (Competent authority) அலுவல்களை நிறைவேற்றிட தலைமை வனப்பாதுகாவலர் (Chief Conservator of Forests) படி நிலைக்கு குறையாத ஒரு அலுவலருக்கு, அரசிதழில் பிரசுரிக்கப்படும் ஒரு ஆணையின் மூலம் மாநில அரசு அதிகாரமளிக்கலாம்.

58-E சட்டத்திற்கு முரணாக பெற்றடைந்த சொத்துக்களை அடையாளம் காணல் (Identifying illegally acquired property)

(1) மைய அரசினாலோ அல்லது நேர்வுக்கேற்றவாறு மாநில அரசினாலோ அதிகாரமளிக்கப்படும் காவல்துறை துணைத் தலைவரின் (டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்) படி நிலைக்கு குறையாத அலுவலர் ஒருவர், ஏதாகிலும் ஒரு நபர் சட்ட முரணாக சொத்துக்களைப் பெற்றடைந்திருக்கிறார் என்பது பற்றிய

குறையீட்டினை (complaint) தக்க அதிகாரியிடமிருந்து (competent authority) வரப்பெற்ற உடனேயே அத்தகைய நபரால் சட்ட முரணாக பெற்றடையப்பட்ட சொத்துக்களை தேடி அடையாளம் காணபதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

(2) உட்பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்பதானது ஒரு நபர், இடம், சொத்து (property), சொத்திருப்பு (assets), ஆவணங்கள் மற்றும் வங்கி அல்லது நிதி நிறுவனங்களின் கணக்குப் புத்தகங்கள் பற்றிய விசாரணை (inquiry), புலனாய்வு (investigation) அல்லது அளவை (survey) அல்லது இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட மற்ற எந்த ஒரு தேவையான நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாகும்.

(3) உட்பிரிவில் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை, புலனாய்வு அல்லது அளவைகளை, தக்க அதிகாரியின் வழிகாட்டுதல் மற்றும் நெறியுறுத்தல்களின் (directions) படிதான் உட்பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

58-F சட்ட முரணாக பெற்றடைந்த சொத்துக்களை கைப்பற்றுதல் (seizure) அல்லது முடக்கி வைத்தல் (freezing)

பிரிவு 58 - E ன் கீழ் விசாரணையோ அல்லது புலனாய்வோ நடத்தும் எந்த ஒரு அலுவலரும், அத்தகைய விசாரணை அல்லது புலனாய்வு சம்பந்தப்பட்ட சொத்துக்கள் சட்டத்திற்கு முரணாக பெற்றடையப்பட்டது எனவும் அத்தகைய சொத்துக்கள் மறைத்து வைக்கப்படலாம் எனவோ, உரிமை மாற்றம் (Transfer) செய்யப்படலாம் எனவோ அல்லது இந்த அத்தியாயத்தின் கீழ் அச்சொத்துக்களை பறிமுதல் (forfeiture) செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சீர்குலைந்து போகச் செய்யும் விதத்தில் அச்சொத்துக்கள் கையாளப்படலாம் எனவோ, காரணங்களின் அடிப்படையில் நம்பும்பொழுது, அத்தகைய சொத்துக்களை கைப்பற்றுவதற்கு (seizure) ஆணையிடலாம். சொத்துக்களை கைப்பற்றுவது நடைமுறை சாத்தியமில்லாத பொழுது அத்தகைய சொத்தினை, ஆணை வழங்கும் அலுவலர் அல்லது தக்க அதிகாரியின் (competent authority) முன் அனுமதியின்றி உரிமை மாற்றம் செய்யவோ (transfer) அல்லது வேறுவிதமாக கையாளவோ கூடாது என அத்தகைய அலுவலர் ஆணையிடலாம். ஆணையின் நகலை சம்பந்தப்பட்ட நபருக்கு சார்வு செய்யப்பட்டாகவும் வேண்டும்.

கூடவே அத்தகைய ஆணையின் நகலை ஆணை பிறப்பிக்கப்பட்ட நாற்பத்தி எட்டு மணி நேரத்திற்குள் தக்க அதிகாரிக்கும் அனுப்பப்பட்டாக வேண்டும்.

(2) உட்பிரிவு (1)ன் கீழ் பிறப்பிக்கப்படும் எந்த ஒரு ஆணையும் அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் தக்க அதிகாரியின் ஆணையின் மூலம் உறுதி (confirm) செய்யப்படவில்லையானால் அந்த ஆணை செயலற்றுப் போகும்.

விளக்கம் (Explanation) : இந்த பிரிவின் குறிநோக்கத்தைப் (purpose) பொறுத்தமட்டில் "சொத்துரிமை மாற்றம்" (transfer of property) என்பது, அளிப்படை (disposition), உடமை மாற்றம் (conveyance), மீளா மாற்றுரிமை (assignment), அறுதியளிப்பு (settlement), உடமை ஒப்படைப்பு (delivery), பட்டுவாடா (payment) அல்லது மற்ற எந்த ஒரு வகையான பராதீனமும் (alienation) என பொருள் கொள்ளப்படுவதோடு இவற்றின் பொதுவியல் திறனை (generality) ஒரு வரம்பிற்குள் கட்டுப்படுத்தாமல் கீழ்கண்டவற்றையும் உள்ளடக்கியதாகும்.

(a) சொத்தின் பொறுப்புரிமை அமைப்பு (Trust) ஒன்றை ஏற்படுத்துதல்.

(b) சொத்து சம்பந்தமாக குத்தகை, அடைமானம், பற்றுப் பொறுப்பு (charge), வசதியுரிமை / புழங்குவுரிமை (easment), உரிமம், ஏலுரிமை / அதிகாரய் (power), கூட்டாண்மை (partnership) அல்லது சொத்தில் அக்கறை (interest in the property) ஆகியவற்றை வழங்கல் (grant) அல்லது ஏற்படுத்துதல் (creation);

(c) சொத்தின் உரிமையாளர் அல்லாமல் சொத்தின் ஏலுரிமைப் பெற்ற வேறு ஒருவர் சொத்தின் அளிப்படையினை, (disposition) ஏலுரிமைப் பெற்றவரைத் தவிர வேறு ஒருவரின் நலச் சார்பாக நிர்ணயிக்கும் வகையில் தனது அதிகாரத்தை செயல்படுத்துதல்;

(d) தனது சொத்தின் மதிப்பை நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ குறைத்து வேறு ஒரு நபரின் சொத்தின் மதிப்பினை உயர்த்தும் எண்ணத்துடன் ஒரு நபர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்.

58-G இந்த அத்தியாயத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் மேலாண்மை (Management of properties seized or forefeited under the chapter)

(1) ஒரு ஆட்சியாளரின் (administrator) பணிகளை நிறைவேற்றிட அரசு தேவையெனக் கருதும் எண்ணிக்கையில் வனப்பாதுகாவலர் படிநிலைக்கு குறையாத தனது அலுவலர்களை மாநில அரசு, அரசிதழில் பிரசுரிக்கப்படும் ஆணை மூலம், நியமனம் செய்யலாம்.

(2) பிரிவு 58-F உட்பிரிவு (1)ன் கீழும் பிரிவு 58-Iன் கீழும் பிறப்பிக்கப்படும் ஆணைக்கு சம்பந்தப்பட்ட சொத்தினை ஆட்சியாளர் தன்வசம் பெற்று, வகுத்தமைக்கப்படும் (prescribed) விதத்திலும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு மேலாண்மை செய்ய வேண்டும்.

(3) மாநில அரசுக்கு பறிமுதல் செய்யப்படும் சொத்தினை முடிவுக்கு கொண்டு வர (to dispose) மாநில அரசு வழங்கும் நெறியுறுத்தல்படியான (directions) நடவடிக்கைகளையும் ஆட்சியாளர் மேற்கொள்ள வேண்டும்.

58 - H சொத்தினை பறிமுதல் செய்வதற்கான அறிவிப்பு (Notice of forefeiture of property)

(1) இந்த அத்தியாயம் யாருக்கு பொருந்துகிறதோ அந்த நபரிடம் இருக்கும் சொத்து அல்லது அந்த நபர் வேறு ஒருவர் மூலமாக வைத்திருக்கும் சொத்து அல்லது அந்த நபரின் சார்பாக வேறு ஒருவர் வைத்திருக்கும் சொத்துகளின் மதிப்பு மற்றும் அந்த நபரின் வருமானம் (income), சம்பாத்தியம் (earnings) அல்லது சொத்திருப்பு (assets) ஆகியவற்றின் தெரிந்த மூலதாரம் (source) மற்றும் இந்தச் சட்டப் பிரிவு 58-Eன் கீழ் புலனாய்வு செய்த அதிகாரியின் அறிக்கையின் விளைவாக பெறப்பட்ட தகவல் ஏதாகிலும் அல்லது பொருட்கள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, எழுத்து மூலமாக பதிவு செய்யக் கூடிய காரணங்களின் அடிப்படையில், இதில் சொல்லப்பட்ட சொத்துக்கள் ஏதாகிலும் அல்லது அனைத்தும் சட்ட முரணாகப் பெற்றடைந்த சொத்துக்கள் என தக்க அதிகாரி (competent authority) நம்பினால், அத்தகைய சொத்துக்கள் ஏதாகிலும் அல்லது அனைத்தும் இந்த அத்தியாயத்தின் கீழ் சட்ட முரணாகப் பெற்றடைந்த சொத்துக்கள் என அறிவித்து மாநில அரசுக்கு ஏன் பறிமுதல் செய்யக்கூடாது என்பதற்கு 30 நாட்களுக்குள் காரணம் காட்டும்படியும் அத்தகைய காரணங்களுக்கு ஆதாரமாக எந்த வருமானம், சம்பாத்தியம் அல்லது சொத்திருப்பிலிருந்து அத்தகைய சொத்துக்கள் பெற்றடையப்பட்டதோ அந்த வருமானம், சம்பாத்தியம் அல்லது சொத்திருப்புகளுக்கான மூலாதாரம் (source), சான்றுகள் / சாட்சிகள் மற்றும் தொடர்புடைய தகவல்கள் மற்றும் விபரங்கள் ஆகியவற்றை சமர்ப்பிக்கும்படியும் கேட்டு சொத்துக்குரிய நபருக்கு (இனிமேல் பாதிக்கப்பட்ட நபர் எனக் குறிப்பிடப்படுவார்) அறிவிப்பு (notice to show cause) வழங்கலாம்.

(2) பிரிவு 1ன் கீழ் ஒருவருக்கு வழங்கப்படும் அறிவிப்பில் சொத்துக்கள் ஏதும் அவர் சார்பாக வேறு ஒரு நபர் வைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தால், அறிவிப்பின் ஒரு நகலை அத்தகைய வேறு நபருக்கும் சார்வு செய்யப்பட வேண்டும்.

58-I சில இனங்களில் சொத்துக்களை பறிமுதல் செய்தல் (forfeiture)

(1) பிரிவு 58-Hன் கீழ் வழங்கப்பட்ட காரணங்கேட்பு அறிவிப்பிற்கு பெறப்பட்ட விளக்கத்தினையும் தன் முன் உள்ள (சான்று) பொருட்களையும் பரிசீலித்தப் பிறகும், பாதிக்கப்பட்ட நபருக்கும் பாதிக்கப்பட்ட நபர் வேறு ஒரு நபர் மூலமாக சொத்துக்களை வைத்திருக்கும் நிகழ்வுகளில் அத்தகைய வேறு நபருக்கும் அவர் சொல்வதை கேட்பதற்கு உரிய வாய்ப்பை அளித்தப் பிறகும் (reasonable opportunity of being heard) கேள்விக்குரிய சொத்துக்கள் ஏதாகிலுமோ அல்லது அனைத்துமே சட்ட முரணாகப் பெற்றடைந்த சொத்துக்களா என்ற கேள்வியின் மீதான தனது ஆய்வு முடிவினை (findings) தக்க அதிகாரி ஆணையின் மூலம் பதிவு செய்ய வேண்டும். வரம்புரையாக (provided that), பாதிக்கப்பட்ட நபர் (பாதிக்கப்பட்ட நபர் வேறு ஒரு நபர் மூலமாக சொத்துக்களை வைத்திருக்கும்

நிகழ்வுகளில் அத்தகைய வேறு நபர்) தக்க அதிகாரியின் முன்பு நேரில் வராமலோ அல்லது காரணங்கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட 30 நாட்களுக்குள் தனது வழக்கினை எடுத்துரைக்காமலோ போனால், எதிர் தரப்பின் பங்கெடுப்பின்றியே, (exparte) தன் முன்னிலையில் உள்ள சான்றுகள் மற்றும் சாட்சிகள் அடிப்படையில் தன்னுடைய முடிவுகளை (findings) பதிவு செய்ய தக்க அதிகாரி முனையலாம்.

(2) காரணங்கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் சில சட்ட முரணாகப் பெற்றடைந்த சொத்துக்கள் தான் என தக்க அதிகாரி திருப்தியடைந்து, ஆனால் அத்தகைய சட்ட முரணாகப் பெற்றடைந்த சொத்துக்களை குறிப்பிட்டு அடையாளம் காணமுடியாத நிகழ்வுகளில் தன்னுடைய ஓர்ந்த உளத்தேர்வின்படி (to the best of its judgement) சட்ட முரணாக பெற்றடையப்பட்ட சொத்துக்கள் இவை இவை எனக் குறிப்பிட்டு தனது முடிவினை (findings) சட்ட உட்பிரிவு 1ன் கீழ் 90 நாட்களுக்குள் தக்க அதிகாரி பதிவு செய்வது சட்டபூர்வமானதேயாகும்.

(3) சட்ட முரணாகப் பெற்றடைந்த சொத்துக்கள் என இந்தச் சட்டப் பிரிவின் கீழ் தக்க அதிகாரி தனது முடிவுகளைப் பதிவு செய்யும் நேர்வுகளில், அத்தகைய சொத்துக்கள், இந்த அத்தியாயத்தின் கீழ் கூறப்பட்டுள்ளவைகளுக்குட்பட்டு, அனைத்து வில்லங்கங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டு மாநில அரசுக்கு பறிமுதல் செய்யப்பட்டது என தக்க அதிகாரி சாற்றல் (declare) ச் செய்ய வேண்டும்.

(4) பிரிவு 58-Hன் கீழ் வழங்கப்பட்ட காரணம் கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் சட்ட முரணாகப் பெற்றடையப்பட்டவையல்ல எனவும் அவை இந்தச் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்படுவதற்குட்பட்டவையல்ல எனவும் பாதிக்கப்பட்ட நபர் நிரூபிக்கும் நேர்வுகளில், வழங்கப்பட்ட அறிவிப்பு (notice) திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் கைப்பற்றப்பட்ட சொத்துக்களும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

(5) ஒரு கம்பெனியின் பங்குகள் இந்த அத்தியாயத்தின் கீழ் மாநில அரசுக்குப் பறிமுதல் செய்யப்படும்பொழுது, 1956 வருடத்தில் (1 of 1956) கம்பெனி சட்டத்திலோ அல்லது கம்பெனியின் விதிமுறைகளிலோ (articles of association) என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும், பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளின் உரிமை மாற்றம் பெற்றவராக (transferee) மாநில அரசினை உடனடியாக அந்த கம்பெனி பதிவு செய்ய வேண்டும்.

58 – J மெய்ப்பிக்கும் பாடு (Burden of proof)

இந்த அத்தியாயத்தின் கீழ் நடைபெறும் எந்த நடவடிக்கைகளிலும் (proceedings), பிரிவு 58 – H ன் கீழ் சார்வு செய்யப்பட்ட காரணங்கேட்பு

அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட எந்த சொத்தும் சட்ட முரணாக பெற்றடையப்பட்டதல்ல என்பதனை மெய்ப்பிக்கும் கடமை பாதிக்கப்பட்ட நபரையேச் சாரும்.

58 – K பறிமுதலுக்கு பதிலாக அபராதம் (Fine in lieu of forfeiture) :

சொத்தினை மாநில அரசுக்கு பறிமுதல் செய்து பிரிவு 58-I ன் கீழ் தக்க அதிகாரி சாற்றல் செய்யும் (declare) எந்த நிகழ்விலாவது, சட்ட முரணாகப் பெற்றடையப்பட்ட சொத்தின் ஒரு பகுதியின் மூலாதாரம் (source) மட்டும் தக்க அதிகாரி திருப்தியடையும் வகையில் மெய்ப்பிக்கப்-படாமலிருந்தால், சொத்தினை பறிமுதல் செய்வதற்கு பதிலாக சொத்தின் அந்த பகுதியின் சந்தை மதிப்பினை அபராதமாக செலுத்தும் வாய்ப்பினை பாதிக்கப்பட்ட நபருக்கு வழங்கி தக்க அதிகாரி ஆணை பிறப்பிக்கலாம்.

(2) உட்பிரிவு 1ன் கீழ் அபராதம் விதித்து ஆணை பிறப்பிப்பதற்கு முன்பு பாதிக்கப்பட்ட நபர் தனது தரப்பினை எடுத்துரைக்க அவருக்கு உரிய வாய்ப்பு வழங்கப்பட்டாக வேண்டும்.

(3) உட்பிரிவு 1ன் கீழ் விதிக்கப்பட்ட அபராதத் தொகையினை அனுமதிக்கப்பட்ட காலகெடுவிற்குள் ஒரு நபர் செலுத்திவிட்டால் பிரிவு 58-I ன் கீழ் வழங்கிய பறிமுதல் சாற்றலை (declaration of forfeiture) விலக்கிக் கொண்டு தக்க அதிகாரி ஆணை பிறப்பிக்கலாம். அவ்வாறான ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன் அத்தகைய சொத்துக்கள் விடுவிக்கப்பட்ட நிலையினை அடையும்

58–L சில பொறுப்புரிமை அமைப்புச் சொத்துக்கள் சம்பந்தமான நெறிமுறைகள் (Procedure in relation to certain properties).

பிரிவு 58 – B சட்டக் கூறு (b) உட்கூறு (VI) ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர் ஒருவர் சம்பந்தப்பட்ட நேர்வில், தக்க அதிகாரி தனக்கு கிடைத்துள்ள தகவல் மற்றும் (சான்று) பொருட்கள் அடிப்படையிலும் எழுத்து மூலமாக பதிவு செய்யக் கூடிய காரணங்கள் அடிப்படையிலும், பொறுப்புரிமையில் வைத்திருக்கப்பட்டிருக்கும் (held in trust) எந்த சொத்தாகிலும் சட்ட முரணாக பெற்றடையப்பட்டது என்று நம்பும் பட்சத்தில், பொறுப்புரிமை அமைப்பாளருக்கோ (author of trust) அல்லது எந்தச் சொத்திருப்பிலிருந்து (asset) பொறுப்புரிமை அமைப்போ (trust) அல்லது பொறுப்புரிமையரோ (trustee) அத்தகைய சொத்துக்களை வாங்கியதோ அந்த சொத்திருப்பினை கொடையாக கொடுத்தவருக்கோ அறிவிப்பில் (notice) குறிப்பிடப்பட்ட 30 நாட்களுக்குள் எந்த சொத்திருப்பிலிருந்து அல்லது பணத்திலிருந்து அத்தகைய சொத்துக்கள் வாங்கப்பட்டதோ அந்த சொத்திருப்பு அல்லது பணத்திற்கான மூலாதாரத்தையோ (source) அல்லது பொறுப்புரிமை அமைப்பிற்குக் கொடையாக கொடுக்கப்பட்ட பணம் அல்லது மற்ற சொத்திருப்பு-களுக்கான மூலாதாரத்தையோ விளக்கும்படி கேட்டு தக்க அதிகாரி அறிவிப்பு வழங்கலாம். அத்தகைய அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையிலிருந்து அது பிரிவு

58-Hன் கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பாக கொள்ளப்பட்டு அதன்படி இந்த அத்தியாயத்தின் வகையங்கள் (provisions) அனைத்தும் பொருந்துறச் (apply) செய்யப்படும்.

விளக்கம் .. இந்தப் பிரிவின் குறி நோக்கத்தில் (for the purpose of this section) பொறுப்புரிமையில் வைத்திருக்கும் (held in trust) சட்ட முரணாகப் பெற்றடைந்த சொத்துக்கள் கீழ்கண்டவைகளையும் உள்ளடங்கியதாகும்.

(1) பொறுப்புரிமை அமைப்பாளர் (author of the trust) அல்லது பொறுப்புரிமை அமைப்பிற்கு (trust) சொத்தினை கொடையாக கொடுத்தவர் அந்த சொத்துக்களை தொடர்ந்து தன்னுடையதாகவே வைத்திருந்திருந்தால் அவை சட்ட முரணாகப் பெற்றடைந்த சொத்தாக கருதப்பட்டிருக்க வேண்டிய சொத்துக்கள்.

(2) ஒருவர் பொறுப்புரிமை அமைப்பிற்குக் கொடையாகக் கொடுத்த சொத்திருப்பினை அவரே வைத்திருந்து அதிலிருந்து அவர் சொத்துக்கள் வாங்கியிருந்து அந்த சொத்துக்கள் சட்ட முரணாகப் பெற்றடைந்த சொத்தாக கருதியிருக்க வேண்டியிருந்தால் அத்தகைய கொடை சொத்திருப்பின் மூலமாக பொறுப்புரிமை அமைப்பு பெற்றடைந்த சொத்துக்களும் இந்த பிரிவில் உள்ளடங்கும்.

58 - M சில சொத்துரிமை மாற்றங்கள் முற்றிலும் செல்லாததாகும் (certain transfers to be null and void)

பிரிவு 58 - F. ன் உட்பிரிவு 1 ன் கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகோ அல்லது பிரிவு 58 - H அல்லது பிரிவு 58 - L ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்ட பிறகோ அத்தகைய ஆணையிலோ அல்லது அறிவிப்பிலோ குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் உரிமை மாற்றம் செய்யப்பட்டால், அத்தகையச் சொத்துரிமை மாற்றம் இந்த அத்தியாயத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொறுத்த வரையில் புறந்தள்ளப்படுவதோடு (ignored), அத்தகைய சொத்து பிரிவு 58 - I ன் கீழ் மாநில அரசிற்கு பறிமுதல் செய்யப்படும்பொழுது, அத்தகைய சொத்துரிமை மாற்றம் முற்றிலும் செல்லத்தகாததாகக் கொள்ளப்படும்.

58 - N. பறிமுதலுக்கு பதிலாக அபராதம் (Fine in lieu of forefeiture)

பிரிவு 58 - F, 58 - I, பிரிவு 58 - K ன் உட்பிரிவு 1 அல்லது பிரிவு 58 - L. ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு எதிராக கொடுக்கப்படும் மேல் முறையீடுகளை விசாரிப்பதற்கென ஒரு தலைவரையும் மாநில அரசு சரியெனக் கருதுகின்ற எண்ணிக்கையில் உறுப்பினர்களையும் (மாநில அரசின் முதன்மை செயலர் தகுதி நிலைக்கு குறையாத அதிகாரிகள்) கொண்ட "பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களுக்கான மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் (Appellate tribunal for forfeited property) என்று அழைக்கப்படும் ஒரு மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தை (appellate tribunal) அமைத்து மாநில அரசு தனது அரசிதழில் அறிவிப்பு வெளியிடலாம்.

2. மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் ஒரு உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருப்பவராகவோ அல்லது இருந்தவராகவோ அல்லது அதற்கு தகுதியுடையவராகவோ இருக்க வேண்டும்.

3. தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மற்றும் நிபந்தனைகள் (terms & conditions) வகுத்தமைக்கப்படுவதற்கேற்ப (such as may be prescribed) இருக்கும்.

58.O. மேல்முறையீடுகள் (Appeals)

(1) பிரிவு 58.F, பிரிவு 58 – I, பிரிவு 58 – K ன் உட்பிரிவு (1) அல்லது பிரிவு 58- L ன் கீழ் தக்க அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் மூலம் குறையுற்றவர் எவரும் (any aggrieved person) அத்தகைய ஆணை தனக்கு சார்வு செய்யப்பட்ட நாற்பத்தி ஐந்து நாட்களுக்குள் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்திடம் மேல் முறையீடு செய்து கொள்ளலாம். இருப்பினும் மேல்முறையீடு தாரர், உரிய கால கெடுவிற்குள் மேல் முறையீடு செய்வதிலிருந்து போதிய காரணங்களினால் தடுக்கப்பட்டிருக்கிறார் என மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் திருப்தியடைந்தால், நாற்பத்தி ஐந்து நாட்கள் கெடுவிற்குப் பிறகும் - ஆனால் அறுபது நாட்களுக்கு மிகாமல் - செய்யும் மேல் முறையீட்டினை நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

(2) உட்பிரிவு 1 ன் கீழ் மேல்முறையீடு பெறப்பட்ட உடன், மேல் முறையீடு தாரர் விரும்பும் பட்சத்தில் அவர் தரப்பினைக் கேட்க அவருக்கு ஒரு வாய்ப்பு வழங்கிய பிறகும், தனக்குச் சரியெனத் தோன்றும் மேல் விசாரணையினை மேற்கொண்ட பிறகும் மேல்முறையீடு மூலம் எதிர்க்கப்படும் ஆணையினை உறுதி செய்தோ மாற்றியமைத்தோ அல்லது தள்ளுபடி செய்தோ மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் ஆணை வழங்கலாம்.

(3) தனது நடவடிக்கை வழி முறைகளை (Procedure) மேல் முறையீட்டுத் தீர்ப்பாயமே ஒழுங்குமுறை படுத்திக் கொள்ளலாம்.

(4) மேல்முறையீட்டுத் தரப்பினர் (a party to appeal) ஒருவரோ அல்லது அவர் சார்பாக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஒரு நபரோ மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் சம்பந்தப்பட்ட பதிவுருகள் (records) மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்து அவற்றின் சான்றிடப்பட்ட நகல்களைப் பெற்றுக் கொள்வதற்கு, மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு மனு செய்து அதற்கென விதிக்கப்படும் கட்டணத்தையும் செலுத்தும் பட்சத்தில் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் அதனை அனுமதிக்கலாம்.

58-P. விவரணத்தில் உள்ள பிழைக்காக அறிவிப்பு அல்லது ஆணை செல்லாததாகாது. (Notice or order not to be invalid for error in description)

இந்த அத்தியாத்தின் கீழ் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பு, செய்யப்பட்ட சாற்று (declaration) மற்றும் வழங்கப்பட்ட ஆணை இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள

சொத்து அல்லது நபர் பற்றிய விவரணத்தில் (description) பிழை இருந்தாலும் அந்த விவரணத்தைக் கொண்டு அந்த சொத்தையோ, நபரையோ அடையாளம் காண முடிந்தால், விவரணத்தில் உள்ள பிழையினைக் காரணமாகக் கொண்டு அறிவிப்பையோ, சாற்றலையோ அல்லது ஆணையினையோ செல்லாததாகக் கொள்ளக் கூடாது.

58-Q. ஆள்வரைத் தடை அல்லது அதிகாரவரம்புத் தடை (Bar of jurisdiction)

இந்த அத்தியாயத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணை அல்லது செய்யப்படும் சாற்றல் (declaration made) எவற்றையும் இந்த அத்தியாயத்தில் சொல்லியுள்ள படியல்லாமல் வேறு வகையில் எதிர்த்து மேல் முறையீடு செய்ய இயலாது. இந்த அத்தியாத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் அல்லது ஒரு தக்க அதிகாரியால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்களில் எந்த ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்கும் (civil court) அதிகார வரம்பு கிடையாது என்பதோடு இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட இருக்கின்ற எந்த ஒரு நடவடிக்கை சம்பந்தமாகவும் எந்த நீதிமன்றமும், அதிகாரியும் இடைக்காலத் தடை எதையும் விதிக்கக் கூடாது.

58–R. தக்க அதிகாரிக்கும் மேல்முறையீட்டுத் தீர்பாயத்திற்கும் உள்ள உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் (competent authority and Appellate Tribunal to have powers of civil court)

1908ம் வருடத்திய (5 of 1908) உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டத்தின் கீழ் ஒரு வழக்கினை விசாரிக்கும் பொழுது ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்குக் கீழ்கண்ட இனங்களில் உள்ள அனைத்து அதிகாரங்களும் ' தக்க அதிகாரிக்கும் ' மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கும் இருக்கும்.

(a) எந்த ஒரு நபரையும் அழைப்பாணை மூலம் வரவழைத்தும் அவரின் வருகையை கட்டாயப்படுத்தியும் அவரை மெய்யுறுதி பேரிலும் விசாரித்தல் (examining on oath);

(b) ஆவணங்களை கண்டுபிடிக்கும்படியும், தாக்கல் செய்யும்படியும் கேட்டுக் கொள்ளல் ;

(c) ஆணையுறுதியின் (affidavit) பேரில் சாட்சியங்களை (evidence) பெறுதல் ;

(d) எந்த ஒரு பொது பதிவுருவினையும் (Public record) அல்லது அதன் நகலினையும் எந்த ஒரு நீதிமன்றத்திலிருந்தும், அலுவலகத்திலிருந்தும் கேட்டுப் பெறுதல் ;

(e) சாட்சியங்களையும் ஆவணங்களையும் ஆய்வு செய்ய பணிப்பு ஆணை (commission) வழங்கல்;

(f) வகுத்தமைக்கப்படும் (may be prescribed) மற்ற எந்த ஒரு பொருட்கூறு (matter) பற்றியும்.

58–S. தக்க அதிகாரிக்கு தகவல் அளித்தல் (Information to competent authority)

(1) அப்போதைக்கு செல்லாற்றத்திலுள்ள (being in force) வேறு எந்தச் சட்டத்திலும் எது எவ்வாறு இருப்பினும், இந்த அத்தியாயத்தின் குறி நோக்கத்திற்கு (purpose) உபயோகமானதாகவோ அல்லது சம்பந்தமுடையதாகவோ இருக்கும் என தக்க அதிகாரி கருதினால் அத்தகைய நபர் சம்மந்தப்பட்ட பிரச்சினை (point) அல்லது பொருட்கூறு (matter) பற்றி தகவல்களைக் கொடுக்கும்படி மைய, மாநில அரசுகள் மற்றும் உள்ளக குழும (local body) அலுவலர்கள் அல்லது அதிகாரம் படைத்தோர் (authority) எவரையும் கோரும் அதிகாரம் தக்க அதிகாரிக்கு உண்டு.

(2) பிரிவு 58 -Tல் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலரும், அவரது கணிப்பு படி, இந்த அத்தியாயத்தின குறி நோக்கத்தில், ஒரு தகவல் தக்க அதிகாரிக்கு உபயோகமானதாக இருக்கும் எனக் கருதினால், தன்னிடமுள்ள அத்தகைய தகவலை அவரே தன்னிச்சையாக (suo motu) தக்க அதிகாரிக்குக் கொடுக்கலாம்.

58-T. குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் ஆட்சியாளருக்கும் தக்க அதிகாரிக்கும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கும் உதவ வேண்டும் (certain officers to assist Administrator, competent authority and Appellate Tribunal)

இந்த அத்தியாயத்தின் கீழ் நடைபெறும் எந்த ஒரு நடவடிக்கையின் குறி நோக்கங்களுக்காகவும் பிரிவு 58 - G ன் கீழ் நியமனம் செய்யப்படும் ஆட்சியாளர், தக்க அதிகாரி மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு கீழ்கண்ட அலுவலர்கள் தேவையான உதவிகளை வழங்க வேண்டும்.

(a) காவல்துறை அலுவலர்கள் ;

(b) மாநில வனத்துறை அலுவலர்கள்;

(c) மைய அரசின் எகனாமிக் இன்ட்டெலிஜென்ஸ் பீரோ அலுவலர்கள்;

(d) ரெவினியூ இன்ட்டெலிஜென்ஸ் இயக்குநரக அலுவலர்கள்;

(e) மாநில அரசினால் அரசிதழில் அறிவிக்கை செய்யப்படுவதின் மூலம் குறிப்பிடப்படும் மற்ற வேறு அலுவலர்கள்.

58-U உடமையை எடுத்துக் கொள்ளும் அதிகாரம் (power to take possession)

(1) இந்த அத்தியாயத்தின் கீழ் எந்த ஒரு சொத்தினையாவது மாநில அரசுக்கு பறிமுதல் செய்து சாற்றல் (declaration) செய்யப்பட்டுள்ள நிகழ்விலும் அல்லது பிரிவு 58 - Kன் உட்பிரிவு (1)ன் கீழ் விதிக்கப்பட்ட அபராதத் தொகையினை உட்பிரிவு 3ன் கீழ் அனுமதிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பாதிக்கப்பட்ட நபர் செலுத்தத் தவறும் நிகழ்விலும் பிரிவு 58 - G ன் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆட்சியாளர் வசமோ அல்லது இதற்காக அதிகாரமளிக்கப்படும் வேறு எந்த நபர் வசமோ, ஆணை பிறப்பிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள், சொத்தினை சரண் செய்யும்படியோ அல்லது ஒப்படைக்கும்படியோ பாதிக்கப்பட்ட நபருக்கோ அல்லது அத்தகையச் சொத்தினைத் தனது உடமையில் வைத்திருக்கும் நபருக்கோ தக்க அதிகாரி ஆணையிடலாம்.

(2) உட்பிரிவு 1ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைப்படி செயல்பட எந்த ஒரு நபராவது மறுத்தாலோ அல்லது தவறினாலோ ஆட்சியாளரே (administrator) சொத்தின் உடமையினை (possession) ஏற்றுக் கொள்ளலாம். இதற்காகத் தேவைப்படும் வன் முறை தாக்குதலையும் (force) அவர் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

(3) உட்பிரிவு - 2ல் எது எவ்வாறு இருப்பினும் உட்பிரிவு - 1ல் சொல்லப்பட்ட சொத்தின் உடமையினை எடுத்துக் கொள்ளும் குறி நோக்கத்திற்காக (purpose) காவல்துறையின் எந்த ஒரு அதிகாரியின் உதவியினையும் ஆட்சியாளர் கோரலாம். அத்தகைய நிகழ்வில் ஆட்சியாளர் வேண்டுகோள்படி செயல்படுவது அப்படி கேட்டுக் கொள்ளப்பட்ட காவல்துறை அலுவலரின் கடமையாகும்.

58 - V பிழைகளை சரி செய்தல் (Rectification of mistakes)

பதிவுறுவில் (record) வெளிப்படையாகத் தெரியும் பிழைகளைச் சரி செய்யும் கண்ணோட்டத்தில், தக்க அதிகாரியோ அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமோ தன்னால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை, அவ்வாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் திருத்தியமைக்கலாம் (can be amended).

இருப்பினும் அத்தகைய பிழை திருத்தம் எந்த ஒரு நபரையாவது குந்தகமான முறையில் பாதிப்புக்குள்ளாக்குமானால் அதே சமயம் அத்தகைய பிழை எழுத்துப் பிழையால் (clerical error) ஏற்பட்டதாக இல்லாமலிருந்தால், அத்தகைய நபர் தனது தரப்பினை எடுத்துரைக்க அவருக்கு உரிய வாய்ப்பினை வழங்காமல் அத்தகைய பிழை திருத்தத்தை மேற்கொள்ளக் கூடாது.

58-W. மற்றச் சட்டங்களின் கீழ் எட்டப்படும் முடிவுகள் இந்த அத்தியாயத்தின் கீழான நடவடிக்கைகளின் இறுதியான முடிவாகாது (findings of other laws not conclusive of proceedings under this chapter)

வேறு எந்த ஒரு சட்டத்தின் கீழும் எந்த அலுவலராலும் அல்லது அதிகாரியாலும் எடுக்கப்படும் முடிவுகள் இந்த அத்தியாயத்தின் கீழான நடவடிக்கைகளின் குறிநோக்கத்திற்கான முடிவாகாது.

58-X. அறிவிப்புகளையும் ஆணைகளையும் சார்வு செய்தல் (Service of notices and orders)

இந்த அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட எந்த ஒரு அறிவிப்பும் அல்லது ஆணையும் கீழ்கண்ட முறையில் சார்வு செய்யப்பட வேண்டும்.

(a) அறிவிப்பு (notice) அல்லது ஆணை (order) யாருக்கு சார்வு செய்யப்பட வேண்டுமோ அந்த நபருக்கு அல்லது அவரின் முகவருக்கு (agent) நேரில் வழங்கப்பட வேண்டும் (by tendering) அல்லது பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

(b) அறிவிப்பையோ அல்லது ஆணையினையோ சட்டக் கூறு (clause) (a) ல் சொல்லியுள்ளபடி சார்வு செய்ய முடியாமல் போனால், எந்த சொத்து சம்பந்தமாக அறிவிப்பு அல்லது ஆணை வழங்கப்பட்டுள்ளதோ அல்லது பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த சொத்தில் வெளிப்படையாக தெளிவாகத் தெரிகிற இடத்தில் ஒட்டி வைக்கலாம் அல்லது அறிவிப்பு ஆணை யாருக்கு சம்பந்தப்பட்டதோ அந்த நபர் கடைசியாக வசித்த அல்லது வியாபாரம் மேற்கொண்ட அல்லது ஆதாயத்திற்காக வேலை செய்ததாக தெரிய வருகின்ற வளாகத்தின் (கட்டிடம் வீடு-premises) வெளிப்படையாக தெளிவாகத் தெரிகின்ற பகுதியில் ஒட்டி வைக்கலாம்.

58 – Y. இந்த அத்தியாயத்தின் கீழ மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட சொத்தினை பெற்றடைந்தால் தண்டனை (Punishment for acquiring property in relation to which proceedings have taken under this chapter)

இந்த அத்தியாயத்தின் கீழ் நிலுவையிலிருக்கிற நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட சொத்தினை அந்த விபரம் தெரிந்திருந்தே எந்த நபராவது எந்த முறையிலாகிலும் பெற்றடைந்தால் அத்தகைய நபர் ஐந்தாண்டுகள் வரை சிறைத் தண்டனையுடன் ரூபாய் ஐம்பதாயிரம் வரையான அபராதத்துடன் தண்டிக்கப்படுவார்.

அத்தியாயம் VII
பல்பொருள் (MISCELLANEOUS)

59. அலுவலர்கள் பொது ஊழியர்கள் (officers to be public servants)

அத்தியாயம் II ல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு அலுவலரும், அத்தியாயம் IV – A ல் குறிப்பிடப்பட்டுள்ள தலைவர், உறுப்பினர்கள், உறுப்பினர் செயலாளர் மற்ற அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் வழங்குறப் பெற்ற (conferred) எந்த ஒரு அதிகாரத்தையும் செயல்படுத்துகின்ற ஒவ்வொரு அலுவலரும் இந்திய தண்டனைச் சட்டம் (45 of 1860) பிரிவு 21 ன் பொருளுக்குட்பட்டு ஒரு பொது ஊழியராக கொள்ளப்படல் வேண்டும்.

60. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு (Protection of action taken in good gaith)

(1) மைய மற்றும் மாநில அரசுகளின் எந்த ஒரு அலுவலர் அல்லது மற்றப் பணியாளரும் நல்லெண்ணத்தில் இந்தச் சட்டத்தின கீழ் செய்த அல்லது செய்ய உத்தேசித்த செய்கைக்காக அவருக்கு எதிராக உரிமை வழக்கோ (suit) குற்ற வழக்கீடோ (prosecution) அல்லது சட்ட நடவடிக்கையோ (legal proceeding) தொடுத்தல் கூடாது.

(2) இந்தச் சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்ய உத்தேசித்த செய்கையினால் ஏற்பட்ட அல்லது ஏற்படக் கூடிய சேதங்களுக்காக, மைய மற்றும் மாநில அரசுகள் அல்லது அவற்றின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிராக எந்த ஒரு உரிமை வழக்கோ அல்லது சட்ட நடவடிக்கையோ (legal proceeding) தொடுத்தல் கூடாது.

(3) இந்தச் சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்ய உத்தேசித்த செய்கைக்காக அத்தியாயம் IV – A ல் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பு (Central Zoo Authority) அதன் தலைவர், உறுப்பினர்கள், உறுப்பினர் செயலாளர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிராக எந்த ஒரு உரிமை வழக்கையோ (suit) அல்லது சட்ட நடவடிக்கையோ (legal proceeding) தொடுத்தல் கூடாது.

60 – A. வெகுமதி (Reward of persons)

(1) ஒரு நீதிமன்றத்தில் விதிக்கப்படும் தண்டனை அபராதமாக இருக்கும் பொழுதோ அல்லது தண்டனையின் ஒரு பகுதியாக அபராதம் விதிக்கப்படும் பொழுதோ, விதிக்கப்படும் அபராதத் தொகையில் ஐம்பது சதவீதத்திற்கு மிகாமல், குற்றத்தை கண்டுபிடிக்க அல்லது

குற்றவாளியை பிடிப்பதற்கு உதவியாக இருந்த நபருக்கு வெகுமதி வழங்கி தீர்ப்பு வழங்கும் போது நீதிமன்றம் ஆணையிடலாம்.

(2) பிரிவு 54ன் கீழ் ஒரு வழக்கு ராசிக் கட்டணம் விதிக்கப்பட்டு வழக்கினை மேல் நடத்தாமல் முடிவு செய்யப்படும் பொழுது, வழக்குத் தீர்வு உடன்பாட்டுத் தொகையாக (ராசிக் கட்டணம்) பெற்றுக் கொள்ளப்படும் தொகையிலிருந்து, அத்தொகையில் ஐம்பது சதவீதத்திற்கு மிகாமல், குற்றத்தை கண்டுபிடிக்க அல்லது குற்றவாளியை பிடிக்க உதவி புரிந்த நபருக்கு வகுத்தமைக்கப்படும் வழிமுறையில் வெகுமதியாக வழங்கி, வழக்கை ராசிக் கட்டணம் விதித்து முடிவு செய்யும் அலுவலர் ஆணை வழங்கலாம்.

60-B மாநில அரசினால் வெகுமதி வழங்கப்படல் (Reward by the State Government)

குற்றத்தை கண்டுபிடிக்க அல்லது குற்றவாளியை பிடிக்க உதவி புரியும் ஒரு நபருக்கு வகுத்தமைக்கப்படும் நிதியிலிருந்து வகுத்தமைக்கப்படும் வழி முறைகளில் ரூபாய் பத்தாயிரத்திற்கு மிகாமல் வெகுமதியாக வழங்கி ஆணையிட தலைமை வன உயிரினக் காப்பாளருக்கு மாநில அரசு அதிகாரமளிக்கலாம்.

61. பட்டியலில் உள்ள பதிவுகளை மாற்றும் அதிகாரம் (Power to alter entries in schedules)

1. மைய அரசு அவசியம் எனக் கருதும் பட்சத்தில் பட்டியலில் ஒரு பதிவை சேர்த்தோ, நீக்கியோ அல்லது பட்டியலின் ஒரு பகுதியிலிருந்து அதே பட்டியலின் வேறு பகுதிக்கு ஒரு பதிவை மாற்றியோ அல்லது ஒரு பட்டியலிலிருந்து வேறு பட்டியலுக்கு பதிவை மாற்றியோ அறிவிக்கை செய்யலாம்.

2. 2.10.1991 லிருந்து விட்டுவிடப்பட்டது (omitted)

3. உட்பிரிவு 1ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட பட்டியல் அதற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டதாக கொள்ளப்படல் வேண்டும். ஆனால் அத்தகைய ஒவ்வொரு மாற்றமும் அவ்வாறு மாற்றம் செய்வதற்கு முன்பு செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட எந்த செய்கைக்கும் குந்தகம் விளைவிக்காது.

4. 2.10.1991 லிருந்து விட்டு விடப்பட்டது (omitted)

62. சில விலங்குகள் தீங்கிழைப்பவை எனச் சாற்றுதல் (Declaration of certain animal to be vermin)

பட்டியல் I மற்றும் பட்டியல் II ல் சேர்க்கப்பட்டுள்ள வன விலங்குகளைத் தவிரவேறு எந்த வன விலங்கையும், ஒரு பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, தீங்கிழைப்பவை (vermin) என அறிவிக்கையின் (notification) மூலம் மத்திய அரசு சாற்றல் (delaration) செய்யலாம். அத்தகைய அறிவிக்கை அமலில் உள்ள காலம்

வரை அத்தகைய வனவிலங்கு பட்டியல் V ல் சேர்க்கப்பட்டுள்ளதாக கொள்ளப்படல் வேண்டும்.

63. மத்திய அரசின் விதிகள் இயற்றும் அதிகாரம் (power of Central Government to make rules)

1. கீழ்க்கண்ட பொருட்கூறுகள் (matters) அனைத்திற்கும் அல்லது எவற்றுக்கேனும் அறிவிக்கையின் மூலம் மத்திய அரசு விதிகளை இயற்றலாம். பொருட்கூறுகளின் பெயர்கள் வருமாறு.

(a) உரிமம் பெற்ற ஒருவர் பிரிவு 17 - F ன் கீழ் ஒரு குறிப்பிடப்பட்ட தாவரத்தை (spciefied plant) தனது உடமையிலோ அல்லது பாதுகாவலிலோ வைத்திருப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் இது சம்பந்தமான இதர பொருட்கூறுகள் (matters) ;

(a i) பிரிவு 5 – A யின் உட்பிரிவு (2) ன் கீழான பதவி வழி (members ex officio) உறுப்பினர்கள் தவிர மற்ற உறுப்பினர்களின் பதவிக் காலம், பதவிக் குண்டான நிபந்தனைகள் காலியிடங்களை நிரப்பும் வழிமுறைகள், தேசிய வாரியம் (Natinal Board) பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் உட்பிரிவு (3) ன் கீழ் உறுப்பினர்களின் படித்தொகைகள் (allowances) ;

(b) பிரிவு 38 – B ன் உட்பிரிவு (5) ன் கீழ் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் செயலாளர்களின் நியமனத்திற்கான நிபந்தனைகள், ஊதியம் மற்றும் படித்தொகைகள் (salaries and allowances) ;

(c) பிரிவு 38 – B ன் உட்பிரிவு (7) ன் கீழ் மத்திய மிருகக் காட்சி சாலைகளின் ஆணையத்தின் (Central Zoo Authority) அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பதவிகளுக்கான நிபந்தனைகள் ;

(d) பிரிவு 38 – B ன் உட்பிரிவு (4) ன் கீழ் மத்திய மிருகக் காட்சி சாலைகளின் ஆணையத்தின் வருடாந்திர கணக்குகள் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய வடிவம். ;

(e) பிரிவு 38 – F ன் கீழ் மத்திய மிருகக் காட்சி சாலைகளின் ஆணையத்தின் வருடாந்திர அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய வடிவம் மற்றும் கால நேரம். ;

(f) பிரிவு 38 – H ன் உட்பிரிவு (2) ன் கீழ் மத்திய மிருகக் காட்சி சாலைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்ப படிவம் மற்றும் அத்துடன் செலுத்தப்பட வேண்டிய கட்டணத் தொகை. ;

(g) பிரிவு 38 – H ன் உட்பிரிவு (4) ன் அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய தரநிலை (standard), தகுநிலை (norms) மற்றும் இதர பொருட் கூறுகள் (matters) ;

(h) பிரிவு 44 ன் உட்பிரிவு (2) ன் கீழ் செய்ய வேண்டிய சாற்றலின் (declaration) படிவம் (Form) ;

(i) பிரிவு 44 ன் உட்பிரிவு (4) ன் சட்டக் கூறு (b) ன் கீழ் வகுத்தமைக்கப்பட வேண்டிய பொருட்கூறுகள் (matters) ;

(j) பிரிவு 44 ன் சட்டக் கூறு (b) ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் முறை செயல்களை (transactions) கட்டுப்படுத்தும் நிபந்தகைள் மற்றும் காலவரையரணைகள் (terms and conditions) ;

(k) பிரிவு 55ன் சட்டக் கூறு (c) ன் கீழ் ஒரு நபர் அறிவிப்பு கொடுப்பதற்கான வழிமுறைகள் (manner) ;

(l) மத்திய அரசால் சாற்றல் செய்யப்படும் வன உயிரின உய்விடங்கள் மற்றும் தேசியப் பூங்காக்களுக்குப் பொருந்துகின்ற பிரிவு 64 ன் உட்பிரிவு (2) ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட் கூறுகள் (matters) ;

(2) இந்தப் பிரிவின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அனைத்தும் அவைகள் இயற்றப்பட்ட உடனேயே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் பாராளுமன்றத்தின் இரு அவைகளின் முன்பும், அவைகள் மொத்தம் முப்பது நாட்கள் அமர்வில் (in session) இருக்கும் பொழுது வைக்கப்பட வேண்டும். முப்பது நாட்கள் என்பது ஒரு அமர்விலோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்ச்சியான அமர்வுகளையோ கொண்டிருக்கலாம். இந்த அமர்வு அல்லது அமர்வுகளுக்கு அடுத்து வரும் அமர்வு முடிவுக்கு வருவதற்கு முன்பே இரு அவைகளும் விதிகளில் ஏதேனும் மாறுதல் செய்யவோ அல்லது அத்தகைய விதியே கூடாது என முடிவு செய்தால் அதன் பிறகு அப்படி மாற்றியமைக்கப்பட்ட வடிவில் விதிகள் அமலுக்கு வரும். விதியே கூடாது என முடிவு செய்யும் பட்சத்தில் அத்தகைய விதிகள் அமலுக்கு வராது. இருப்பினும் அத்தகைய மாற்றங்கள் (modifications) அல்லது செல்லாநிலை (annulment) அவற்றுக்கு முன்பிருந்த விதிகளின்படி செய்யப்பட்ட செய்கைகளுக்கு குந்தகம் விளைவிக்காது.

64. மாநில அரசின் விதிகள் இயற்றும் அதிகாரம் (power of State Government to make rules)

(1) இந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவைகளை (ஷரத்துக்ளை) செயல்படுத்துவதற்காக பிரிவு 63 ன் வரம்பிற்குள் (purview) வராத மற்ற பொருட்

கூறுகள் (matters) சம்பந்தமான விதிகளை அறிவிக்கையின் மூலம் மாநில அரசும் இயற்றலாம்.

(2) மேலே சொல்லப்பட்ட அதிகாரங்களின் பொதுவியலுக்கு (generality) குந்தகம் இல்லாமல் குறிப்பாக கீழ்க்கண்ட பொருட் கூறுகள் அனைத்திற்கும் அல்லது எவற்றுக்கேனும் உரிய விதிகளை இயற்றலாம்.

(a) பிரிவு 6 ன் உட்பிரிவு (2) ன் கீழ், பதவி வழி உறுப்பினர்களைத் தவிர மற்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் மற்றும் நிபந்தனைகள், காலியிடங்களை நிரப்பும் வழிமுறைகள் மற்றும் வாரியத்தால் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் ;

(b) பிரிவு 6 ன் உட்பிரிவு (3) ல் குறிப்பிடப்பட்டுள்ள படித்தொகைகள் (allowances) ;

(c) இந்தச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்க வேண்டிய, செய்ய வேண்டிய, வழங்க வேண்டிய விண்ணப்பங்கள், சான்றிதழ்கள், கோரிக்கைகள் (claim), சாற்றல்கள் (declaration), உரிமங்கள், அனுமதிச் சீட்டுகள் (permit), பதிவு செய்தல் (registration), அறிக்கை (return) அல்லது மற்ற ஆவணங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள். ;

(d) இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய உரிமங்களுக்கான நிபந்தனைகள்;

(d d) நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்ய அலுவலர்களுக்கு அதிகாரமளிக்கும் நிபந்தனைகள் ;

(e) உரிமம் பெற்றவர்கள் வைத்திருக்க வேண்டிய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய வன விலங்குகள் (பிடிக்கப்பட்டவை மற்றும் கொல்லப்பட்டவை) பற்றிய பதிவு விபரங்கள் (Particulars of record) ;

(ee) கால்நடைகளுக்கு மேற்கொள்ள வேண்டிய நோய் தடுப்பு (immunisation measures) நடவடிக்கைகள் குறித்த வழிமுறைகள் (manner) ;

(f) பிடியில் இருக்கும் விலங்குகள் (captive animals), இறைச்சி, விலங்கு பொருட்கள், ட்ரோபிகள், பதப்படுத்தப்படாத ட்ரோபிகள் ஆகியவை சம்பந்தமான உடைமை (possession), உரிமை மாற்றம் (transfer) மற்றும் விற்பனை ஆகியவற்றை நெறிமுறைப் படுத்துதல். ;

(g) விலங்குடல் பதப்படுத்துதலை (taxidermy) நெறிமுறைப் படுத்துதல்;

(ga) பிரிவு 58-G ன் உட்பிரிவு (2) ன் கீழ் ஆட்சியாளர் (administrator) சொத்துக்களைப் பெற்று மேலாண்மை செய்வது சம்பந்தமான வழி முறைகள் மற்றும் நிபந்தனைகள் ;

(gb) பிரிவு 58-N ன் உட்பிரிவு (3) ன் கீழ் தலைவர் மற்றும் மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் பதவிக்கான நிபந்தனைகள் ;

(gc) பிரிவு 60–B ன் கீழ் வழங்கப்படும் வெகுமதி எந்தத் தொகையிலிருந்து வழங்கப்படும் என்பது குறித்தும் மற்றும் வெகுமதி வழங்க நெறிமுறைகள் குறித்தும் ;

(h) இந்தச் சட்டத்தின் கீழ் வகுத்தமைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்தமைக்கக் கூடிய மற்ற பிற பொருட் கூறுகள் ;

65. பழங்குடி மக்களின் உரிமை பாதுகாப்பு (Rights of scheduled tribes to be protected)

1967 ம் வருடம் ஏப்ரல் மாதம் 28 ம் தேதிய அந்தமான் நிக்கோபார் அரசின் சிறப்பு அரசிதழில் பக்கம் 1 லிருந்து 6 வரை பிரசுரிக்கப்பட்டுள்ள அந்தமான நிக்கோபார் நிர்வாகத்தின் அறிவிக்கை எண். 40/67/F, No. G.635, வால்யூம் III மூலம் நிக்கோபார் தீவின் பழங்குடி மக்களுக்கு அந்தமான் நிக்கோபார் யூனியன் பிரதேசத்தின் எல்லைக்குள் வழங்கப்பட்டுள்ள வேட்டையாடும் உரிமையினை இந்தச் சட்டத்தில் உள்ள எவையும் பாதிக்காது.

66. சட்ட நீக்கமும் விலக்கலும் (Repeal and savings)

(1) இந்தச் சட்டத்தில் உள்ள எந்த பொருள் கூறு (matter) குறித்தாகிலும் ஒரு மாநிலத்தில் அமலில் இருக்கிற மற்ற எந்தச் சட்டமும், இந்தச் சட்டம் அமலுக்கு வந்ததிலிருந்து, அத்தகையச் சட்டமோ அல்லது அத்தகையச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள ஷரத்து எதுவுமோ, எந்த மட்டில் இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு ஒத்துப் போகிறதோ அல்லது முரண்படுகிறதோ அந்த அளவு மட்டில் அந்தச் சட்டம் சட்ட நீக்கம் செய்யப்படுகிறது (Stand repealed) இருப்பினும் அத்தகையச் சட்ட நீக்கம்

(i) சட்ட நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின் முந்தைய செயல்பாட்டினையோ (previous operation) அல்லது அச்சட்டத்தின் கீழ் முறைப்படி செய்யப்பட்ட (duly done) எந்தச் செயலையுமோ அல்லது ஏற்பட்ட பாதிப்பையோ பாதிக்காது.

(ii) சட்ட நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின் கீழ் பெற்றடைந்த (acquired) சேர்ந்தடைந்த (accrued) அல்லது ஏற்பட்ட (incurred) உரிமை (right), சிறப்புரிமை (privilage), பொறுப்படைவு (liability) ஆகிய எவற்றையும் பாதிக்காது.

(iii) சட்ட நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின் கீழ் புரிந்த குற்றத்திற்காக விதிக்கப்பட்ட தண்டப்பணம் (penalty) தண்ட இழப்பு (forfeiture) அல்லது தண்டனை (punishment) ஆகிய எவற்றையும் பாதிக்காது.

(iv) மேலே சொல்லப்பட்ட உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு, பொறுப்படைவு, தண்டப்பணம், தண்ட இழப்பு அல்லது தண்டனை சம்பந்தப்பட்ட புலனாய்வு, சட்ட நடவடிக்கை (legal proceedings) அல்லது தீர்வழி (remedy) எவற்றையும் பாதிக்காது என்பது மட்டுமல்லாது அத்தகையச் சட்டம், சட்ட நீக்கம் செய்யப்படாதது போலவே கருதி, அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கை, அல்லது தீர்வழியை தொடங்கி/ஏற்படுத்தி அல்லது தொடரச் செய்து அல்லது அமல் படுத்தி அத்தகைய தண்டப் பணம், தண்ட இழப்பு அல்லது தண்டனையையும் விதிக்கலாம்.

(2) அத்தகைய சட்ட நிக்கம் இருந்த போதிலும் -

(a) அப்படிச் சட்ட நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எந்தச் செயலும் அல்லது எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கையும் (வழங்கப்பட்ட அறிவிக்கை - notifiction, ஆணை, சான்றிதழ், அறிவிப்பு அல்லது பற்றுச் சீட்டு ஆகியவைகளையும் சேர்த்து) இந்தச் சட்டத்தின் ஷரத்துகளுக்கு முரண்பாடாக இல்லையெனில், அத்தகையச் செயல் செய்யப்பட்ட பொழுதோ அல்லது நடவடிக்கை எடுத்தபொழுதோ இந்தச் சட்டம் அமலில் இருந்ததாகவும், இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஏதாவது ஒரு செய்கையின் மூலமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலமோ இந்தச் சட்டம் நீக்கறவு (superseded) செய்யப்பட்டாலன்றி அல்லது நீக்கறவு செய்யப்படும் வரை அந்தச் சட்டம் தொடர்ந்து அமலில் இருப்பது போலவே கருதி, இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள நேரிணைவகைமுறை (corresponding provisions) ஷரத்துக்களின் கீழ் செய்யப்பட்டதாகவோ நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படும்.

(b) இந்தச் சட்டம் அமலுக்கு வருவதற்கு ஒட்டி முன்பிருந்த, சட்ட நீக்கம் செய்யப்பட்ட எந்த ஒருச் சட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட்ட உரிமங்கள், இந்தச் சட்டத்தின் நேரிணை வகைமுறை (corresponding provisions) ஷரத்துகளுக்குட்பட்டு வழங்கப்பட்டவையாக கொள்ளப்பட்டு, காலாவதியாகாமல் எஞ்சியுள்ள அதனுடைய காலகெடு முடியும் வரை தொடர்ந்து அமலில் இருக்கும்.

(3) சந்தேகங்களை நீக்குவதற்காக ஈங்கிதனால் (hereby) சாற்றப்படுவது யாதெனில் உட்பிரிவு - 1 ன் கீழ் சட்ட நீக்கம் செய்யப்பட்ட எந்த ஒரு சட்டத்தின் கீழும் மாநில அரசினால் சாற்றல் செய்யப்பட்ட வன உயிரின உய்விடம் அல்லது தேசியப்பூங்கா எதுவும் நேர்விற்கேற்றவாறு மாநில அரசால் இந்தச் சட்டத்தின் கீழ் சாற்றல் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுவதோடு அத்தகைய தேசியப் பூங்கா எவற்றிலும் உள்ள நிலத்தின் மீதோ, அதனுள்ளோ உள்ள உரிமைகள் இந்தச் சட்டம் அமலுக்கு வந்த பொழுதோ அல்லது அமலுக்கு வருவதற்கு முன்போ, நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின் கீழ் அற்றுப் போகச் (extinguished) செய்யப்படாமல் இருந்தால் அத்தகைய உரிமைகள் இந்தச் சட்டத்தில் உள்ள ஷரத்துக்கள் படி அற்று போகச் செய்யப்படும்.

(4) சந்தேகங்களை நீக்குவதற்காக ஈங்கிதனால் மேற்கொண்டும் சாற்றப்படுவது யாதெனில், 1991 ஆம் வருடத்திய வன விலங்கு பாதுகாப்பு திருத்தச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு பிரிவு 18 ன் கீழ் சாற்றல் செய்யப்பட்டு பிரிவு 19 முதல் 25 வரை (இரண்டு பிரிவுகளையும் உள்ளடக்கும்) உள்ள ஷரத்துக்கள் எவற்றின் கீழாவது, 1991 திருத்தச் சட்டம் அமலுக்கு வந்த தேதியில் நடவடிக்கை நிலுவையிலிருந்தால் அத்தகைய வன உயிரின உய்விடத்தில் அடங்கிய ஒதுக்குக் காடுகள் அல்லது கரையாட்சிக் கடல் பகுதி (territorial waters) பிரிவு 26 - A ன் கீழ் சாற்றல் செய்யப்பட்ட வன உயிரின உய்விடமாக கொள்ளப்படும்.

*****

SCHEDULE 1
(See Sections 2,8,9,11,40,41,43,48,51,61 and 62)
PART 1
MAMMALS (பாலூட்டிகள்)

[1] [1. Andaman Wild Pig (Sus sorofa and amanewsis)]

[2] [1-A. Bharal (Ovisnahura)]

[2] [1-B. Binturong (Arctictis binturong)]

2. Black Buck (Antelope cervicapra) (வெளிமான்)

[2] [2-A.   ]

3. Brow-antlered Deer or Thamin (Cervus eldi)

[3] [3-A. Himalayan Brown Bear (Ursus arctos)]

[3] [3-B. Capped Langur (Presbytis pileatus)]

4. Caracal (Felis caracal)

[2] [4-A. Catecean specils]

5. Cheetah (Acinonyxjubatus) (வேங்கைப்புலி)

[4] [5-A. Chinese pangolin (Mainis pentadactyla)]

[5] [5-B. Chinkara or Indian Gazelle (Gazella gazella bennetti)]

6. Clouded Leopard (Neofelis nebulosa)

[6] [6-A. Crab-eating Macaque (Macaca irus umbrosa)]

[6] [6-B. Desert Cat (Felis libyca)]

[7] [6-C. Desert fox (Vulpes bucapus)]

---

1. Vide Notification No.FJ-11012/31/76 FRY (WL), dated 5th October, 1977,published in the Gazette of India, Ext., Pt.II, S.3 (i), and p.385, dated 5th October 1977.
2. Vide Notification No.FL-28/78 FRY (WL), dated 9th September, 1980,published in the Gazette of India,Ext.,Pt.II,S.3(i),p.431,dated 2nd October,1980.
3. Vide Notification No.S.O.859 (E), dated 24th November, 1986,published in the Gazette of India, Ext., Pt. II, S.3 (i), dated 24th November 1986.
4. Vide Notification No.FJ-11012/31/76 FRY (WL), dated 29th August, 1977,published in the Gazette of India, Ext., Pt.II, S.3 (i), p.333, dated 3rd September, 1977.
5. Vide Notification No.FJ-11012/31/76 FRY (WL), dated 5th October, 1977,published in the Gazette of India, Ext., Pt.II, .3(i), p.385, dated 5th October, 1977.
6. Vide Notification No.FL-28/78 FRY (WL), dated 9th September, 1980,published in the Gazette of India, Ext., Pt.II, S.3(i), p.431, dated 2nd October, 1980.
7. Vide Notification No.S.O.859(E), dated 24th November, 1986,published in the Gazette of India, Ext., Pt.II, S.3(i), dated 24th November,1986.

7. Dugong (Dugong dugon) (கடற்பசு)

[6] [7-A. Ermine (Mustele erminea)]8. Fishing Cat (Felis viverrina)

8. Fishing Cat (Feli viverina)

[5] [8-A. Four-horned antelope (Tetraceros wuadricornis)]

[7] [8-B.]

[7] [8-C.]

[7] [8-D. Gangetic dolphin (Platanista gangetica)]

[7] [8-E. Gaur or Indian Bison (Bos gaurus) (பைசன்)]

9. Golden Cat (Felis temmincki)

10. Golden langur (presbytis geei)

[8] [10-A. Giant squirrel (Ratufa macroura)]

[8] [10-B. Himalayan Ibex (Capra ibex)]

[8] [10-C. Himalayan Tahr (Hemitragus jemlahicus)]

11. Hispid Hare (Caprolagus hispidus)

[8] [11-A. Hog badger (Arconyx collaris)]

12. Hoolock (Hylobates hoolock)

[7] [12-A.]

[8] [12-B. Indian Elephant (Elephas maximus) (இந்திய யாணை]

13. Indian Lion (Panthera Leo persica) (இந்திய சிங்கம்)

14. Indian Wild Ass (Equus hemionus khur)

[8] [15. Indian Wolf (Canis lupas pallipes)]

16. Kashmir Stag (Cervus elaphus hanglu)

[6] [16-A. Leaf Monkey (presbytis phayrei)]

[6] [16-B. Leopard or Panther (Panthera pardus) (சிறுத்தை)]

17. Leopard Cat (Felis bengalensis)

18. Lesser or Red Panda (Ailurus fulgens)

19. Lion-Tailed Macaque (Macaca silenus) (சிங்கவால் குரங்கு)

---

5. Vide Notification No.FJ-11012/31/76 FRY (WL), dated 5th October, 1977, published in the Gazette of India, Ext., Pt.II, .3(i), p.385, dated 5th October, 1977.
6. Vide Notification No.FL-28/78 FRY (WL), dated 9th September, 1980,published in the Gazette of India, Ext., Pt.II, S.3(i), p.431, dated 2nd October, 1980.
7. Vide Notification No.S.O.859(E), dated 24th November, 1986,published in the Gazette of India, Ext., Pt.II, S.3(i), dated 24th November,1986.
8. Vide Notification No.FJ-11012/31/76 FRY (WL), dated 29th August, 1977,published in the Gazette of India, Ext., Pt.II, S.3(i), p.333, dated 3rd September,1977.

20. Loris (Loris tardigradus) (தேவாங்கு)

[7] [20-A.Little Indian Porpoise (Neomeris phocenoides) (கடல் பன்றி/பார்ஓங்கி)]

21. Lynx (Felix Lynx isabellinus)

22. Malabar Civet (Viverra megaspila) (மலபார் புனுகுபூனை)

[9] [22-A. Malay or Sun Bear (Helarctos malayanus)]

23. Marbled Cat (Felis marmorata)

24. Markhor (Capra falconeri)

[10] [24-A. Mouse Deer (Tragulus meminna) (சருகு மான்)]

25. Musk Deer (Moschus moschiferus) (கஸ்தூரி மான்)

[11] [25-A. Nilgiri Lungur (Presbytis johni) (கருமந்தி)]

[11] [25-B. Nilgiri Tahr (Hemitragus hylocrius) (வரையாடு)]

26. Nyan or Great Tibetan sheep (Ovis ammon hodgsoni)

27. Pallas's Cat (Felis manul)

28. Pangolin (Manis crassicaudata) (எறும்பு தின்னி)

29. Pygmy Hog (Sus salvanius)

[9] [29-A. Ratel (Mellivora capensis)]

30. Rhinoceros (Rhinoceros unicornis)

31. Rusty spotted Cat (Felis rubiginosa)

[12] [31-A. Serow (Capricornis sumatraensis)]

[11] [31-B. Clawless Otter (Aonyx cinerea) (நீர் நாய்)]

[11] [31-C. Sloth Bear (Melursus ursinus) (கரடி)]

32. Slow Loris (Nycticebus couceang)

